இலவச வெளியீடு: GERMANY , ENGLAND ஆனி. Juni. 2015
Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy
மணி 65
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A






# ஆறாவது அறிவு ஆபத்தானதா ?

## ஐந்தறிவே அற்புதமா ?

சேவியர்



## சரியான சிகிச்சைதானா?

## இன்னொரு மருத்துவ அபிப்பிராயம்

யேர்மனி
கம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய
தேர்த்திருவிழா
21.06.2015
ஞாயிற்றுக்கிழமை



கேன்ஸின் உயர்ந்த விருதை வென்ற
முதல் ஈழத் தமிழர் படம்
"தீபன்"


T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்
Hamm ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய
தேர்த்திருவிழாவில் (21.06.2015)
மாபெரும் மலிவு விற்பனை!
விபரம் பக்கம் 27

Gopara Gnanam
Hamm ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய
தேர்த்திருவிழாவில் (21.06.2015)
மாபெரும் மலிவு விற்பனை!
மேலதிக
விபரம் 6ம் பக்கம்
Tel: 0231/5450028- Mob: 01713306542

Frankfurt:Tel:069 97 693 374
SARAVANAA BHAVAN

Ceylon Imbiss Page.32
Tel:0231 7252859

Lucky Fly page.29
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696



S.K.Silks & Gold Paraadise
Tel:0231 9501 647
Mr.P.Sritharan.
Proprietor
என்றும்
புதியது
அழகின்
இரகசியம்
அது.
Hamm ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய
தேர்த்திருவிழாவை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தில்
மாபெரும் மலிவு விற்பனை!
01.06.2015 முதல் 20.06.2015 வரை
ஆலய வணிகவளாகத்தில் 21.06.2015 (தேர்த் திருவிழா)
மாபெரும் மலிவு விற்பனை
Adler str 33 - 44137 Dortmund
மேலதிக விபரம் 4ம் பக்கம்



மாபெரும்
ராஜமுத்திரை








# யேர்மன் பெருந்தெருவில் வாகனத்துடன் மோதிய செயற்கைப் பறவை!

இன்று சுதந்திரம் என்ற பெயரில் பல விளைாட்டுப் பொருட்களுக்கும் வணிகப்பொருட்களுக்கும் அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

தாயத்தில் தெருவில், ஒழுங்கையில் விளையாடிய, விளையாட்டுக்கள் ஞாபகம் வருகின்றதா? கிட்டிப்புள்ளு, மாபிள் அடித்தல்,கிளிதட்டு, குளம் கரை, அஸ்போல், கள்ளன் பொலிஸ், தென்னம் மட்டை கிரிக்கட், வளையம் உருட்டல். இப்படி அடிக்கிக்கொண்டே போகலாம். அங்கு தெருவில் மக்கள் நடமாட்டமும் சைக்கிள் ஓட்டுவோரும்தான் வருவார்கள். எங்கோ எப்போ சிலதரம் ஒழுங்கைக்குள் கார் வரும். அதுவும் யாருக்கும் பிள்ளை பிறக்கப்போகுது என்றால். அல்லது வருத்தம் என்றால், அதற்கும் மீறிவருவது என்றால், பொம்பிளை பார்க்க. அதுவும் முதல் தடவை தான் காரில் வருவார்கள். பின்பு பொருந்திவிட்டது என்றால் மாப்பிளை சைக்கிளில் வந்து போவர்.

எனவே அங்கு தெருவில் விளையாடுவதற்கு பெரிதாகத் தடை ஏதும் இருக்கவில்லை. இன்று அப்படி அல்ல தாயகத்தில் சரி, வெளிநாடுகளில் சரி தெருக்கள் எல்லாம் வாகனங்கள். கமரா இல்லை என்று தெரிந்தால் போதும் காரின் வேகம் கட்டுக்கு அடங்காது.

சிறு தெருக்களில் சிறுவர் விளையாடும் இடம் என்று போட்டிருந்தால், சிறுவர்களையும் கண்ணில் கண்டால், அத்தோடு அவ்விடத்தில் ஏற்கனவே விரைவாக ஓடி, அபராதம் கட்டி இருந்தால் மட்டும் 30 இல் வாகனம் ஓடும்.

இந்த நிலையில் விளையாட்டுப்பொருட்களும் வணிகப் பொருட்களும் சில சமயம் தெருக்களை நிறைத்து நிற்கும். சில கண்ணுக்கு வெளிச்சமகாத் தெரியும், சில திடு திடுப்பென வரும். சிறுவர்கள் ஓடும் அந்தப்பலகை சக்கரத்துடன் எத்தனை வேகமாக வந்து பாய்வார்கள். எதும் முடக்கு என்றால் அவர்கள் வருவது அவர்களுக்கே தெரியாது என்றால்! வாகனம் ஓட்டுபவர்க்கு எப்படித் தெரியும்.

காலில் சில்லுப் பூட்டிக்கொண்டு ஓடும் சிறுவர்கள் மறுபுறம். தீடீர் என பந்து ஒன்று தெருவுக்குவரும் சாரதி பிறேக் அமத்துவதற்கு முன் மூன்று நாலு சிறுவர்கள் பந்தை எடுக்க முந்திக்கொண்டு தெருவில் பாய்வார்கள். இந்த ஆபத்தை எல்லாம் தவிர்ப்பதற்காக, பிள்ளைகள் விளையாடும் தெரு இது என ஒரு பலகை தொடக்கத்தில் போடப்பட்டிருக்கும்.அதனால் அவதானமாக எதிர்பார்ப் புடன் சாரதி வருவார்.

இங்கு இப்போ யேர்மனியில் கடந்த 21.05.2015 போகும் Bochum நகர் பெருந்தெருவில் நடந்ததைப்பாருங்கள். ஒரு 47 வயதுடைய பேர்லின் நகரத்தைச் சேர்ந்த சாரதி டோட்மூண்ட் நோக்கி செல்கையில், தீடிர் என ஆங்கிலப்படத்தில் பறவைகள் கார் கண்ணாடியில் மோதி காறைக்கவிழ்ப்பது போல், பயங்கர ஒலியுடன் ஒரு பறைவை மோதியதுபோல் ஒரு வெள்ளை உருவம் மோதியது. முன் கண்ணாடி சிதறியது. அதிர்ச்சியடைந்த சாரதி காரை நிறுத்திப்பார்த்தால் காரின் பின்புறத்தில்


**மாதவி**

ஒரு வெள்ளை இயந்திரம் பறக்கும் டிரோன் (Drone) விழுந்து கிடந்தது. இந்த விமானம் (சங்கரின் நண்பன் படத்தில் ஒரு மாணவன் கண்டுபிடிப்பதுபோல் காட்டுவார்கள் அதுதான்) திருமண வீடுகளில் மாப்பிளை பொம்பிளை வரும் போது, மேலே பறந்து அவர்களை மேலிருந்து படம் பிடித்துக்கொண்டு வரும் பறக்கும் டிரோன (drone) அது தான்.




போலீஸ் இத்தாக்குதலுக்கு பின்னணியில் யார் என்று கண்டுபிடிக்க வேண்டும் எனத் தீவிர விசாரணை நடத்திவருவதாகக் கூறினார். Westdeutsche பத்திரிகை இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் மிகவும் பொதுவானதாக முடியும் என்று தெரிவித்துள்ளது.

இந்த பறக்கும் டிரோன் பறப்பதற்கு அனுமதி பெறவேண்டும். 2014 ஆம் ஆண்டில், Münster டிரோன்களைச் பறக்க 220 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ப்பட்டன. 2013 இல் 50 மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால் வணிக பயன்பாட்டிற்கு மட்டுமே உகந்தவை இந்த அனுமதி. விளையாட்டுக்கு அல்ல. பெரும் தெருக்களில் குறுக்கே போகும் பாலங்களின் மேல் இருந்து கீழே வரும் வாகனங்களுக்கு கல் எறிந்துவிட்டு விபரீதத்தை இரசிக்கும் ஒரு கூட்டமும் வெளிநாடுகளில் உண்டு. இந்த பறக்கும் டிரோன் பெரும் தெருக்களில் பறப்பதற்கு தடை சட்டம் ஏற்கனவே உண்டு, என்பது குறிப்பிடத்தக்கது! இப்போது இந்த பறக்கும் டிரேன் மூலம் மேலும் சாரதிகள் அச்சத்துக்குளாகி உள்ளனர். விளையாட்டு வினைாக வந்து முடியாமல், இந்தச் செயற்கைப் பறவைகளை கண்டு பிடிப்பவர்கள் அதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடித்தே ஆகவேண்டும்.











வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
————————கவிஞர்.வி.க

ஓசை 225


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com



Company No: 8876276


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962



Vettimaniy has
no responsibility of
the contents of the
articles and
advertisements


# வித்தியாவின் படுகொலையின் செயற்பாடுகளில் தோல்வியடைந்த தமிழ்த் தலைமைகள்

-அ.நிக்ஸன்-

வித்தியாவின் படுகொலையின் செயற்பாடுகளில் தோல்வியடைந்த தமிழ்த் தலைமைகள் மக்களின் இயல்பான எழுச்சியை தடுப்பதற்கு ஊரில் உள்ள சண்டியர்களையும் ஆயுதக்குழுக்களையும் பயன் படுத்தி வன்முறையை தூண்டிவிட்ட பொலிஸார். பொலிஸரின் பாதுகாப்புடன் அரேங்கேறிய வித்தியா மீதான வன்புணர்ச்சியும் கொலையும்

-அ.நிக்ஸன்-

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் இடம்பெற்ற பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலையின் பின்னரான தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தலைமைகளின் செயற்பாடுகள் தோல்வியடைந்து விட்டன. வித்தியாவின் படுகொலையின் பின்னரான வன் முறைச் சம்பங்களின் பின்னணியில் பொலிஸாருக்கு தொடர்புகள் இருக்கலாம் எனவும் மக்களின் இயல்பான எழுச்சியை தடுப்பதற்கு, வன்முறைச் சம்பவங்களை தூண்டிவிவிடப்பட்டதாகவும் மக்கள் மத்தியில் சந்தே கங்கள் எழுந்துள்ளன.

வித்தியாவின் படுகொலை சாதாரண குற்றச் செயல் அல்ல. ஊரில் உள்ள இளைஞன் ஒருவன் காதலிக்க முற்பட்டு அல்லது காதலித்து ஏமாற்றப்பட்ட நிலையில் அந்த ஆத்திரத்தில் வன்புணர்ச்சியும் கொலையும் நடந்திருக்குமானால் 24 மணிநேரத்துக்கும் மேலாக குற்றவாளிகள் ஒரு இடத்தில் தங்கியிருந்து அவ்வாறான செயலில் ஈடுபட்டிருக்க முடியாது.

ஏனெனில் அவ்வாறான குற்றவாளிக்கு பாதுகாப்பு இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் வித்தியா கொலை செய்யப்பட்ட முறையை அவதானிக்கின்றபோது குற்றவாளிகளுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருக் கின்றது. குறைந்தது 24 மணிநேரம் வித்தியாவுடன் குற்றவாளிகள் தங்கியிருந்து வன்புணர்சியில் ஈடுபட் டுள்ளனர் தொலைபேசி அழைப்பின் மூலம் மேலும் பலரை அழைத்து வன்புணர்ச்சியில் ஈடுபட அனுமதித்திருக் கின்றனர்
கைது செய்யப்பட்ட ஒன்பது இளைஞர்களும் எந்த விதமான பதற்றமும் இன்றி பாதுகாப்பான முறையில் இந்த குற்றச் செயலை புரிந்திருக்கின்றனர் என்பதை பொலிஸாருக்கு அவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் ஊடாக அறிய முடிகின்றது. பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் பொலிஸார் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

பொலிஸாருக்கு தொடர்பில்லாமல் இந்த குற்றச் செயல் இடம்பெறவாய்ப்பில்லை என்றும் அவர் கூறியிருக்கின்றார் ஆகவே 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான அரசியல் சூழலில் தமிழ் மக்களின் உள்ளக முரண் பாடுகள் அவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய ஊர்ச் சண்டியர்கள் மற்றும் முன்னாள் ஆயுதக் குழுக்களை பயன்படுத்தி 60 ஆண்டுகால அரசியல் போராட்டத்தின் முக்கியத்துவத்தை மலினப்படுத்துகின்ற வேலைத் திட்டத்தில் பாதுகாப்புத் தரப்பின் ஈடுபடுகின்றனர் என்ற முடிவுக்கு வரலாம்.
வித்தியாவின் படுகொலையின் பின்னர் புங்குடுதீவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் மக்களின் உண்மையான எழுச்சியாகும். அதில் எந்த அரசியல் கட்சிகளின்



பங்களிப்பும் இல்லை. அல்லது அந்த ஆர்ப்பாட்டங்களை அரசியல் கட்சிகள் எற்பாடு செய்தன என்றும் கூற முடியாது. ஆகவே மக்களின் உண்மையான அந்த எழுச்சியை கண்டு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் தலைமைகள் அச்சமடைந்துவிட்டன.

அதனால்தான் புங்குதீவுக்குச் சென்று மக்களை சந்தித்து குற்றவாளிகளை கைது செய்தும் விடயத்தில் சில தமிழ் அரசியல்வாதிகள் ஈடுபட்டனர்

ஆனாலும் அவர்களுடைய செயற்பாடுகள் தோல் வியடைந்துவிட்டன. குற்றவாளிகளை பொதுமக்கள்தான் அடையாளம் காண்பித்தனர் அங்கு சென்ற அரசியல் வாதிகளினால் பொதுமக்களின் கேள்களுக்கு உரிய முறையில் பதிலளிக்க முடியவில்லை. அதேவேளை யாழ் நகரிலும் ஆர்ப்பாட்டங்கள் தொடர ஆரம்பித்தன. அந்த ஆர்ப்பாட்டங்கள் கூட மக்களின் இயல்பான எழுச்சிதான் ஆனால் நீதிமன்ற கட்டடத்திற்கு கல்லெறிந்து வீதியில் ரயர்கள் எரித்து இடையூறு விளைவித்தமை மக்கள் அல்ல.

அது பாதுகாப்புத் தரப்பினரால் திட்டமிடப்பட்ட முறையில் நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவம். ஏனெனில் வித்தியாவுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற மக்களின் போராட்டத்தை மலினப்படுத்தவும் மக்களை அச்சத் துக்கு உள்ளாக்கி இவ்வாறான ஆர்ப்பாட்டங்களில் எதிர்காலத்தில் ஈடுபடுவதை தவிர்க்கும் நோக்கிலும் அந்த வன்முறைச் சம்பவங்கள் தூண்டிவிடப் பட்டுள்ளன.

அரசாங்கமும் பாதுக்காப்புத் தரப்பும் இவ்வான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன என்பது தொடர்பான விழிப்புணர்வுகளை மக்களுக்கு எற்படுத்த வேண்டிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் அதன் தலைமையும் மக்கள் முன் செல்ல தயங்கு கின்றனர்.


Gopara Gnanam
Door to Door
பொதிச் சேவை
Germany-Sri-Lanka
35Kg 35€ - Colombo
35Kg 50€ பிற நகரங்கள்
Tel: 0231/5450028 Mob:01713306542
Rheinische Str. 81- 44137 Dortmund





உலகை வலம்வர
உற்றதுணை நாங்கள்!
Century Travels&Tours
website : www.centurytravels.de
Essan மாநகரில் கடந்த
மாசி மாதம் முதல்
எமது சேவை தொடர்கிறது.
எமது கிளைளை ஸ்தாபனத்தின்
முகவரி:
Steeler str 150
45139 Essen
பயணங்களை
இலகுவாக்க நம்மை நாடுங்கள்.
இலங்கை கடவுப்புத்தகம்
பெற்றுத்தரவும்
புதுப்பிக்கவும் உதவுவோம்.
Fax: 0231 5844665
இந்தியாவுக்கான
விசா பெற்றுத்
தரப்படும்
Rhenische Strasse 29
44137 Dortmund.Germany
email : info@centurytravels.de
Tel: 0231 58 96 557 /0231 55 74 319
Ram Nishanthan
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
017621682149

# எட்டு ஆண்டுகள் தவியாத் தவித்த ஜோதிகா!

திருமணத்துக்குப் பிறகு தனக்கு நடிக்கும் ஆசை இருந்தாலும் அதனை வெளியில் சொல்லாமல் எட்டு ஆண்டுகள் தவித்தாராம் ஜோதிகா. இதனை ஜோதிகாவின் கணவர் நடிகர் சூர்யாவே 27.05.2015 பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார். ஜோதிகா நடிப்பில் சமீபத்தில் வெளிவந்த '36 வயதினிலே" படம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக படக்குழுவினர் இன்று பத்திரிகையாளர் சந்தித்தனர். இந்த சந்திப்பில் ஜோதிகா, சூர்யா, இயக்குனர் ரோஷன் ஆண்ட்ரூஸ் உள்ளிட்ட படக் குழுவினர் கலந்துகொண்டனர்.

சூர்யா பேசும்போது, '36 வயதினிலே" படத்தில் ஜோதிகாவின் கணவராக நடித்திருக்கும் ரகுமான் கதாபாத்திரம் போல் நிஜவாழ்க்கையில் கணவர்கள் வாழக்கூடாது. தனது மனைவியின் ஆசைகளை கணவர் கேட்டு அறிந்துகொள்ளவேண்டும். அவர்களின் ஆசையை நிறைவேற்ற கணவர்கள் முன்வர வேண்டும்.

எட்டு ஆண்டுகள் தவிப்பு திருமணமாக கிட்டத்தட்ட 8 வருடங்களுக்கு பிறகுதான் ஜோதிகா நடித்திருக்கிறார். ஆரம்பத்திலேயே நடிக்கவேண்டும் என்ற ஆசை அவருக்குள்ளும் இருந்துள்ளது. ஆனால், அதை வெளிப்படையாக என்னிடம் கூற முடியாமல் தவித்திருக்கிறார்.

ஒருகட்டத்தில் அவருடைய ஆசையைத் தெரிந்துகொண்ட நான் அவரை வைத்து படம் எடுக்க முன்வந்தேன். இதேபோல், ஒவ்வொரு கணவர்மார்களும் தனது மனைவியின் ஆசைகளை தெரிந்துகொண்டு, அதை நிறைவேற்ற முன்வரவேண்டும்," என்றார்.





21.06.2015
ஞாயிற்றுக்கிழமை
கம் ஸ்ரீ காமாட்சி
அம்பாள் ஆலயத் தேர்த்
திருவிழாவை
முன்னிட்டு ஆலய வணிக
வளாகத்தில் எமது
ஸ்தாபனத்தின்

S.K.Silks& Gold Paraadise
மாபெரும் மலிவு விற்பனை!


நியூமொடல் சேலை யாவும் 3 சேலை வாங்கினால் 50€
2 சேலை வாங்கினால் 30€
மேலும் பஞ்சாபிகள் சேலைகள் யாவும் 15€ முதல் 45€ வரை


உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்



Tel:0231 9501 647
Adler str 33 - 44137 Dortmund



100% Satisfaction Guarantee



Specialised in Astro Palmist (Tamil)



ஸ்ரீ மலையாளம் பகவதி ஜோதிட நிலையம்
உலகப்புகழ் பெற்ற இந்திய ஜோதிடர்
பண்டித் பி.கே.குருஜி

உறவுச்சிக்கல் குடும்பச்சிக்கல் நிதிச்சிக்கல் காதல் மோதல்
குழந்தையில்லாப்பிரச்சினை வேலையில்லாப்பிரச்சினை
திருமணப்பிரச்சினை வியாபாரம் கண்திருஷ்டி மாந்திரீகம்
அனைத்துப்பிரச்சினைகளுக்கும். மைபோட்டுப்பார்த்து கண்டறிந்து
பரிகாரம் செய்து 100 வீதம் நம்பிக்கையுடன் பிரச்சினைக்க தீர்வுகாண
எங்கள் இல்லம் நாடிவாருங்கள்.
7 நாட்களும் காலை 9.00 மணி முதல் 2.00 மாலை வரை
பேசும்மொழி தமிழ் ஆங்கிலம் கிந்தி

Wilhelm Str.27
59067 Hamm

Tel:
0049 152 1675 8175
0049 152 1025 7807





ESTM Jewellery Dortmund

எங்கள் சேவை
- திருமண ஆபரணங்கள்
- ஓடர் நகைகள்
- திருத்த வேலைகள்
- தாலிக்குப் பொன்னுருக்குதல்
- காது மூக்குக்குத்துதல்

E.S.T

Our Service
- Wedding Jewellery
- Jewellery Order
- Quick Repair of Jewellery
- Wedding Rituals
- Ear and Nose piercing


பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்

ESTM Jewellery | Rheinische Str. 73a | 44137 Dortmund | Tel.: 0231 / 1899023 | Mobil: 01633642642



# கறுப்பு வெள்ளை வண்ண நினைவுகள்





## என்னைப் பிடித்தவரும் எனக்குப் பிடித்தவரும்

நேர்காணல்

## காசு இருக்கு என்று கமரா வாங்கப்படாது கலை இருக்கு என்று வாங்கவேண்டும்!

### புகைப்படக் கலைஞர் தாசன் ஸ்ரூடியோ சிவம்

உலகெங்கும் ஈழத்தமிழர்கள் தனித்துவத்துடன் வாழ்கின்றனர். அவர்களது ஒவ்வொரு செயலிலும் நமது முன்னவர்களது உழைப்பும் அர்ப்பணிப்பக்களும் ஏதோ ஒரு விதத்தில் அவர்களிடம் அணிவகுத்து நிற்பதும் முன்னவர்களை அடையாளப்படுத்துவதாகவும் உள்ளது. இது தவிர்க்கமுடியாத ஒரு உள்வாங்கல். இது கல்வியிலும் கலைகளிலும் இன்னும் அதிகமாகவே காணக்கூடியதாக இருக்கும்.

சிறந்த கலைஞர்களை பெற்ற நாடு நமது. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு அடையாளமாக இந்தக்கலைகள் இருந்துள்ளன. கலைஞர்களின் பெயர்களுக்கு முன்னால் அவர்களது கிராமமே தந்தையின் முதல் எழுத்துப்போல் முன்நிற்பதையும் காணலாம்.

உங்கள் வாழ்வில் நீங்கள் அறிந்த கலைஞர்களை ஒரு முறை நினைவு படுத்திப்பாருங்கள். அவர்களது பெயருக்குமுன்னால் நிற்பது எது என்பது புரியும். ஆனால் அப்படி ஒரு நிலை புலம்பெயர்ந்தவர்களது வாழ்வில் அவர்கள் வாழும் கிராமத்துப் பெயர்கள் அவர்களை அடையாளப்படுத்த விடுவது மிக மிகக்குறைவு. காரணம் அவர்களுக்கு நிலையான கிராமமோ நாடோ இல்லை. தாயகத்தில் தாய் போல் தாய்வீடு மாறுவது இல்லை. இங்கு தாயும் வீட்டில் இல்லை தந்தையும் வீட்டில் இல்லை. பின்பு தாய்வீடு எப்படி?

பத்திரிகை சஞ்சிகை அச்சுக்கலை ஓவியம் சிற்பம் நாடகம் புகைப்படக் கலை என்று ஒரு கிராமம் தனித்துவுமாகத் திகழ்ந்தது. அப்படி முத்திரை பதித்த கிராமம் குரும்பசிட்டி. அண்மையில் இரசிகமணி கனகசெந்தில் நாதனது புதல்வன் குகானந்தன் ஒரு நிகழ்வில் குறிப்பிட்டார் குரும்பசிட்டி பஸ் (770) ஊருக்கு வருவது கலைஞர்களை ஏற்றிக்கொண்டு செல்வதற்ககவே என்று.

இன்று குரும்பசிட்டி ஒரு கலைப்பொக்கிசம் என்று உணர்ந்தோ என்னவோ அதனை அதிபாதுகாப்பு வலயத்துக்குள் வைத்துள்ளார்கள்.

அந்தக்கிராமத்தில் பிறந்த புகைப்படக்கலைஞர்களில் ஒருவர் தாசன் ஸ்ரூடியோ சிவம். இவரது முழுப்பெயர் நா.சிதம்பரநாதன். தந்தையார் திரு க.நாகலிங்கம் அவர்கள் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியின் முன்னாள் கீழ்வகுப்பு மாணவர்களது தலைமை ஆசிரியராக பணியாற்றியவர்.

திரு சிவம் அவர்கள் குரும்பசிட்டி அமரர் அ.குகதாசன் அவர்களின் யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ரூடியோவில் புகைப்படக்கலையைக் கற்று வளர்ந்தார். இளமையில் ஓவியக்கலையில் சிறப்புடவிளங்கிய அவருக்கு கைகொடுத்தது இந்தப் புகைப்படக்கலை. கலைஞர்கள் அகமும் புறமும் மகிழ்வாக அழகாக இருக்க உழைப்பர்கள். இவரது பேச்சிலும் பிறரை மகிழ்விக்கும் நகைச்சுவை கலந்தே இருக்கும்.

இவரை நேர்காணும்போது தனது புகைப்படக் கலைக்கு குரு என்று மதிக்கும் அ.குகதாசன் அவர்கள் தனக்கு சொல்லிவைத்த கண்டிப்பான அறிவுரையை மகிழ்ச்சியாக மனதில் பதியும்படி நகைச்சுவையாகச் சொல்லுகின்றார் பாருங்கள்.

### உந்த ஜோடி சேர்க்கிற வேலைமட்டும் பண்ணிப் போடாதை!

அந்தக்காலத்தில் ஒரு ஸ்க்கூல் மாணவியின் படத்தை கூகுளில்போய் எடுத்துவிட முடியாது. அது ஸ்ரூடியோக்களில்தான் இருக்கும். அதுவும் கல்விப் பொதுத்தரப் (OL/AL ) பரீட்சை என்றால் கட்டாயம் அடையாள அட்டையாக ஒரு புகைப்படம் மாணவர் மாணவிகள் எடுத்தே ஆகவேண்டும். எனவே ஒரு காலத்தில் ஒரு கட்டத்தில் மாணவ மாணவிகள் படை எடுக்கும் இடமாக இந்த ஸ்ரூடியோ இருந்தது.

அங்கு வருபவர்கள் சிலர் காதலர்களாகவும் சிலர் ஒருதலைக் காதலர்களாகவும் வருவது உண்டு. இப்படியான ஒரு காலத்தில்தான் நான் புகைப்படக்கலையைக் கற்கச் சென்றேன்.

நான் புகைப்படங்களை எடுத்து வெட்டி எடுத்து பின்னணியில் அழகான காட்சிகளை ஒட்டி படம் மீண்டும் எடுத்து அழகுக்கு அழகு சேர்ப்பேன். (இப்போது கணணியில் நீங்கள் செய்யும் விளையாட்டை ஒரு நாற்பது ஆண்டுகளுக்குமுன் நான் பாத்திருக்கிறேன்)

எல்லோரும் என்னை மெச்சுவார்கள். ஆனால் இந்தத்திறமை பிழையாகக் கையாளப்பட்டால் புகைப்படக்கலைஞனின் வாழ்வே நாசமாகிவிடும் என்று நான் குருவாக மதிக்கும் குகதாசன் அவர்கள் என்னை மெச்சாமல் அச்சப்பட்டார்.

அதனால் அவர் சொன்ன அறிவுரை எந்தக்காத்திலும் மாணவர்களது படங்களையும் மாணவிகளது படங்களையும் பெற்றவர் அனுமதி இன்றி பிறரிடம் வழங்கப்படாது. முக்கிமாக நீ இந்தப் பின்னணிக்காட்சிகளை ஒட்டுவதில் வல்லவராக இருக்கிறாய். எக்காலத்திலும் தனித்தனி எடுத்த பெண்பிள்ளைகளின் படங்களையும் ஆண்பிள்ளைகளின் படங்களையும் ஒட்டி ஜோடிசேர்த்துக்கொடுத்து இக்கலையைக் கெடுத்துவிடாதே என்று ஒரு கண்டிப்பை அந்த ஸ்ரூடியோ வாழ்வில் எனக்கு போதித்தார்.

தொடர்ச்சி 06 ம் பக்கம்




5ம் பக்கத் தொடர்ச்சி...

## காசு இருக்கு என்று .....

நான் தெல்லிப்பளையில் அமரர் அ.குகதாசன் அவர்களது தம்பி அருள்தாசன் அவர்களால் நிறுவப்பட்ட தாசன் ஸ்ரூடியோவை 1976 இல் நான் முழுமையாகப் பொறுப்பேற்று நடத்தினேன்.

அந்தக்காலத்தில் பாடசாலை மாணவ மாணவிகள் சிலா் காதலராகவும் இருப்பார்கள். அவர்கள் ஜோடியாக தம்மை ஒரு படம் எடுத்து தரும்படியும் சொல்வார்கள். சில ஒருதலைக்காதலர்கள் குறிப்பாக பெண்களின் படங்களைத் தந்து ஒட்டித்தரும்படியும் சொல்வார்கள். (இதை ஒருக்கா ஜொயின்பண்ணித்தருவியளோ? என்பார்கள்.) நான் அவர்களை நீங்கள் திருமணம் செய்து ஜோடியாக ஜொயின்டாக வாருங்கள் நான் உங்களுக்கு இலவசமாக இந்த யசிக்கா கமராவால் படம் எடுத்துவிடுவேன் என்று சொல்லித் திருப்பி அனுப்பிய சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு. பின்பு அவர்களில் பலரை இலவசமாக திருமணத்தின்பின் எடுத்துவிட்டதும் உண்டு. இராசிக்காரக்கமரா இந்த -யசிக்கா கமரா

எனக்கு அறிவுரை தந்த குரு அமரா் அ.குகதாசன் அவர்களது அறிவுரையை நான் இறுதிவரை கடைப்பிடித்தேன். அது எனக்கு உறுதியான பல வாடிக்கையாளர்களைப் பெற்றும் தந்தது.

**நீங்கள் எந்தக்காலத்தில் அதிக படங்களை எடுத்துள்ளீர்கள்.**

இரு காலங்களைக் குறிப்பிடலாம். ஒன்று இலங்கையில் முதல் முதல் காச்சலார். மற்றது ஆயிரம் ஆயிரமாக இரவுபகலாக படம்பிடித்தது.

கொழும்பு ஸ்ரூடியோவில் வேலை செய்த போது இன்று போல் அன்றும் வியாபாரப் போட்டி இருந்தது. இன்று வாங்கிய விலைக்கே விற்பதும், ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் இரண்டு இலவசம் இதனைப் பகிடியாக நான் ஒன்றும் வாங்காவிட்டாலும் ஒன்று இலவம் என்று சொல்லி அன்பளிப்பாக வழங்கலாமே என்று சொல்வதும் உண்டு.

அன்று கடைகள் மலிவு விற்பனை நடத்துவது போன்று, ஸ்ரூடியோக்கள் அரைச்சலார் என்று படம் எடுப்பதற்கு ஒரு மாதம் அல்லது இரு வாரம் நடத்துவார்கள். முக்கியமாக திருமணம், பரீட்சை நாட்கள் இல்லாத நேரத்தில் போட்டு வாடிக்கையாளர்களை இழுப்பார்கள். இப்படி ஒரு நேரத்தில் முதல் முதலாக ஸ்ரூடியோ வரலாற்றில் காச்சலார் போட்டு கலக்கியவர் குகதாசன் அவர்கள்.

எப்படி இது கட்டும் என்று கேட்பவர்களுக்கு எல்லாம் நாட்டாமை சரத்குமார் மாதிரி வேட்டியின் அடிநுனிக்கரையை கையில்பிடித்து தூக்கிக்கொண்டு ஒரு புன்னகையுடன் தலையை சரித்துக்கொண்டு நடப்பார்.

பின்புதான் அந்த நாட்டாமையின் ஆளுமை புரிந்தது. காச்சலாரில எடுக்கும் படங்களுக்கு 3 பிரதி கொடுப்பதில்லை. ஒரு பிரதிதான். எனவே காச்சலார் ஒரு வாரம் நடந்து முடிந்தபின்பும் வருடக்கணக்காக மக்கள் வந்தபடி. காரணம் நெக்கட்டிவில் பிரதி எடுக்க வந்த படி. காச்சாலார் காசை விதைத்தது.

அடுத்து எடுத்தது இற்றைக்கு 45 வருடங்களுக்கு முன்பு ஆண்களை மீசை இல்லாமலும் பெண்களை மேக்கப் இல்லாமலும் அரசாங்க அடையாள அட்டைக்கு ஒரு ரூபாய்க்கு எடுத்துக் குவித்தது. (18 வயதுக்குமேல் எல்லோரும் அடையாள அட்டையாள அட்டை எடுக்கவேண்டும் என்று அரசாங்கம் 1972 இல் சட்டம் கொண்டு வந்தது. அதனை பலர் எதிர்த்தனர். நாம் மட்டும் வரவேற்றோம்.)

இரவு பகலாக குரும்பசிட்டி கட்டுவன், வருத்தலைவிளான். வசாவிளான், குப்பிளான் தெல்லிப்பளை வீமம்காமம் மாவிட்டபுரம், என்று அன்று வாழ்ந்த இளசுகளை படம் எடுத்தவன் நான். எங்கு வாழ்ந்தாலும் உங்கள் நகைப்பெட்டிக்குள் கடைசி என்பலப்புக்குள் இருக்கும் ஒரு முறை எடுத்துப்பாருங்கள். அதில் உங்கள் முகத்துடன் எடுத்த என் முகமும் தெரியலாம்.

படங்கள் எடுத்து அதிக நாட்களின் பின்பு தான் இன்று போல் அன்றும் கொடுப்பீர்கள்! கேட்டால் ரச்சிங்வேலை முடியவில்லை என்பீர்கள் அந்த ரச்சிங்பற்றி சொல்லுங்கோ!

ஒரு படத்தினை எடுத்தபின்பு அவருடைய முகத்தில் பருக்கள் தழும்புகள் கோடுகள் வயதுக்கான சுருக்கங்கள் இருக்கும். அதனை ஒரு லைட்வெளிச்சத்தின் மேல் படநெக்ரிவை (Film) வைத்து மெல்லிய கூரான பென்சிலால் உரசி உரசி மறைத்துத்தான் ரச்சிங் செய்யவேண்டும்.

இது மிகவும் நுணுக்கமான வேலை. ரச்சிங் கூடிக்குறைந்தாலும் படம் முழுவதும் கோடுகள் வந்து அலங்கோலமாக்கிவிடும்.

இந்த ரச்சிங் அளவோடு அழாக அவர்களது அடையாளம் மாறமல் அவதானமாச் செய்சேய்யவேண்டும். முக்கியமாக இன்று Paint Brusch இல் செய்வது போல் பெத்த தகப்பனுக்கே பிள்ளையைத் தெரியாமல் பண்ணக்கூடாது.



சட்டத்தரணி கே.வி.மகாதேவன் அவர்களது காரியாலத்திறப்பு விழாவில் தந்தை செல்வா, திரு.அமிர்தலிங்கம் திரு நடராஜா அகியோர். படம் சிவம் 1971

கறுப்பு வெள்ளைப்படம்போல மனத்திரையில் வாழ்கிறாய் என்று நான் ஒரு பாடல் எழுதியுள்ளேன். அந்த மனத்திரைக்கு அழகு தந்த அந்தக்காலத்து கறுப்பு வெள்ளைப்படங்களின் நுட்பம்தான் என்ன?

அளவான இயற்கையாக ஒப்பனை! ஒளிக்கலவை மற்றும் படத்தினை கழுவிச் செப்பனிடும் கெமிக்கல்களை அளவாகக் கலத்தல். இதில் முக்கியம் இங்கு படம் கழுவும்போது (முன்பு) வெள்ளையனுக்கும் எமக்கும் ஒரே மருந்து ஒரே கழுவும் நேரம் என்றால் நாம் ஒன்றில் வெளுறிப்போவோம் அல்லது கருகிப்போவோம்.

ஒவ்வொரு ஆளுக்கும் எற்ப தனித்தனியாக அன்று கழுவி எடுக்கப்படுவதால் அழகாகவும் அதே நேரம், காலதாமதம் ஆனாலும் காலத்தால் அழியாமலும் இன்றும் இருக்கிறது. கறுப்பு வெள்ளைப்படங்கள்.

**இன்று இளைவயவர்கள் அந்தக்காலத்துப்படங்களை சுவரில் மாட்டுவதும் இல்லை மதிப்பதும் இல்லை! இது ஆரோக்கி மானதா?**

காலம் மாறிவிட்டது. சுவரில் மாட்டிவிடுவது அவர்கள் நினைவு என்றும் வருவதற்காகவே. அந்த நினைப்பே கூடாது என்றால் எவன் மாட்டுவான்.

இது ஒரு நகைச்சுவைக்காக மட்டுமே சொன்னேன். நம்மை விட நமது பிள்ளைகள் பெற்றவர்கள் மீது பாசமாக உள்ளனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.


ஒன்று படங்களை சுவரில் அதிகமாக மாட்டிவிட்டால் சுவரின் அழகு குறைந்துவிடும். ஆனால் படங்களை இன்று கணனிக்கள் பதித்து வைத்தால் வைத்தவர்களுக்கே தெரியாமல் போய்விடும். இன்று ஒரு காட்சியை நூறுபடம் எடுப்பார்கள் அதாவது சுட்டுத்தள்ளுவார்கள். வாச்சால் என்ற திறமையைப்பார் என்பார்கள். எல்லாம் தானக எடுக்கும் (Autometice) கமராக்கள்.


தனக்கு என்று அடையாளப்படுத்த எதாவது பண்ணவேண்டும். அது ஒவ்வொரு புகைப்படக்கலைஞனையும் வேறுபடுத்திக்காட்டும் தனித்துவமாக இருக்க வேண்டும். காசு இருக்கு என்று கமரா வாங்கப்படாது கலை இருக்கு என்று வாங்கவேண்டும். இன்றும் தாயகத்தில் டப்பான் கமராவால்கூட அற்புதமா சிலர் சுட்டுத்துள்ளுகின்றார்கள் நம் இளம் கலைஞர்கள்.

படங்களை எடுப்பது எப்படி முக்கிமோ அதனைப் பேணுவது அதனைவிட முக்கியம். பழைய படங்கள் ஒரு வரலாற்று கலாச்சாரப் பதிவு. யுத்தம் எமது தலைமுறைக் கையளிப்பை அழித்துவிட்டது. எனவே இருப்பதைப் பேணவேண்டும். முக்கியமாக நான் நிக்கோன் கமராவால் எடுத்தேன் என்றோ கனோன் கமராவால் எடுத்தேன் என்று எவருக்கும் தெரியக்கூடாது. யார் எடுத்தவர் என்று தான் மக்கள் கதைக்கும்படியாக தனித்துவமாக எடுக்கவேண்டும். கமராவுக்குள் நீங்கள் இருக்கப்படாது உங்களுக்குள் கமரா இருக்கவேண்டும். தாருங்கள் தரமான புகைப்படங்களை!









# பெண்ணினது மூளை பல நடவடிக்கைகளை ஒரே சமயத்தில் நடத்தும் தகமை உடையது

அமரர் கனக்ஸ்

ஆணினது மூளையும் பெண்ணினது மூளையும் வித்தியாசமான முறையில் சிந்திக்கின்றனவா?
திருவள்ளுவரின் காமத்துப் பால் பலருக்குத் தெரிந்திருக்கலாம். அது ஆண்பாலாரும் பெண் பாலாரும் ஒரே விடையம் பற்றி வெவ்வேறு விதமாகச் சிந்திப் பார்கள் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைகிறது

இம்மைப் பிறப்பில் பிரியலம் னென்றேனாக்
கண்ணிறை நீர் கொண்டனள் ( 1315)

இப்பிறப்பில் யாம் பிரியமாட்டோம் என்று காதலன் சொல்கிறான். அவன் சிந்தனை இப்பிறப்பு நன்றாக அமைய வேண்டும் நாம் இன்பம் கொழிக்க வாழ வேண்டும் என்ற வேட்கையோடு நின்று விடுகிறது. அவளோ வித்தியாசமான முறையில் சிந்திக்கிறாள். இவன் இப்பிறப்பை மட்டுந்தானே சொல்கிறான் அப்படியானால் அடுத்த பிறவியில் பிரியலாம் என்கிறானா? அப்படியானால் நாம் அடுத்த பிறவியில் பிரிந்து விடுவோமா? கிடைத்ததை அனுபவிக்காமல் கிடைக்காததைப் பற்றி எண்ணுகிறாள் கண்கள் கண்ணீரால் நிரம்பி விடுகின்றன. இன்னொரு குறள்:

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று
( 1317)

அருகே இருந்தாள். அன்பாகச் சல்லாபம் செய்து கொண்டிருந்தாள். சமய சந்தர்ப்பம் தெரியாமல் தும்மல் வந்து விட்டது. தும்மினேன். அவளும் வழமை போன்று " நூறாண்டு வாழ்க என வாழ்த்தினாள்" இது என்ன? அவள் கண்களில் கண்ணீர். ஆனந்தக் கண்ணீராக இருக்க முடியாது. அவள் மனத்தில் ஏதோ நிரடல். அதன் விளைவே இக்கண்ணீர். அவள் சிந்தனை வேறு விதமாகச் சென்றுள்ளது. என்னருகில் இருந்த இவன் தும்முவதற்குக் காரணம் யாரோ இவனைப் பற்றி எண்ணுவது தான். அவள் நிச்சயமாக ஒரு பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். அப்போ இவன் இதயத்தில் இன்னொரு பெண் அமர்கிறாள் போலும் என எண்ணிய அவளுக்குக் கண்கள் கண்ணீரால் நிரம்ப அவனை நோக்கி வினவுகிறாள்

" யார் உம்மை நினைத்ததால் தும்மினீர்?"

வள்ளுவர் சொல்வதற்கு முன்பாகவே கூட ஆணினது மூளையும் பெண்ணினது மூளையும் வித்தியாசமான முறையிலே தான் சிந்திக்கிறது என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

ஆணிற்கும் பெண்ணிற்கும் வெறும் பாலியல் வேறுபாடு மாத்திரமல்லாது உடற்றொகுதியின் ஒவ்வொரு கூறிலேயும் வேறுபாடு இருப்பதைக் காணமுடியும்.
பெற்றோர்களினது முட்டை மற்றும் விந்தில் வரும் நிறமூர்த்தங்களும் அவற்றிலே அமைந்த பரம்பரை அலகுகளும் முளையத்தின் பாலியலைத் தீர்மானிக்கின்றன. விருத்தியுறும் முளையம் ஆணாக விருத்தியுறுமா பெண்ணாக விருத்தியுறுமா என்பது கருக்கட்டப் படும்போது தான் தீர்மானிக்கப் படுகிறது. பாலியல் தீர்மானிக்கப் பட்டதும் ஓமோன்கள் தோன்றி எங்கும் செல்கின்றன. முளையம் படிப்படியாக விருத்தியுறுகிறது. அங்கங்களும் அங்கத் தொகுதிகளும் விருத்தியடைகின்றன. ஓமோன்கள் விருத்தியுறும் மூளையின் உள்ளேயும் செல்கின்றன.

விருத்தியுறும் மூளை இந்த ஓமோன்களால் நெறிப்படுத்தப் பட்டு பிரத்தியேகமான முறையில் விருத்தியடைகின்றது. குழந்தை பிறந்த பின்னர் அது பெறுகின்ற கல்வி அறிவும் பட்டறிவும் சேர்ந்து கொள்ள பிள்ளை " பிள்ளை" யாகிறதைக் காணலாம்.

பெண்களைப் பொறுத்த மட்டிலே எஸ்திரோஜன் ( Estrogen) எனப்படும் ஓமோன் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பெண்களுடைய கல்வி அறிவு, சிந்தனை, நினைவுத் திறன் ஆகியவற்றுடன் எஸ்திரோஜன் நிறைந்த சம்பந்தமுடையது.
பொதுவாகவே ஆண்களுடைய மூளை அதே வயதுடைய பெண்ணினதிலும் பார்க்கப் பெரிதாகவே இருக்கும். மூளையினை இருவகைக் கலங்கள் உருவாக்குகின்றன. அவை நரம்புக் கலங்களும் (Neurons) நரம்புப்பசையிழையக் கலங்களும் ஆகும். நரம்புக் கலக்களே மூளையினது தொழிற் பாட்டிற்குக் காரணமாகின்றன. இந்நரம்புக் கலங்கள் சிறுசிறு முளைகள் மூலம் ஒன்றோடொன்று தொடர்பு கொள்கின்றன. முளையினது பிரதானமான பாகம் முளையம் எனப்படுகிறது.
அதன்பரப்பு முழுவதுமே பல நெளிந்த பீடங்களையும் சால்களையும் கொண்டிருக்கும். நேர்கோட்டினிலே அமைந்த ஆழமான ஒரு சால் மூளையத்தை இரு அரைக் கோளங்களாகப் பிரிக்கின்றது. அவை இடது மூளைய அரைக்கோளம் வலது மூளைய அரைக்கோளம் என அழைக்கப் படுகின்றன. ஆண்களின் மூளை பெண்களினதிலும் பார்க்கப் பெரிதாக இருந்தாலும் கூட பெண்களினது இடது மூளைய அரைக் கோளத்தில் உள்ள நரம்புக் கலங்களின் தொகை ஆண்களினதிலும் பார்க்கப் பெருமளவு அதிகம் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இந்தப் பாரபட்சம் இதனுடன் நின்று விடவில்லை. நரம்புக்கலங்கள் ஒன்றோடோன்று தொடர்புறுவது அவற்றின் நரம்பு முளைகள் சுரக்கும் இரசாயனப் பொருள் ஒன்றின் மூலமாகவே. இந்த இரசாயனப் பொருள் டோபமைன் எனப்படுகிறது. பெண்களிலே இந்த டோபமைன் கூடியசெறிவில் சுரக்கப்படுகிறதாம். இதனால் வேகமாகவும் சிறப்பாவும் பெண்ணினது நரம்புக் கலங்கள் செயற்பட முடிகிறது.

தொடர்ச்சி 08ம் பக்கம்...

bcntravels@hotmail.de,consultingnetwork@hotmail.de
BCN·TRAVELS
Consulting Network
Travels·Business·Worldwide
Öffnungszeiten: Mo-Sa 10:00-19:00 Uhr
கோடைகால விடுமுறைக்குரிய விமானச்சிட்டைகள்
முற்பதிவு ஆரம்பமாகிவிட்டது
இலங்கை, இந்தியா, கனடா உட்பட அனைத்து
நாடுகளுக்கும் சலுகை விலையில் விமானச்சிட்டைகள்...
Ria
துரித
பணமாற்றுச்
சேவை
நம்பிக்கையும் நாணயமும் சலுகையும் ஒரே இடத்தில்
BCN Travels // Consulting Network (TBW) UG // Inh. Rasan Sivalingam // Rheinische Str. 72, 44137 Dortmund
Tel.: 0231-10876361, 0231-58440763, 0231-98539416 // Fax: 0231-10876362 // Mobile: 0163-8714369

7ம் பக்கத் தொடர்ச்சி...

## பெண்ணினது மூளை ...



இடது மூளைய அரைக்கோளம் செவி மடுத்தல் மற்றும் உரையாடுதலுடன் சம்பந்தப்படுகிறது வலது மூளைய அரைக்கோளம் சுற்றுச் சூழலை உணர்தல், மற்றும் வாழிடத்தோடு சம்பந்தமான செயல்களுடன் தொடர்புடையது. மேறியான் லெகாற்ரோ எனும் பெண்மணி" ஆண்கள் ஏன் எப்பொழுதும் நினைவில் வைக்கிறார்கள் இல்லை பெண்கள் ஏன் ஒருபொழுதும் மறப்பதில்லை"
சில சமயங்களிலே ஆண்களுடன் பேசுவது கற்சுவரிலே தலையை மோதிக் கொள்வது போல உள்ளது " என விரக்தியுடன் லெகாற்றோ கூறுகிறார்.

"சொல்லுவது எதனையும் அவர்கள் செவி மடுப்பதில்லை அல்லது நாம் சொல்வ தால் அவர்கள் எரிச்சல் அடைகிறார்கள், நாம் சொல்வதற்கான பதில் அவர்களிடமிருந்து வருவதும் இல்லை அப்படி வந்தாலும் அவை சரியான பதில்களாக அமைவதில்லை" என ஆண்களை முற்றாகவே மட்டம் தட்டி விடுகிறார் லெகாற்ரோ.

ஆண்களினது மூளை ஒரு சமயத்தில் ஒரு விசயம் பற்றியே சிந்திக்கிறது எனவும் சம்பந்தப்பட்ட வேலையிலிருந்து ஏனைய கவன ஈர்ப்புகளை நிராகரிக்கும் அற்புத திறமை ஆணின் மூளைக்கு உள்ளதர்கவும் கூறும் லெகாற்றே பெண்ணினது மூளை பல நடவடிக்கைகளை ஒரே சமயத்தில் நடாத்தும் தகமை உடையது எனவும் கூறுகிறார்.

எனவே தான் "ஆண்கள் பத்திரிகை படிக்கின்ற சமயத்திலோ அல்லது தொலைக் காட்சி பார்க்கின்ற சமயத்திலோ அவர்களுடன் ஏதாவது முக்கிய விசயங்கள் பற்றிச் சர்ச்சையில் ஈடுபட வேண்டாம். அவர்கள் நிச்சயமாகச் செவியில் அதனை ஏற்க மாட்டார்கள். ஆகவே பின்னர் அது பற்றி வருந்துவதில் ஒருவிதமான பிரயோசனமும் இல்லை" என்கிறார்.

ஆண்கள் பேச்சற்ற சைகைகளைக் கவனிக்கவே மாட்டார்கள் ஆகவே அவர்களுக்கு எப்பொழுதும் சொல்லாலே தான் விசயத்தை எடுத்துக் கூறவேண்டும் என்பது லெகாற்றோவின் கருத்து. பெண்கள் பேச்சு மற்றும் இடம் சம்பந்தமான செயல்களில் சம்பந்தப்படும் பொழுது மூளையினது கூடுதலான பகுதியைப் பிரயோகிக்கிறார்கள் என ஆய்வுகள் தெரியத் தருகின்றன.

மேறியான் லெகாற்ரா போலல்லாது கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர் பேறன- கோஹன கொஞ்சம் ஆண்களுக்குச் சாதகமாகக் குறிப்புகள் தருகிறார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே காணப்படும் மூளையின் அமைப்பு வேறுபாடு வெறும் கூர்ப்பு விளைவான இசை வாக்கங்களே என்கிறார் பேறன் கோஹன். இதற்கு மனித இனம் தோன்றிய காலத்திற்கு நாம் செல்ல வேண்டும். அக்காலத்திலே ஆண்மகன் இடமறிந்து, வழிகண்டு வனத்தினூடாக உலாவி கருவி கொண்டு உணவுக்காகவும், பாதுகாப்புக்காகவும் விலங்குகளைக் கொன்று இயற்கையைத் தன் வசமாக்க முயன்றான். மூளை அதற்கேற்ப சிறத்தலடைந்தது. பெண்ணோ இல்லத்தில் தங்கி குழந்தையைப் பராமரித்தாள் இல்லத்தின் தேவைகளை ஈடுசெய்தாள். இதன் விளைவாக அவளது மூளை உறவுகளை ஏற்படுத்துதற்கும், மொழியினைப் பாவிப்பதற்கும் பேச்சு அற்ற சைகைகளைப் புரிந்து கொள்வதற்கும் இசைவு பெற்றது.
பேறன்- கோஹனின் கருத்துப்படி பெண் எப்பொழுதுமே மற்றை யோருடைய நல் அபிப்பிராயத்தினைப் பெற்று இன்னொருத்தருடைய ஆளுமையில் வாழுவதற் கேற்றவாறு அவளது மூளை விருத்தியுறுகிறது. ஆனால் ஆணினது மூளையோ முறைமைகளைப் பற்றி அறியவும் அவற்றினை உருவாக்கவும் ஏற்றவகையிலே உருவாகிறது. ஆணினதுமூளைக்கும் பெண்ணினது மூளைக்கும் இடையே உள்ள வேறு சில வேறுபாடுகள்:
பெண்கள் பொதுவாகவே ஏனையோருடன் அன்பின் விளைவான பரிவர்த்தனை செய்யும் உறவினை நாடுவார்கள் ஆண்களோ தமது அந்தஸ்தையும் அதிகாரத்தையும் காண்பிக்கும் உறவினை விரும்புவார்கள்.
பெண்கள் அனுபவங்கள் பற்றிக் கலந்துரையாடுதற்கும் சமத்துவமான தோழமை யோடு பழகுதற்கும் விரும்புவார்கள். ஆண்களோ ஒரே தன்மையான அக்கறை கொண்டோருடனும் சரியான போட்டி தரக்கூடியவரையுமே விரும்புவார்கள் பெண்கள் வெறுமனே பொழுது போக்கிற்காகவும் பழக வேண்டும் என்பதற் காகவுமே மற்றையோருடன் கலந்துரையாடுகிறார்கள் ஆண்கள் தமது அறிவு ஆற்றல் மற்றும் திறன்களை காட்டுதற்காகவே சம்பாசிக்கிறார்கள்.
பெண்கள் பொதுவாக மற்றவர்களைப் பற்றிப் பேசுவதில் அக்கறை காட்டு வார்கள் ஆண்கள் மற்றவர்களைப் பற்றிப் பேசுவதிலும் பார்க்க ஏதாவது பொருட்கள் பற்றிப் பேசவே நாட்டம் காட்டுவார்கள். இன்னும் சொல்லலாம். நான் சொல்லாமல் விட்டதை நீங்கள் சேர்த்துக் கொள்ளுங்கள் இந்தப் பட்டியல் தொடரும்.



ஸ்ரீ முத்துமாரி அம்மன்
ஜோதிட நிலையம்

பண்டித் விஜயேந்திர வர்மா

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர் விஜயேந்திர வர்மா முதன் முறையாக யேர்மனி வந்துள்ளார்.
கைரேகை முகலட்ஷணம் ஜாதகம் ஆகியவை கொண்டு நடந்தவை நடக்கின்றவை மற்றும் நடக்கப்போகின்றவை பற்றி துல்லியமாக கணித்துக்கூறப்படும். எம்மை நாடுங்கள் நிச்சயம் தீர்வு கிடைக்கும்..
தொழில் வியாபாரம் தாம்பத்தியக்கோளாறு உடல்நலம் காதல்விவகாரம் திருமணம் குழந்தைப்பாக்கியம். குண்திருஷ்டி கழித்தல் லக்சுமி வசீகரம் வழக்குமன்றவிவகாரம் கணவன்மனைவி ஒற்றமையீன்மை கல்வி, வாஸ்து சாத்திரம், போன்ற எல்லாக்காரியங்களும் செய்து தரப்படும் செய்வினை சூனியங்களில் இருந்தும் விடுதலைபெறலாம்.

Tel:0152 10 86 79 16
Tel:0152 1189 2772

Kurfürstenstresse-33
10785 Berlin
U BHF Kurfürstenstresse U1










Neuss நகரில்..
ShaRun Saree
all indian traditional dresses
திருமணப் பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள் இன்னும் பஞ்சாபிகள் அனைத்தும் நீங்கள் விரும்பும் ரகத்தில் எம்மிடம்
தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்!
30 வீதம் முதல் 50 வீதம் வரை விலைக்கழிவில்....
August-Macke.Str.79a
41470 Neuss.
02137/92 96 836
0178-35 79 015
0178-35 79 002


# செயற்கை இனிப்புகளை உபயோகிக்கலாமா?

## அவை ஆபத்தற்றவையா?

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

அருகில் இருந்தவர்கள் இவரை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். தொழில்சார் அமைப்பின் செயற்பாட்டுக் குழுக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது.
பெரும்பாலானவர்கள் சீனி போடாமல் தேநீர் குடித்தார்கள். ஒரு சிலர் ஒரு கரண்டிமட்டும் போட்டார்கள். இவர் மட்டும் மூன்று கரண்டி சீனி போட்டு நாக்கைச்சப்புக்கொட்டினார்.Sugar is an addiction என்பதற்கு இவர் ஒரு உதாரணம். இப்படிச் சீனிகுடிப்பவருக்கு நீரிழிவு வந்தால் என்னவாகும். இனிப்பே சாப்பிடாமல் மாய்ந்துபோவாரா?

செயற்கை இனிப்புக்கள் கிடைக்கின்றனவே! அவற்றைச் சேர்த்துக் கொள்ளலாமா? அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துகளுக்கான அதிகார சபையானது acesulfame potassium, aspartame, saccharin, sucralose, neotame and advantame ஆகியசெயற்கை இனிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவற்றில் பல,இலங்கையிலும் கிடைக்கின்றன.

நீரிழிவாளர்களுக்கும், உடல் எடை அதிகரித்தவர்களுக்கும் நல்லதல்ல. காரணம்அதில் கலோரி வலு அதிகம். குருதிச் சீனியின் அளவையும் உடல் கொழுப்பையும்எடையையும் அதிகரிக்கும். அத்தகைய இனிப்புப் பிரியர்களின் தேவைகளைஈடுசெய்யவே, கலோரி வலுக் குறைந்த இனிப்புகளான செயற்கை இனிப்புகள்சந்தைக்கு வந்தன. இவற்றின் நன்மை என்னவெனில் கலோரி வலு குறைவாக,ருக்கும் அதேவேளை அவற்றின் இனிப்புச் சுவையானது சீனியை விடப் பலமடங்கு அதிகமாகும். உதாரணமாக 30 மிகி அளவேயான aspartame 5 கிராம்அளவு சீனியின் இனிப்புச் சுவையைக் கொடுக்க வல்லது.




எனவே பல நோயாளர்கள் தாங்களாகவே அல்லது மருத்துவரின் ஆலோசனையுடன்அத்தகைய செயற்கை ,னிப்புகளை உணவு மற்றும் நீராகாரம் போன்றவற்றில்சேர்த்துக் கொள்கிறார்கள். ஒரு கல்லில் இரு மாங்காய்கள். இனிப்புச் சுவையைஉண்ண முடிகிறது. ஆனால் அதே நேரத்தில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்காது நீரழிவு கட்டுப்பாட்டில் இருக்கம். இந்த செயற்கை இனிப்புகள் பாதுகாப்பானவையா என்பதுதான் பலரின் மனத்தை அரிக்கும் சந்தேகமாகும்.

சில காலத்திற்கு முன் வந்த சில ஆய்வுகள் சிகப்பு சமிக்ஞை காட்டின.கர்ப்பமாயிருக்கும் பெண்களுக்கு இது ஆபத்தாக முடியலாம் என்றது ஒரு ஆய்வு.
காலத்துக்கு முந்திய மகப்பேறு நிகழலாம் எனவும் அஞ்சப்பட்டது. சுண்டெலிகளில்செய்யப்பட்ட மற்றொரு ஆய்வானது அதிகளவில் செயற்கை இனிப்புகளை உண்பதால் சுண்டெலிகளில் புற்றுநோய் தோன்றுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்பதுடன் நீரிழிவு தோன்றுவதற்கான சாத்தியமும் அதிகம் என்றது. ஆயினும் அந்த ஆய்வுகள் மனிதர்களில் அதுவரை செய்து நிரூபிக்கப்படவில்லை.
இந்த நிலையில் சந்தேகங்களைத் தெளிவிப்பதற்காக ஐரோப்பிய உணவு பாதுகாப்பு அதிகாரசபையானது (European Food Safety Authority) அத்தகைய இனிப்புகளின் பாதுகாப்புத்தன்மை பற்றிய ஒரு மீள் ஆய்வை ஆரம்பித்தது. மேற்படி மீள்ஆய்வு இன்னமும் தொடர்கிறது என்றபோதும் அஸ்பார்டேம் (யளியசவயஅந) என்ற செயற்கை இனிப்புப்பற்றிய அறிக்கை 2015 ஜனவரியில் வெளியிடப்பட்டுள்ளது. 40 மிகி அளவைத்தாண்டாத அஸ்பார்டேம் இனிப்பை உட்கொள்வதால் ஆபத்துகள் ஏதும் இல்லை என அது முடிவு கூறியுள்ளது.

பிரான்சில் செய்யப்பட்ட மற்றொரு (Agency for Food, Environmental and Occupational Health & Safety) ஆய்வும் பச்சை விளக்குக் காட்டின.
செயற்கை ,னிப்புகளை உட்கொள்வதால், இனிப்புச் சுவைக்கு பழக்கப்பட்டு அதனால் மேலும் மேலும் இனிப்புப் பண்டங்களை தேடி உண்ணும் பழக்கம் ஏற்படுவதும் இல்லை என்கிறது. அதாவது

இனிப்பு சுவைக்கு அடிமையாவது (addiction) இல்லையாம். செயற்கை,னிப்புகளை குழந்தைப் பருவத்தில்உண்பவர்கள் வளரும்போதும் அதையே நாடுவார்கள் என்ற பரவலான கருத்துக்கு ஆதாரம் இல்லை என்று மேலும் சொல்கிறது.

எடையைக் குறைப்பதற்கு கலோரி வலுக் குறைந்த இத்தகைய செயற்கை இனிப்புகள் உதவும் எனப் பலரும் நம்புகிறார்கள். அதேநேரம் இவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கு எடை அதிகரிக்கும் என்கிறன சில ஆய்வுகள்.

பிரான்சில் செய்யப்பட்ட அந்த ஆய்வானது எடை அதிகரிப்பதற்கோ அல்லது எடை குறைப்பிற்கோ செயற்கை இனிப்புகள் காரணம் அல்ல என்கின்றது. இந்தச் செயற்கை ,னிப்புகள் குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரித்து அதன் காரணமாக உடலில் இன்சுலின் சுரப்பதையும் அதிகரிக்கும் என்றொரு நம்பிக்கை இருக்கிறது. அதன் காரணமாக நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத்தை செயற்கை இனிப்புகள் அதிகரிக்கின்றன என்கிறார்கள்.

ஆனால் அது தவறு என்கிறது பிரான்ஸ் நாட்டின் மேற்கூறிய ஆய்வு. இந்தச் செயற்கை இனிப்புகள் நீரிழிவு ஏற்படுவதற்கு காரணமாக இருக்காது என்பது தெளிவாகிறது.

தொடர்ச்சி 12ம் பக்கம்...



**T.T.S.Brothers GmbH&Co.KG**

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

கதை சொல்ல ஓர் கதை...




மீரா. குகன்

# ஒரு புத்தகத்தின் சோகம்

அது ஒரு பெரிய நூலகம். நகர மத்தியில் அமைந்திருப்பதால் எப்பொழுது பார்த்தாலும் ஒரே சன நடமாட்டம் அவ் நூலகத்தில் காணப்படும். திரும்பிய பக்கமெல்லாம் பல வித புத்தகங்கள் ஒரே சீராகவும் மிக நேர்த்தியாகவும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

முதல் வரிசையில் சிறுவர் கதைகள் காணப்பட்டன. அவைகளுக்கருகில் அறிவு சம்பந்தமான புத்தகங்களும் பின் வரிசையில் விஞ்ஞான ஆராய்ச்சி புத்தகங்கள் என வித விதமான புத்தகங்கள் அவ் நூலகத்தில் இருப்பதால் தொலைவிலிருந்து கூட பலர் வந்து தமக்கு வேண்டிய புத்தகத்தை இரவல் வாங்கி செல்வார்கள்.



இவ்வாறு பலர் காலை முதல் மாலை வரை வருவதும், போவதுமாக இருப்பதனால் மாலை நூலகத்தை மூடிய பின் எல்லா புத்தகங்களும் ஒன்று சேர்ந்து தமக்குள் கதைத்து சிரிப்பது வழக்கமாக கொண்டிருந்தன. வெளியே சென்று திரும்பி இருக்கும் புத்தகங்கள் தமது அனுபவத்தை எல்லா புத்தகங்களுடன் பகிரும் பொழுது மற்றய புத்தகங்கள் எல்லாரும் மிக ஆவலாக கேட்டுக்கொண்டிருக்கும்.

இவ்வாறு தமக்குள் கதைத்து குதூகலத்தில் அவ் நூலக புத்தகங்கள் இருந்தாலும் ஒரு வயதான புத்தகம் ஒன்று மட்டும் மிகவும் சோகத்தில் ஆழ்ந்திருக்கும். ஏனென்றால் அப்புத்தகம் மட்டும் இன்று வரை வெளியே எங்கேயும் சென்று வந்ததில்லை.

இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் வழமை போல் மாலை நூலகம் மூடப்பட்டது. எல்லாரும் ஒன்று சேர்ந்து அன்று வீடு திரும்பி இருந்த புத்தகங்களிடம் நலம் விசாரிக்க கூடினர். தமக்குள் கதைத்து கொண்டிருக்கும் வேளையில் ஒரு இளம் கேலிச்சித்திரம் அடங்கிய புத்தகம் மற்றைய புத்தகங்களை பார்த்து நான் தான் உங்கள் எல்லாரையும் விட சிறந்தவன். என்னை தான் பலர் அடிக்கடி விரும்பி எடுத்துச்செல்கிறார்கள். ஆதலால் நான் தான் உங்களை விட மிக முக்கியமான புத்தகம் என்று மிக பெருமையாக பேசியது.

இவ்வாறு பெருமை பேசிய கேலிச்சித்திர புத்தகம் ஒரு மூலையில் அமர்ந்திருந்த வயதான புத்தகத்தை பார்த்து ”ஏன் இன்னும் இவ் நூலகத்தில் இருக்கிறாய்? ஒருவரும் உன்னை தேடியதில்லை என்று கேலி செய்தது. அவ் வயதான புத்தகமோ மிகவும் மனம் வருந்தி தான் இருக்கும் மூலையில் கூனிக் குறுகி சாய்ந்தது. அடுத்த நாள் காலை விடிந்ததும் தான் இவ் நூலகத்தை விட்டு செல்ல முடிவும் செய்தது.

காலையும் விடிந்தது. நூலகமும் திறக்கப்பட்டது. வயதான அந்த புத்தகம் மிகுந்த சோகத்துடன் அங்கிருந்த புத்தகங்களிடம் விடை பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு சலசலப்பு கேட்டது.

நூலகத்தின் புத்தகங்களை கவனிக்கும் பெண்மணி ஏதோ ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை தேடிக்கொண்டிருந்தாள். அருகில் ஒரு தந்தையும் மகனும் நின்றனர். அப் பையன் தன் தந்தையிடம் ”அப்பா எனக்கு எப்படியும் அந்த தமிழ் அகராதி வேண்டும். நாளை எனக்கு பாடசாலையில் பரீட்சை. நான் இன்று பல தமிழ் சொற்களின் விளக்கங்களை அறிய வேண்டும். ஆகவே எவ்வாறாயினும் தமிழ் அகராதியை இரவல் வாங்கிச்செல்ல வேண்டும்” என்று மிகவும் பிடிவாதத்துடன் கூறிக்கொண்டிருந்தான்.

வயதான அந்த புத்தகதுக்கோ மிக பிரமிப்பாக இருந்தது. தன்னை தான் அவர்கள் தேடுகிறார்கள் என்று புரிந்தது. உடனே நெஞ்சை நிமிர்த்துக்கொண்டே முன்னே சென்றது. அந்நூலக பெண்மணி ”இதோ அகராதியை கண்டு பிடித்துவிட்டேன்“ என்று அப் பையனிடம் அந்த வயதான புத்தகத்தை கொடுத்தாள். தந்தை அப்பெண்மணியிடம் ” நன்றி ஆனால் ஒரு மிக முக்கியமான புத்தகத்தை ஏன் எங்கோ ஒரு மூலையில் வைத்திருக்கிறீர்கள்? கேலிச்சித்திர புத்தகங்களும் கதை புத்தகங்களும் ஒரு முறை வாசித்து முடித்தால் பின்னர் அதன் தேவை இருக்காது. ஆனால் எமக்கு என்றும் எப்பொழுதும் அகராதியின் உதவி தேவை. அந்த புத்தகத்தின் பெறுமதி மிகவும் உயர்ந்தது” என்று கூறி மகனுடன் பழைய புத்தகத்தை எடுத்துச் சென்றார்.

இவர்களின் உரையாடலை கேட்ட கேலிச்சித்திர புத்தகம் வெட்கி தலை குனிந்தது. ஒரு போதும் மற்றவரை இகழ்ந்து பேசுவதை அன்றோடு விட்டது.

## நன்றி நவிலல்



யேர்மனியில் 22.05.2015 நடைபெற்ற எங்கள் திருமணவைபவத்தில் கலந்து எம்மை நேரில் வாழ்த்தியவர்களுக்கும் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்கள் இதயம் கலந்த நன்றிகள்
அன்புடன்
சுதர்ஷ்ன் – தமிழினி தம்பதிகள்






# தாய்மண்ணில் யுத்தம் அழித்த வாழ்வை மீட்டளிக்கும் கைத்தொழில்




இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அழிவடைந்த ஜப்பான் அழிவிலிருந்து மீண்டு மக்களின் முயற்சியால் பெரிய பணக்கார நாடாக மாற்றமடைந் துள்ளது. எமது நாடும் கடந்த காலங்களில் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்டது.

இன்றைய சூழலில் யுத்தம் முடிவடைந்த போதும் யுத்தம் ஏற்படுத்திய அழிவுகளிலிருந்து மக்கள் முற்றாக மீளவில்லை இதிலிருந்து மீள்வதற்கு அரசாங்கத்தையோ, வேறு நிறுவனங்களையோ முற்றாக நம்பி இருப்பது யதார்த்தத்தில் பயனளிக்கப் போவதில்லை என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும். இதற்கு மாற்றாக மக்கள் சுயதொழில் முயற்சிகளின் மூலம் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவது அவசியமானதாகும்.

இந்த வகையில் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்டு உடுவில், இணுவில், சுன்னாகம், ஏழாலை, தாவடி, கந்தரோடை, சங்குவேலி ஆகிய கிராமங்களில் வெள்வேறுபட்ட ஏராளமான சிறிய, நடுத்தரக் கைத்தொழிற்சாலைகள் உள்ளன.

அண்ணா கோப்பி உணவுற்பத்திச்சாலை, ஜசுபி பழத்தொழிற்சாலை, மிக்ஷர் கைத் தொழிற்சாலை, வெதுப்பகக் கைத்தொழில், பாற்பண்ணை உற்பத்திச்சாலை, குளிர்களி உற்பத்திச்சாலை, மரக்கைத்தொழிற்சாலை, புகையிலை உற்பத்திச்சாலை, பனம்பொருள் உற்பத்திச்சாலை, கள் உற்பத்தி நிலையம் போன்றன இவ்வாறான கைத்தொழிற்சாலைகளில் சிலவாகும்.

அண்ணா கோப்பி கைத்தொழிற்சாலை இணுவில் தெற்கிலும், ஜசுபி பழத்தொழிற்சாலை உடுவில் மேற்கிலும், தச்சுத் தொழிலகம் பெருமளவில் உடுவிலிலும், குறைந்தளவில் இணுவில், தாவடி, மற்றும் ஏழாலையிலும் காணப்படுகின்றன.

ஆரம்பகாலம் தொட்டு அதாவது இற்றைக்கு நாற்பதுக்கு மேற்பட்ட வருடங்களிற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட அண்ணா கோப்பி கைத்தொழிற்சாலை, பதினைந்து வருடங்களிற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட ஜசுபி பழத்தொழிற்சாலை என்பனவே ஏற்றுமதி வாய்ப்புள்ள அதிகளவு வருமானம் தரும்நடுத்தரக் கைத்தொழில்களாகக் காணப்படுகின்றன.




அதற்கு அடுத்தபடியாக புகையிலை சார் உற்பத்தி, மரக்கைத்தொழில் போன்றவை குடிசைக் கைத்தொழில்களாகவே இடம் பெறுகின்றன. வெதுப்பகக்கைத் தொழில், ஐஸ்கிறீம் உற்பத்தி என்பன வியாபார நிலையங்களுடாக ஓரளவு வருமானத்தைத் தருவிக்கின்றன.

மேலும் பாற்பண்ணை உற்பத்திகள் இன்று சிறப்பாக இடம்பெறுகின்றன. பாற்பனீர் உற்பத்தி, பதப்படுத்திய பாலுற்பத்தி, சர்பத் உற்பத்தி, மில்க்ரொபி உற்பத்தி, பசு நெய் மற்றும் பாற்பனீர் கறி உற்பத்தி, தயிர் உற்பத்தி என்பன அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சிறுகைத் தொழில்கள் பல தடை கள், பிரச்சினைகள், சவால்கள், போட்டிகள் என்பவற்றினை எதிர்கொண்டும் ஈடுகொடுத்துமே வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. பெரும் பாலும் உள்ளூர் மூலவளங்களும், ஓரளவு வெளியூர் மூலவளங்களும் கொண்டிருக்கும் சிறுகைத்தொழில்கள் மூலப்பொருட்கள் சார்பான பிரச்சினைகள், உற்பத்தியாளர்சார் பிரச்சினை கள், தொழிநுட்ப மற்றும் இயந்திர சாதனம்சார் பிரச்சினைகள், சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளையும் அதிகம் எதிர்கொண்டு வருகின்றன.

அதிகளவில் நன்மைகளே காணப்படுகின்ற போதிலும் சில கைத்தொழில் களிற்குரிய தொழிலாளர் போதாமையும், மூலவள விலை அதிகரிப்பும் சிறிதளவு பிரச்சினையாகவுள்ளது.

கூட்டுறவு சமாசங்களதும், அமைச்சினதும் அனுசரணையுடனும் வங்கிகளின் சிறுகைத்தொழில் தொடர்பான திட்டங்களும் சிறிய,நடுத்தரக் கைத் தொழில்உற்பத்திகள் குறித்த பிரதேசத்தில் சீராக இடம் பெற்று வருவதைக் காணலாம்.

'இன்று மரக்கைத் தொழில் பெரும்பாலும் இது குடிசைக் கைத்தொழிலாக இடம்பெறுகின்றது. மூலதன வசதி குறைவானோரே இதனை மேற்கொள் கின்றனர். இன்றைய காலத்தில் மர வகைகள் அதிகளவு பெறுமதியுடன்காணப்படு கின்றன.

முதிரை, பாலை, வேம்பு போன்ற மரங்களும் விலை அதிகரித்துள்ளது. இவ் விலையேற்றம் என்னைப்போன்ற சிறு கைத்தொழில் மேற்கொள்வோர்க்குப் பிரச்சினையாகவுள்ளது. என்கிறார் சங்குவேலியைச் சேர்ந்த வேல்முருகன் மரத்தொழிற்சாலை உரிமையாளர் வேல்முருகன்.

அத்துடன் 'தொழினுட்பம் போதாமையும் எமக்குப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மூலம் தொழிற் பயிற்சிகளை வழங்கும் போது சிறுகைத் தொழிலில் பாரிய மாற்றத்தை உண்டு பண்ணலாம். இல்லாவிடில் மரக்கைத்தொழிலாளர்கள் வேறு தொழில்களை நாடிச் செல்லும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கலாம்.' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த உள்நாட்டு யுத்தகாலத்தில் வெளியூர் மூலவள இறக்குமதியின்மை சில கைத்தொழில்களின் உற்பத்தியையும், ஏற்றுமதியையும் பெருமளவு பாதித்தது. தொழிலாளர்கள் விலகுதல், சில தொழில்களிற்குரிய ஆர்வம்குறைதல் (பனம்பொருள் உற்பத்திகள், கள் உற்பத்தி, புகையிலை பதனிடல் என்பன), சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு எல்லாக் கைத்தொழிலிற்கும் போதிய பயிற்சி இன்மை (மரக்கைத் தொழில்), போதிய நிதிவசதி இன்மை மற்றும் சிறு தொழில் செய்வது தாழ்வானது என்ற சமூக வரையறை போன்றவையும் சிறு கைத்தொழில் வீழ்ச்சிக்குக் காரணிகளாகும்.

உள்ளூரில் விவசாயம் சார் மூலப்பொருட்கள் அதிகளவு இருக்கின்ற போதிலும் அவற்றினைக் கொண்டு சிறு கைத்தொழில்களை இன்னமும் விருத்தி செய்ய முடியும். ஆனால் இன்று முன்னரை விட கல்வி அறிவு விருத்தி, இதனால் பிரதேச மக்கள் அதிகளவில் அரச உத்தியோகம் நாடிச் செல்லுதல் போன்றவற்றால் அவை மட்டுப் படுத்தபட்டு வருகின்றன.

S.K.ராஜ்




உங்கள் அனைத்து
இல்லக் கொண்டாட்டங்களுக்கும்
100 இருக்கைகளுடன்
நீங்கள் விரும்பும்
சோடனைகளுடன்

every Sunday
from 17.00-22.00
Vegetarian
all you can eat Buffet
10 vegetarain Currys
Rice,Salad,Soup,Samosa,
Desserts and and...
only 9,90 €

Om Namaste
Indisches Restaurant

உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்திய உணவுகளை சுவையாக தயாரித்து அனைத்தையும் இந்நாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.

Offnungszeit: 11.00 -24.00

all you can eat Buffet
daily from 11.00-22.00
only 6,-€

www.om-namaste@.com
e.mail: om-namaste@.de
facebook:om namaste

-கொத்துரொட்டி
-புரியாணி
-மசாலாத்தோசை
-பேப்பர் தோசை
-சிற்றுண்டிகள்
-Original Naan Pizza
இன்னும் இன்னும் இன்னும்
ஒரு முறை விஜயம்
செய்து பாருங்கள்!

உடன் தொடர்பு
கொள்ளுங்கள்!
Brückstr 33
44135 Dortmund
0231 33 48 52 82

9 பக்கத் தொடர்ச்சி...

## செயற்கை இனிப்புகளை ...

கர்ப்பிணிகள் இவற்றை பாவிப்பதால்கருப்பையில் வளரும் சிசு குறை மாதத்தில் பிறப்பதற்கு அல்லது வேறு ஆபத்துகளை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை.

செயற்கை ,னிப்புகள் நிணநீர் தொகுதியில் lymphoma எனப்படும் ஒருவகைப் புற்று நோயை ஏற்படுத்தலாம் என முன்னர் ஒரு ஆய்வு கூறியது.

ஆயினும் பிரான்ஸ் நாட்டின் மேற்கூறிய ஆய்வானது புற்றுநொயை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை
எனச் சொல்கிறது. இருந்தபோதும் இது பற்றி மேலும் ஆய்வு செய்வது நல்லது என்கிறது அதே பிரான்ஸ் அறிக்கை.செயற்கை இனிப்புகளை உட்கொள்ளவதால் குறிப்பிடக் கூடிய நன்மைகள் இல்லை என்பதும் அதே நேரம் அவற்றால் ஆபத்தான விளைவுகள் ஏற்படவும் வாய்ப்பு இல்லை என்பதே ஐரோப்பிய மற்றும் பிரான்ஸ் அதிகார சபைகளின் பொதுவான சிபார்சாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

எனவே இது தொடர்பாக இரண்டு முக்கிய விடயங்களைக் கூறலாம்.

1.எவரும் தயக்கமின்றிப் பாவிக்கக் கூடியளவு ஆரோக்கியமான உணவு என்று செயற்கை இனிப்புகளைச் சிபார்சுசெய்வது இன்றைய நிலையில் முடியாது.
ஏனெனில் அவற்றினால் ஆரோக்கியம் மேம்படும் என்று சொல்வதற்கு ஆதாரங்கள் இல்லை.

2. இருந்தபோதும் அதிகளவு மென்பானங்களை அல்லது பழச்சாறுகளை அருந்துபவர்கள் அவற்றைக் கைவிட்டு, பதிலாக வெறும் நீரை மட்டும் உட்கொள்ள முடியாத நிலையில் இருந்தால், அதற்கு மாற்றீடாக செயற்கை இனிப்புகள் அமையும். முக்கியமாக நீரிழிவாளர்களுக்கு இது கூடியளவு பொருத்தமாக இருக்கும். அவர்கள் சீனி அதிகம் உள்ள பானங்களை அருந்துவதைத் தவிர்த்து இத்தகைய செயற்கை இனிப்புகளை தமது உணவிலும் நீராகாரங்களிலும் சேர்த்துக் கொள்வதில் தவறு இல்லை. நீரிழிவு நோயற்ற ஏனையவர்கள் இவற்றை உபயோகிப்பதில் எந்தவித நன்மையும் இருப்பதாக இதுவரைஅறியப்படவில்லை.

எனவே அதிகளவு சீனி சேர்த்துக் கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. அதேநேரம் செயற்கை இனிப்புகளை

மாற்றீடு செய்வதில் எந்த நன்மையும் இருப்பதாகவும் தெரியவில்லை.
நன்றி: தமிழர் தகவல் -கனடா



## கூச்சமா! அப்படி என்றால் என்ன? என்கிறார் சமந்தா


திரைப்படங்களில் நடிக்கத் துவங்கியதும் தனது கூச்ச சுபாவம் மாறிவிட்டதாக சமந்தா தெரிவித்துள்ளார். தெலுங்கு திரை உலகில் கவர்ச்சி காட்டி நடித்து வந்த சமந்தா தற்போது தமிழ் படங்களில் நடிக்க முன்னுரிமை கொடுத்து வருகிறார். அதனால் அவர் கையில் தற்போது தெலுங்கு படங்கள் இல்லை. தமிழ் படங்களிலும் சமந்தா படுகவர்ச்சியாக நடிக்கத் துவங்கியுள்ளார். சமந்தாவின் ஓவர் கவர்ச்சியால் தான் அவருக்கும் நடிகர் சித்தார்த்துக்கும் இடையேயான காதல் முறிந்தது என்று கூறப்பட்டது.

சமந்தாவுக்கு நடிக்க வரும் முன்பு ரொம்பவே கூச்ச சுபாவமாம். 4 பேர் சேர்ந்து நின்றால் கூட அந்த இடத்திற்கு செல்ல கூச்சப்படுவாராம். இப்படி அறியாயத்திற்கு கூச்சப்பட்ட சமந்தா படங்களில் நடிக்க வந்தார். நடிகையான பிறகு கூச்சம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போய்விட்டதாம்.
டான்ஸ் பள்ளி நாட்களில் சமந்தாவை நடனமாடுமாறு அவரது ஆசிரியைகள் வலியுறுத்தினார்களாம். ஆனால் பலர் முன்பு ஆட கூச்சமாக இருந்ததால் அவர் நடனமாடவில்லையாம். ஆனால் அந்த கூச்சம் எல்லாம் தற்போது இல்லை என்கிறார் சமந்தா.
ஹீரோக்கள் சமந்தாவுக்கு சினிமாவுக்கு வந்த புதிதில் நடனமாடத் தெரியவில்லையாம். பின்னர் பெரிய ஹீரோக்களிடம் இருந்து நடனம் கற்றுக் கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.
10 எண்றதுக்குள்ள சமந்தா விக்ரம் ஜோடியாக நடித்த 10 எண்றதுக்குள்ள படம் ரிலீஸாக உள்ளது. சமந்தா வேலை இல்லா பட்டதாரி படத்தின் இரண்டாம் பாகத்தில் தனுஷ் ஜோடியாக நடிக்க உள்ளார். இது தவிர அவர் மேலும் 2 படங்களில் நடிக்கவும் ஒப்பந்தம் ஆகியுள்ளார்.



# இன்று இலங்கையில் பாக்கும் அதன்போக்கும்!

## போதை வஸ்துக்களால் பாலியல் வல்லுறவுகள், விபச்சாரம், சுயசிந்தனை அழிப்பு!



தமிழர்கள் வாழும் பகுதிகளில் முக்கியமாக யாழ்மாவட்டத்தில் மாவா எனும் போதைப் பொருள் ஊட்டிய பாக்கு சர்வசாதாரணமாக விற்கப்படுகிறது

பாக்கு, வெத்திலை வைத்து கொடுத்து வரவேற்பது தமிழினத்தின் பண்டைய பண்பாடும், காலாசாரப்படிமம் ஆகும். இது இலட்சுமி கடாச்சமானது என்றும், தெய்வீகமானது என்றும் கருதப்பட்டது. வாக்குச் சொல்பவர்கள் கூட பாக்கு உருட்டியும், வெத்திலை நாடி பார்த்தும் குறி சொன்னார்கள். இப்படி இருந்த பாக்கு இன்று போக்குமாறி, வாக்குமாறி இனத்தையே பலவீனப்படுத்தும் தாக்கு பொருளாக மாறியுள்ளது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் முக்கியமாக யாழ்மாவட்டத்தில் மாவா எனும் போதைப் பொருள் ஊட்டிய பாக்கு சர்வசாதாரணமாக விற்கப்படுகிறது. இதை அரசோ, குற்றத்தடுப்புப்பிரிவோ, அரசவதிகாரிகளோ இதைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? சமூக ஆவலர்கள் இது குறித்து விசனப்பட்டு, புகார் செய்தாலும் இதைக் அரசு கண்டு கொள்ளாதிருப்பதும், தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட மறுப்பதும், பெற்றோர், சமூக ஆவலர்கள், காலசாரக்காவலர்கள், தமிழ் அரசியல்வாதிகள் எனப்பல வேறுபட்ட வகுப்பினர்கள் விசனத்துக்குள்ளாகி உள்ளார்கள்.

அண்மையில் இந்த மாவாப்பாக்கை மல்லாகத்திலுள்ள உயர்தரவகுப்பில் பயிலும் இருமாணவர்கள் பாவித்தமை நேரடியாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது மாணவசமூகத்தினுள் இளைஞர், யுவதிகள் மத்தியில் இப்படிப்பட்ட போதைப்பாக்கு வகைகளைப் பாவிக்கும் நிலை சர்வசாதாரணமாகப் புழக்கத்தில் வருகிறது. இது எப்படி வருகிறது? இதன்பின்னணி என்ன? எதிர்கால இலக்கு என்ன? என்பது பற்றி ஆராயவுள்ளோம்.

பாக்கு

பாக்கை சிங்கப்பூர், சில மத்தியகிழக்கு நாடுகள் போதைப் பொருளாகவே பார்க்கின்றனர். விமானநிலையங்களில் பாக்குடன் பிடிபட்டவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதில் இயற்கையாகவே போதைப் பொருள் உள்ளதாகக் கருதப்படுகிறது. இது தமிழ், சிங்கள மக்களிடையோ சர்வசாதராணமாக பாவிக்கும் பாவனைப் பொருளாகவே அன்று இருந்தது. வல்லுவம் என்ற சிறுபையில் பாக்கு வெத்திலை சுண்ணாம்பு போன்றவற்றைக் கொண்டு திரிந்தார்கள். அதில் கொட்டைப்பாக்கு நாறல்பாக்கு எனபலவகையில் பதப்படுத்தி சீவலாக்கிப பயன்படுத்துவார்கள். பல்லும்போனவர்களும் பாக்கை சிறு உரலில் இடித்துத் தூளாக்கிப் பயன்படுத்துவார்கள். இன்று சூவீங்கள் எனும் இறப்பறை சப்புவதுபோல் அன்று பாக்கு வெத்திலை என்பது பொழுதுபோக்காகப் பொருளாக சமூகவிணைப்புக்குப் பயன்படுத்தப்பட்டது. இது தேனீர், காப்பி போன்ற சமூகதொடர்பு உண்டிகள் போல் இதுவும் பயன்படுத்தப்பட்டது. பழக்கமில்லா தவர்கள் இதை உண்ணும் போது தலைசுற்றும். இதில் சிறு போதைத்தன்மை இருக்கிறது என்பதற்கு இந்த உதாரணம் போதுமானது.

போதைப்பொருட்கள்

போதை என்று பார்க்கும் போது தேனீர், காப்பி போன்றவைகளும் போதைப் பொருக்களே. போதையின் அளவை, தாக்கு வீரியத்தை வைத்தே போதைவஸ்து எது என்றும் மென்போதைப் பொருள் எது என்பதும் சமூகத்தால் தீர்மானிக்கப்பட்டது. தாக்குதிறன் குறைந்த தங்குதன்மையற்ற காப்பி , தேனீர் போன்றன ஊக்கம் தரும் சமூகப்பாவனைப் பொருட்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. போதை ஏற்றும், தங்கிவாழப்பண்ணும் பொருக்களான கஞ்சா, அபின், கரோயின், கொக்கோயின் போன்றன தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களாகக் கொள்ளப்பட்டன. இப்போதைப் பொருட்கள் மனிதனை, மனிதமூளையை தாக்கி தங்கிவாழச் செய்வதால் இதை தடைசெய்யப்பட்டன.

வெள்ளைக்காரன் இலங்கைக்கு வந்து எம்மை தம்மில் தங்கிவாழப் பண்ணினான். இதில் ஒருவடிவமே தேயிலை, காப்பி அறிமுகமாக இருந்தது. எமக்கு அதைப் பழக்கி, எமக்கே விற்றுப் பணம் சம்பாதித்தான். இதனால் பாக்கின் பயன்பாடும் குறையத்தொடங்கியது. இதை புதுமுறையில் உயிர்பிக்க பீடா என்று இதேபாக்கை சீனி, வாசனைப் பொருட்களுடன் கலந்து விற்கத் தொடங்கினார்கள். இது இளைஞர் யுவதிகள் மத்தியில் ஓரளவு வளர்ந்தாலும் அங்கிகரிக்கப்பட்டதும் சமூகவந்தஸ்துப் பெற்ற கோப்பி தேனீருடன் போட்டி போட முடியவில்லை. இன்று கோப்பி தேனீருக்கென்றே பல கடைகள் உருவாயிருப்பதை அனைவரும் அறிவர்.

போதைவஸ்துக்கள் மனிதனை அதில் முழுமைகாகத் தங்கி வாழப்பண்ணுகிறது என்பதுடன் அழித்தும் விடுகிறது. இதனால் தடை செய்யப்பட்ட போதைப் பொருள் பாவனையாளர்களையும் விற்பனை யாளர்களையும் தண்டிக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டது. வன்போதைப் பொருட்கள் பாவனை திறனற்ற சமூகத்தை உருவாக்க வழிகோலும் என்பது திண்ணம். உலகிலேயே தடைசெய்யப்பட்ட வன்போதைப் பொருட்கள் சமூகமயப்படுத்துவது அடிப்படையில் தமிழினத்தை அழிக்கும் ஒருசெயலாகவே பார்க்கப்பட வேண்டும். இது ஒரினத்தின் அத்திவாரத்தை ஆணிவேரை பிடுங்குவதாக அமையும். இளையவர்களே ஒரினத்தின் எதிர்காலம். இவர்கள் போதையில் தங்கி வாழ்ந்தால் சமூகம் கட்டுப்பாடு இழந்து வன்செயல்களைத் தொடர்ந்து அறிவிலிகளாக, வல்லுறவாளர்களாக வாழத்தொடங்குவார்கள்.

இப்பாக்குப் போதைப் பொருளை யார்விற்பனை செய்கிறார்கள்? எப்படி நாட்டுக்குள் நுளைகிறது? வன்போதைப் பொருக்களை பாக்கு என்ற சமூகவந்தஸ்துப் பெற்ற மெல்லுகின்ற பொருளை போதைப் பொருட்களுடன் கலந்து இலவசமாக முக்கியமாக, இளைஞர் யுவதிகளைக் குறிவைத்தே திட்டமிட்டுச் செயற்படுகிறது.

சுயமாகச் சிந்திக்கும் விவேகமுள்ள இளைஞர்களே நாட்டின் நாடி நரம்பாகவும் இனத்தின் காப்பரண்களாகவும் அமைகிறார்கள்.

தொடர்ச்சி 13ம் பக்கம்




## யாழில் சர்வ சாதாரணமாக கிடைக்கும் போதைப் பாக்கு! மாணவர்களும் அடிமைகளாகும் அவலம்!

யாழ்.மாவட்டத்தின் நகரப் பகுதிகள் உட்படப் பல்வேறு பகுதிகளிலும் மாவா என்ற தடைசெய்யப்பட்ட போதைப் பாக்கு விற்பனை அதிகரித்துள்ளது.

கடைகளில் சாதாரணமாக வைத்து இவை விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று சமூக ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறு சாதாரணமாக மாவா விற்கப்படுவதால் தற்போது பாடசாலை மாணவர்களும் அதைப் பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மல்லாகத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவர் குறித்த போதைப் பாக்கைப் பயன்படுத்திய நிலையில் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இவ்வாறு யாழ்.மாவட்டத்தில் மாணவர்களை இலக்கு வைத்து தொடர்ச்சியாக வெவ்வேறு வடிவில் போதைப் பொருள் விநியோகம் இடம்பெற்று வருகின்றமை, பெற்றோர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே பாடசாலை மாணவர்களுக்குப் போதைப் பொருள் விநியோகம் செய்கின்றவர்களை உடனடியாகத் தண்டிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

13ம் பக்கத் தொடர்ச்சி...

# இன்று இலங்கையில் ...

இக்காப்பரண்களைச் சிதைப்பதன் ஊடாக ஒரு இனத்தையே அழித்து புரட்சி, போராட்டம் என்ற சொற்களையே அர்த்தமற்றதாக்கி விடலாம் என்பதில் அரசு குறியாக உள்ளது. இப்போதைவஸ்துக்களால் பாலியல் வல்லுறவுகள், விபச்சாரம், சுயசிந்தனை அழிப்பு, இனவேற்றுமை உடைப்பு, தேசிய அறுப்பு என அடுக்கிக் கொண்டே போகலாம். இவ்வன்போதைப் பொருட்கள் இலகுவாகவும் இலவசமாகவும் கிடைக்கப் பெறும் போது அதன் பாவனை வீதம் அதிகரிப்பதற்கும் வன்செயல்கள் உயர்வதற்கும் ஏதுவாக அமைகியும்.





அரசின் சாதகமான முயற்சியோ, உதவியோ கிடைக்காத பட்சத்தில் இதைத்தடுப்பதற்கு நாம் என்ன செய்யலாம் என்று சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். நாட்டின் சட்டம் என்பது கோட்டில் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் காலாசாரச்சட்டம் என்பது மனங்களில் உறுதியாக்கப்படுவது. இதனால் இப்போதை வஸ்துக்கள் பற்றிய விளிப்புணர்வுகளை ஏற்படுத்துவதும். இதன் தீமைகளை எடுத்துரைப்பதும், இப்பாவனையாளர்களை விற்பனையாளர்களை சமூகவிரோதியாக பார்ப்பதற்கு தமிழ்சமூகத்தை உந்துவதும் இப்படியான வன்போதைப் பொருள் பாவனையை முளையிலேயே கிள்ளுவதற்கான யோசனைகளாகும். சட்டத்தால் முடியாதவற்றை சில காலாசாரங்கள் திறமையாகவே செய்யும்.

ஒருவினத்தை அழிக்கவேண்டுமானால் அவ்வினத்தின் மொழி,கலை, கலாசாரம், ஆழ்நிலம், பொருளாதாரம், கல்வி போன்றவற்றை அழிப்பதனூடாகவே மிக இலகுவாக இனவழிப்பை நிறைவேற்றலாம். இதில் இளையவர்களை சுயசிந்தனையற்றவர்களாக உருவாக்கும் போது ஒரினமே தனக்குத் தானே தீயிட்டுக் கொள்கிறது. இதில் இந்த மாவா பாக்கு பெரும்பங்கை ஆற்றுகிறது. காலாசாரம், கல்வி, பொருளாதாரம் என்பற்றை ஒரேநேரத்தில் குறிவைத்துத் தாக்குகிறது. தேசியம், போராட்டம், இப்போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதும் போராட்டமே என்பதை அறியுங்கள். கூட்டங்கள் போடுவதும், மேடையில் பேசுவதும், ஊர்வலங்கள் நடத்துவது மட்டல்ல போராட்டம்.

ஒரினத்தை அதன் ஆரோக்கியத்தைக் காப்பதற்காகப் போராடுவதும் மனிதநேயத்துடன் கூடி இரட்டிப்பான இனவிடுதலைப் போராட்டம் என்பதை உணர்க. தேசியம் சுயநிர்ணயம் பேசுபவர்கள் அடிப்படையில் சுயமாகச் சிந்திக்க முடியாத மக்களிடம் அது குறித்து எப்படிப் பேசுவீர்கள். சுயமாகச் சிந்திக்கும் மனிதனால் மட்டுமே தன்னினம், மக்கள், தன்னிலம், தேசம் என்று சிந்திக்க முடியும். சுயநினைவுடன் ஆரோக்கியமாக சிந்திக்கும் மனிதனாலும் மக்களாலுமே ஒரு இனவிடுதலையை வென்றெடுக்க முடியும்.

எம்மினத்தை ஆரோக்கியமாகவும், கல்வி, கேள்வி, பொருளாதாரம், கலை, கலாசாரம், உடல் உளநலன்களுடன் வாழவைத்தாலே போதும் விடுதலை, சுதந்திரம் என்பது தானாகவே வந்து சேரும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்குத்தான். எம்மினம் சிந்திக்குமா? இதற்கான முதலடியை எடுத்து வைக்குமா?



கால் முழுமையாக முறிவதற்குமுன் பத்தைக் கட்டிவிடுங்கள். சமூகம் தானாகவே நடக்கும். நம்பிக்கையுடன் **நோர்வே நக்கீரா**


NEW ASIA FASHIONS

http://www.newasiafashions.com

இல்லங்களில் இருந்துகொண்டே
இணையத்தில் இணையற்ற சேலைகளைத்
தெரிவு செய்யலாம்! (EU)
எம்மிடம் பெற்றவர்கள்
பெருமகிழ்வு கொள்கிறார்கள்!!



- Contact Numbers
- UK -00442035811020
- 00447448179777
- Swiss- 0041763801073
- Email-info@newasiafashions.com

307 Mitcham Road
Tooting-London
SW17 9JQ / U.K








# சிதம்பர ரகசியம்

பல கோடி டாலர்கள் செலவு செய்து எட்டு ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து சிதம்பரம் நடராஜர் கால் பெருவிரலில்தான் மொத்த பூமியின் காந்த மையப்புள்ளி இருப்பதாக உலக நாடுகள் கண்டுபிடித்துள்ளன..Centre Point of World's Magnetic Equator. எந்த செலவும் செய்யாமல் எந்த டெலஸ்கோப்பும் இல்லாமல் இதனை கண்டறிந்த நமது தமிழன் எப்பேற்பட்ட அறிவுமிக்கவன்..? அதை உணர்ந்து அணுத்துகள் அசைந்துகொண்டே இருக்கும் என்ற உண்மையை ஆடும் நடராஜர் வாயிலாக உணர்த்தும்படி சிலை அமைத்து பூமியின் மையப்புள்ளியில் மறைமுகமாக அமர்த்திய அவன் சாதனை எப்பேற்பட்டது..?

இதனை 5000 வருடங்களுக்கு முன்பே கண்டறிந்து திருமந்திரத்தில் குறிப்பிட்ட திருமூலரின் சக்தி எப்படிப்பட்டது..? புரிகிறதா..? தமிழன் யார் என தெரிகிறதா..? திருமூலரின் திருமந்திரம் மிகப்பெரிய உலகிற்கே வழிகாட்டும் அறிவியல் நூலாகும் இதை உணர்ந்துகொள்ள தற்போதுள்ள அறிவியலுக்கு இன்னும் ஒரு நூற்றாண்டு தேவைப்படலாம்..வாழ்க தமிழ்..வெல்க... தமிழனின் நுண்ணறிவு!!


சிதம்பரம் நடராஜர் கோயில் ரகசியம் என்று பலரும் பல விசயங்களை கூறிவரும் வேளையில், அந்த கோயிலில் இருக்கும் அறிவியல், பொறியியல், புவியியல், கணிதவியல், மருத்துவவியல் குறித்த ஆச்சர்யங்களின் சில தகவல்கள்.


முன்னோர்கள் செய்த எல்லா செயல்களும் ஒரு தெளிவான சிந்தனையை நோக்கியே பயணித்துள்ளது, அப்படி இருக்க அவர்கள் நிர்ணயித்த பிரம்மாண்டமான கற்கோவில்களுக்கு பின் இருக்கும் சில அற்புதங்கள் அதனிலடங்கும். அந்த வகையில் சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள சில அற்புதமான ரகசியங்கள் இவைகள் தான்.

(1) இந்த கோயில் அமைந்திருக்கும் இடமானது உலகின் பூமத்திய ரேகையின் சரியான மையைப் பகுதி என்று கூறப்படுகின்றது. ( Center Point of World's Magnetic Equator ).

(2) பஞ்ச பூத கோயில்களில் ஆகாயத்தை குறிக்கும் தில்லை நடராஜர் ஆலயம், காற்றை குறிக்கும் காலஹஸ்தி ஆலயம், நிலத்தை குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வர ஆலயமும் சரியாக ஒரே நேர்கோட்டில் அதாவது சரியாக 79 Degrees; 41 minutes East தீர்க்க ரேகையில்








(LONGITUDE ) அமைந்துள்ளது, இன்று Google map உதவியுடன் நாம் வானத்தின் மேல் இருந்து பார்ப்பதை போன்று பார்த்தால் மட்டுமே விளங்கும் இந்த துல்லியம் அன்றைக்கு கணிக்கப்பட்டது ஒரு பொறியியல்,புவியியல் மற்றும் வானவியியலின் உச்சகட்ட அதிசயம்.

3) மனித உடலை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் சிதம்பரம் கோயிலில் 9 நுழைவு வாயில்களும், மனித உடலில் இருக்கும் 9 வாயில்களை குறிகின்றது.

((4) விமானத்தின் மேல் இருக்கும் பொற் கூரை 21,600 தங்கத்தகடுகளை கொண்டு வேயப்பட்டுள்ளது, இது மனிதன் ஒரு நாளைக்கு சராசரியாக 21600 தடவைகள் சுவாசிக்கிறான் என்பதை குறிக்கின்றது (15*60*24 = 21,600).

(5) இந்த 21,600 தகடுகளை வேய 72,000 தங்க ஆணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, இந்த 72,000 என்ற எண்ணிக்கை மனித உடலில் இருக்கும் ஒட்டுமொத்த நாடிகளை குறிக்கின்றது.இதில் கண்ணுக்குத் தெரியாத உடலின் பல பாகங்களுக்கு சக்தியை கொண்டு சேர்ப்பவையும் அடங்கும்.

(6) திருமந்திரத்தில் " திருமூலர்"
மானுடராக்கை வடிவு சிவலிங்கம்
மானுடராக்கை வடிவு சிதம்பரம்
மானுடராக்கை வடிவு சதாசிவம்
மானுடராக்கை வடிவு திருக்கூத்தே
என்று கூறுகிறார், அதாவது " மனிதன் வடிவில் சிவலிங்கம், அதுவே சிதம்பரம், அதுவே சதாசிவம், அதுவே அவரின் நடனம்". என்ற பொருளைக் குறிகின்றது.

(7) "பொன்னம்பலம்" சற்று இடது புறமாக அமைக்கப்பட்டுள்ளது, இது நம் உடலில் இதயத்தை குறிப்பதாகும்.இந்த இடத்தை அடைய ஐந்து படிகளை ஏற வேண்டும், இந்த படிகளை "பஞ்சாட்சர படி" என்று அழைக்கப்படுகின்றது, அதாவது "சி,வா,ய,ந,ம" என்ற ஐந்து எழுத்தே அது. "கனகசபை" பிற கோயில்களில் இருப்பதை போன்று நேரான வழியாக இல்லாமல் பக்கவாட்டில் வருகின்றது. இந்த கனக சபையை தாங்க 4 தூண்கள் உள்ளன,இது 4 வேதங்களை குறிக்கின்றது,

(8)பொன்னம்பலத்தில் 28 தூண்கள் உள்ளன, இவை 28 ஆகமங்களையும், சிவனை வழிபடும் 28 வழிகளையும் குறிக்கின்றன, இந்த 28 தூண்களும் 64 + 64 மேற் பலகைகளை கொண்டுள்ளது (BEAM ), இது 64 கலைகளை குறிக்கின்றது, இதன் குறுக்கில் செல்லும் பல பலகைகள் (CROSS BEAMS) , மனித உடலில் ஓடும் பல ரத்த நாளங்களை குறிக்கின்றது.

(9) பொற் கூரையின் மேல் இருக்கும் 9 கலசங்கள், 9 வகையான சக்தியை குறிக்கின்றது.அர்த்த மண்டபத்தில் உள்ள 6 தூண்கள், 6 சாஸ்திரங்களையும்,அர்த்த மண்டபத்தின் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் உள்ள 18 தூண்கள், 18 புராணங்களையும் குறிக்கின்றது.

(10) சிதம்பரம் நடராஜர் ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்த தாண்டவம் என்ற கோலம் "cosmic dance" என்று பல வெளிநாட்டு அறிஞர்களால் அழைக்கபடுகின்றது.










# ஆறாவது அறிவு ஆபத்தானதா ? ஐந்தறிவே அற்புதமா ?

சேவியர்

சக மனிதன் மீதான கரிசனை நீர்த்துப் போகும்போது மானுடம் தனது அர்த்தத்தை இழந்து விடுகிறது. சக மனிதன் மீதான அன்பும், அக்கறையும் இன்று பலவீனப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. தொழில்நுட்பம் உறவுகளை வெறும் டிஜிடல் தகவல்களால் இணைக்க முயல்வதே அதன் முக்கிய காரணம்.

சமூகத்தில் தன்னை விட இளைத்தவர்கள் மீது வலிமையானவர்கள் நடத்தும் வன்முறை கற்காலத்துக்கு நம்மை கடத்திச் செல்கிறது. வலிமையானவன் வெல்வான் என்பது குகைக் கால வரலாறு. தொழில் நுட்பத்தின் அதீத வளர்ச்சி, நம்மை குகைக்குள் குடியிருக்க வைக்கிறதா ?

## ஊனமாக்கும் ஊடகங்கள்.

பெண்கள் சமூகத்தின் கண்கள். பெண்கள் தான் வாழ்க்கையை அழகாக்குகிறார்கள். பெண்கள் குடியிருக்கும் வீடுகள் தான் அன்பினால் நிரம்பி வழிகின்றன. பெண்கள் கலந்திருக்கும் சமூகம் தான் நிறைவை அடைகிறது. பெண்கள் இல்லாமல் ஆண்கள் இல்லை. மனித அன்பின் உச்ச நிலையான தாயும் சரி, மனித வாழ்க்கையின் மகத்துவமான மகளும் சரி, மனித பயணத்தின் மகிழ்வான மனைவியும் சரி பெண்மையின் வைர வடிவங்களே. ஆனால் அந்தப் பெண்கள் இன்று ஆண்களின் கரங்களில் சிக்கி அழிவதைக் காணும்போது சமூகம் அவமானப்படுகிறது.

டெல்லியில் கூட்டுப் பாலியல் வன்முறை ஒரு பெண்ணின் மீது நிகழ்த்தப்பட்ட போது இந்திய தேசம் கொந்தளித்தது. வெளிச்சத்துக்கு வராத எத்தனையோ ஆயிரம் இத்தகைய வன்கொடுமைகள் இந்தியாவின் ஒவ்வோர் மாநிலத்திலும் நடந்து கொண்டே தான் இருக்கின்றன. சமீபத்தில் இலங்கையில் ஒரு பதின் வயதுச் சிறுமியின் மீது நிகழ்த்தப்பட்ட கூட்டு பாலியல் வெறியாட்டம் ஆன்மாக்களை அதிர வைத்திருக்கிறது. மலரினும் மெல்லியள் என கவிதையில் பெண்ணைப் பாராட்டி விட்டு, மோகத்தின் பூட்ஸ் கால்களால் அவர்களை நசுக்குவதைக் காண்கையில் "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்றே இதயம் கதறுகிறது.

தன் சகோதரிக்கு இழைக்கப்பட்ட கொடுமை கண்டு பதறித் தவிக்க வேண்டிய சமூகம் அதை படமெடுத்து ஃபேஸ் புக் ஸ்டேட்டஸ்களாகவோ, வாட்ஸப் தகவல்களாகவோ அனுப்பிக் கொண்டிருக்கிறது. வன்கொடுமை நடப்பதைக் கண்டதும் பதறிப் போய் தடுக்க வேண்டிய கைகள் இன்று ஸ்மார்ட் போன்களில் படம் பிடிப்பதையே முதல் வேலையாய்ச் செய்கின்றன. புலிக் கூட்டில் விழுந்து விட்ட வாலிபனை மீட்காமல் அவனை புலி என்ன செய்கிறது என படம் எடுத்துக் கொண்டிருந்த அவமானச் சமூகமல்லவா இது !

அதைத் தான் ஊடகங்களும் செய்கின்றன. வன்கொடுமைக்கு ஆளான சகோதரியை அவளுடைய வரலாறை முழுக்க முழுக்க பதிவு செய்தும், திரும்பத் திரும்ப அந்த நிகழ்ச்சிகளைக் காட்டியும், குறுப்படங்களில் தலைகுனிய வைத்தும், மேலும் மேலும் அவளை அழித்துக் கொண்டிருக்கின்றன. துபாய் போன்ற நாடுகளில் ஒரு விபத்துப் படத்தைக் கூட பத்திரிகையில் போட அனுமதி இல்லை. ஆனால் சுதந்திரத்தில் திளைக்கும் நமது தேசங்கள் தான் "பிரேக்கிங் நியூஸ்" போட்டுப் போட்டு மனசாட்சியே இல்லாமல் குடும்பத்தினரை மீளாத் துயரத்தில் இறக்கி விடுகின்றன.

அத்துடன் ஊடகங்கள் நிற்பதில்லை. "இந்த வன்கொடுமைக்கு அந்தப் பெண் அணிந்திருந்த மிடி தான் காரணமா ?" என நான்கைந்து பேரை வைத்துக் கொண்டு விவாதம் எனும் பெயரில் சமூகம் இழைத்த கொடுமைக்கு அந்தப் பெண்ணையே குற்றவாளியாக்கியும் விடுகின்றனர். வெட்கம் கெட்ட சில தலைவர்கள் "பெண்கள் தவறிழைக்கத் தூண்டினால் ஆண்கள் என்ன செய்வார்கள்" என குரூரப் பேட்டிகளையும் தவறாமல் கொடுக்கின்றனர்.

ஒரு பெண்ணை சகோதரியாகவோ, மகளாகவோ, தாயாகவோ பார்க்கத் தெரியாத மனிதன் இந்த பூமியின் சாபக்கேடு. அத்தகைய பிழைகளுக்கு ஒத்து ஊதும் தலைவர்கள் மனுக்குலத்தின் வெட்கக்கேடு.

ஒரு அதிரடியானத் தகவல் தங்கள் ஊடகத்தின் வீச்சை அதிகரிக்கும், ரேட்டிங்கை எகிறச் செய்யும் என்பதற்காக மனிதாபிமானத்தைக் கழற்றி வைத்து விட்டு நாள் முழுதும் நீட்டி முழக்கும் ஊடகங்கள் சற்றே நிதானித்துச் சிந்திக்க வேண்டும்.

தங்களுடைய நோக்கம் கொடுமை இழைக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி வழங்க வேண்டும் எனும் நோக்கில் இருக்கிறதா ? இல்லை ஊடகத்திற்குத் தீனி போடவேண்டும் எனும் நிலையில் இருக்கிறதா ?. ஒருவேளை இத்தகைய கொடுமை நமது இல்லத்தில் நிகழ்ந்தால் இதே நிகழ்ச்சியை இப்படித் தான் கையாள்வோமா ? இல்லை கண்ணீரோடு பதிவு செய்வோமா ? போன்ற சில அடிப்படை கேள்விகளை எழுப்ப வேண்டும். சரியானதை, சரியான நேரத்தில், சரியான விதத்தில் செய்யும் சமூகப் பொறுப்பு ஊடகங்களுக்கு இருக்க வேண்டும்.

கான்பூர் இரயில் நிலையத்தில் மின்சாரம் தாக்கி ஒரு குரங்கு செயலிழந்து விழுந்தது. பதறிப் போன இன்னொரு குரங்கு அதை உலுக்கி, அடித்து, தண்ணீர் தெளித்து, கதறி நீண்ட நெடிய இருபது நிமிட போராட்டத்துக்குப் பின் அதை உயிருடன் மீட்டது. ஒரு குரங்கு தனது சக குரங்கின் மீது காட்டிய பரிவும், அக்கறையும், அன்பும் மனித குலத்துக்கான பாடமல்லவா ? ஆறாவது அறிவு ஆபத்தானதா ? ஐந்தறிவே அற்புதமா ?

தொடர்ச்சி 17 ம் பக்கம்....










சேவியர்

# ஹெல்த்சானா எனும் புதுமை!

"எதுக்கும் இன்னொரு டாக்டர் கிட்டே கேட்டுப் பாருங்க" என்பது தான் பெரும்பாலானவர்கள் சொல்லும் பதிலாக இருக்கும். அதற்காக உங்களுடைய ரிப்போர்ட்களையெல்லாம் எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடி, டாக்டரின் அப்பாயின்ட்மென்டைப் பெற்று, சாயங்காலம் வரை காத்திருந்து இருக்கும் பிரச்சினையை இரட்டிப்பாக்கும் தேவை இப்போது இல்லை.

## சரியான சிகிச்சைதானா?

## இன்னொரு மருத்துவ அபிப்பிராயம்

அம்மி கொத்தலையோ..." என தெருவில் அலைந்து திரியும் குரலையோ, "குட ரிப்பேர்ர்ர்ர்..." என சன்னல் வழியே வீட்டுக்குள் குதிக்கும் குரலையோ, "கீர கீரேய்ய்ய்ய்" என தலைக் கூடைகளிலிருந்து தரை குதிக்கும் குரலையோ கேட்ட கடைசித் தலைமுறை நாமாகத் தான் இருக்கும். இந்த தலைமுறைக்கு அது நாவலுக்கான சப்ஜெக்ட். அடுத்த தலைமுறைக்கு அது அகழ்வாராய்ச்சிச் சங்கதி

கீரையானாலும் சரி, குண்டூசியானாலும் சரி விரல் நுனியில் செல்லமாய்த் தட்டினால் ஸ்மார்ட்போன் ஆப்ஸ் அதை கதவருகே கொண்டு வரும் வேலையை செவ்வனே செய்து விடுகின்றன. வங்கியில் கால்கடுக்க நிற்பது, மின்வாரிய வரிசையில் கசங்குவது, ரெயில்வே முன்பதிவில் முண்டியடிப்பது உட்பட அத்தனை விஷயங்களையும் இப்போது உள்ளங்கையில் உட்காரவைத்திருக்கிறது தொழில்நுட்பம்.

எதிர்காலத்தில் கணினி சார்ந்த மென்பொருட்களை விட, ஸ்மார்ட்போன் சார்ந்த மென்பொருட்கள் மட்டுமே கோலோச்சும் என்கின்றன புள்ளி விவரங்கள். கடைகளுக்கெல்லாம் திண்டுக்கல் பூட்டு போட்டுவிட்டு எல்லாவற்றையும் இணையத்தில் இறக்குமதி செய்து கொள்ளுங்கள் என ஒரு "விர்ச்சுவல் உலகம்" நோக்கிய பயணம் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அந்த வரிசையில் மருத்துவமும் மிக வேகமாக ஆன்லைன் பணிகளை நோக்கி அசுரப் பாய்ச்சல் பாய்ந்து வருகிறது. அதற்கென பல இணைய தளங்களும், சேவை நிறுவனங்களும் ஏற்கனவே களத்தில் குதித்திருக் கின்றன. அவைகளில் சர்வதேசப் பார்வையும், மிகத் தெளிவான கட்டமைப்பும்இ விரிவான தொடர்புகளுடனும் வந்திருக்கும் ஹெல்த்சானா.காம் (www.healthsana.com) இணைய தளம் வசீகரிக்கிறது.

"ஹார்ட்ல ஒரு சின்ன பிராப்ளம், நீங்க பைபாஸ் சர்ஜரியை எவ்ளோ சீக்கிரம் முடியுமோ, அவ்ளோ சீக்கிரம் செய்துடுங்க" என டாக்டர் சொல்கிறார் என வைத்துக் கொள்வோம். முதலில் சுனாமி சுழற்றியடிப்பது போல ஒரு அதிர்ச்சி அலை நம்மை சுழற்றியடிக்கும். கூடவே, "நிஜமாவே இந்த ஆபரேஷன் தேவையா ?", "பணத்துக்காக ஆபரேஷன் பண்ண சொல்றாங்களா ?", "நம்ம கிட்டேயிருக்கிற இன்சூரன்ஸ் பணத்துக்காக இப்படி சொல்றாங்களா ?" என எக்கச்சக்க கேள்விகள் நம்மை சுழற்றியடிக்கும்.

நேரடியாக இந்த வலைத்தளத்தில் நுழையுங்கள். ரிப்போர்ட்களை ஸ்கேன் செய்தோ, அல்லது ஸ்மார்ட் போனில் போட்டோ எடுத்தோ அப்லோட் செய்யுங்கள். டாக்டர்களின் லிஸ்டைப் பாருங்கள். உங்களுக்குத் திருப்தியான ஒருவரை கிளிக் செய்யுங்கள். அவ்வளவு தான். டாக்டர் உங்களுடைய ரிப்போர்ட்களைப் பார்த்து விட்டு "செகன்ட் ஒப்பீனியன்" அதாவது இரண்டாவது அபிப்பிராயத்தைச் சொல்வார்.

இந்த டாக்டருக்கு உங்கள் இன்சூரன்ஸ் பணத்தின் மீது கண் இல்லை, உங்களை கட்டாய அறுவை சிகிச்சைக்குள் அழைத்துச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. எனவே "உள்ளது உள்ளபடி" ஒரு முடிவைச் சொல்வார். இவரும் அறுவை சிகிச்சை அவசியம் என்றால் நீங்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். அல்லது அங்கேயே மூன்றாவதாக வேறொரு டாக்டரிடமும் நீங்கள் அபிப்பிராயம் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கியமான "உயிர்போகும்" பிரச்சினைகளில் மூன்று நான்கு மருத்துவர்களிடம் உங்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்பது கூட வெகு எளிதில் இங்கே சாத்தியமாகிறது.

ஒருவேளை எல்லோரும் ஒரே பதிலைச் சொன்னால், "சரி, டாக்டர் சரியாத் தான் சொல்லியிருக்கார்" என உறுதிப்படுத்திக் கொள்ளலாம். ஒருவேளை முரண்பட்ட பதில் இருந்தால் என்ன செய்வது ?

ஹெல்த்சானாவின் "உயர்மட்ட மருத்துவர் குழு" இந்த ரிப்போர்ட்களையெல்லாம் பரிசோதிக்கும். பின் அனைவருமாகச் சேர்ந்து ஒரு பொதுவான முடிவெடுத்து பதில் கொடுப்பார்கள்.

இறைவன் எப்படி மறுவாழ்வின் ஆதாரமோ, அது போல உடல் நலமே இவ்வாழ்வின் ஆதாரம். எனவே தான் உடல் நலனைப் பேணும், அல்லது தவறான முடிவெடுக்காமல் தடுக்கும் இத்தகைய இணையதளங்கள் மனுக்குலத்தின் தேவையாகின்றன.

ஹெல்த்சானாவின் பணிகளை கூட்டிக் கழித்து ஒரு நாலு பிரிவுகளுக்குள் அடக்கி விடலாம்.

அமெரிக்காவிலோ, லண்டனிலோ, ஜெர்மனியிலோ இருக்கும் ஒரு நோயாளி சென்னையிலோ, சேலத்திலோ இருக்கும் தன்னுடைய ஃபேவரிட் மருத்துவரின் அபிர்ப்பிராயத்தை வாங்குவது ஒன்று. இப்படி செகன்ட் ஒப்பீனியன் வாங்கும் பணியை MSOaaS Medical Second Opinion as a Service என்கின்றனர்.

தொடர்ச்சி 18 ம் பக்கம்....

17 ம் பக்கத் தொடர்ச்சி.

## ஆறாவது அறிவு ஆபத்தானதா ?

நிறுத்தி நிதானிப்போம். வாழ்க்கை என்பது நமது ஸ்மார்ட்போன்களில் இல்லை. ஃபேஸ்புக் ஸ்டேட்டஸ்களில் இல்லை. நமது உறவு என்பது வாட்ஸப் தகவல்களில் இல்லை. ஐம்புலன்களின் உரையாடலில் இருக்கிறது. கண்டு, கேட்டு, உண்டு, முகர்ந்து, தீண்டி உறவுகளை வளர்ப்போம். வலையில் சிக்கிய பறவை சிறகை இழக்கிறது. இணைய வலையில் சிக்கிய மனிதர்கள் உறவை இழக்கிறார்கள். உணர்வோடு இணைந்து வாழ்பவர்களுக்கு அடுத்தவர்களுடைய வாழ்க்கை வெறும் வேடிக்கைத் தகவலாய் இருப்பதில்லை. வேதனைத் தகவலாய் தான் இருக்கும்.

தொழில் நுட்பத்தை நாம் பயன்படுத்தும் வரை அது நமக்குப் பயனளிக்கும். தொழில்நுட்பம் நம்மை பயன்படுத்தத் துவங்குகையில் வாழ்க்கை பயமளிக்கும். தொழில் நுட்பம் நமது பணியாளனாய் இருக்கட்டும், அன்பு மட்டுமே நமது எஜமானாய் இருக்கட்டும். அன்பின்றி அமையாது உலகு.




17ம் பக்கத் தொடர்ச்சி ....

## சரியான சிகிச்சைதானா?

ஆயிரம் தான் இருந்தாலும் ”நேரடியா டாக்டர் கிட்டே பேசறது மாதிரி வருமா ?” என்பவர்களுக்காக இரண்டாவது பகுதியான MSOoD Medical Second Opinion on Demand இருக்கிறது. இதன் மூலம் நோயாளி உலகின் எந்த பாகத்தில் இருந்தாலும் வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் டாக்டர்களுடன் நேரடியாகப் பேசலாம். னோட மருத்துவ ரிப்போர்ட்ஸ் எல்லாம் குப்பை மாதிரி கெடக்கு என புலம்பும் மக்களுக்குஇ டிஜிடலைஸ் செய்து முழு மருத்துவ வரலாற்றையும் கையில் கொடுத்து விடுவது மூன்றாவது பகுதி EPRM Electronic Patient Relationship Management .

நான்காவதாக வருவது ETMR Electronic Traveller Medical Record. பயணம் செய்பவர்களுக்கான மருத்துவ ஆலோசனை, அதற்கான மருத்துவ அறிக்கைகள்இ இத்யாதிகள் எல்லாம் சேர்த்து ”எலக்ட்ரானிக் மெடிக்கல் ரெக்கார்ட்” உருவாக்கித் தருகிறார்கள். நாடு விட்டு நாடு பயணம் செய்பவர்களுடைய தலைவலியைக் குறைத்து அவர்களுடைய பயணத்தை எளிதாகவும், இனிதாகவும் மாற்றுவது தான் இது.

கார்ப்பரேட் நிறுவனங்களில் ஊழியர்கள் மனித எந்திரங்களாக மாறியிருப்பதால், அவர்களுடைய உடலும் மனமும் அடிக்கடி பாதிப்படைகிறது. அவர்களுக்கு இன்சூரன்ஸ் இருக்கிறது என்பதால் பல்வலி வந்தால் கூட நாக்கையும் சேர்த்து பிடுங்கி எடுக்க துடிக்கும் மருத்துவர்கள் உண்டு. இன்சூரன்ஸ் இல்லேன்னா பத்தாயிரம், இன்சூரன்ஸ் இருந்தா முப்பதாயிரம் என வெளிப்படையாகவே பேரம் பேசும் மருத்துவ மனைகள் உண்டு. எனவே கார்ப்பரேட் நிறுவனங்களும் இப்போது இத்தகைய இணைய தளங்களை நோக்கி தங்கள் பார்வையைச் செலுத்துகின்றன.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சிறப்புச் சலுகையும், அவர்களுக்கான பிரத்யேக சேவையையும் ஹெல்த்சானா வழங்குகிறது. ஊழியர்கள் ”இன்னொரு அபிப்பிராயம்” எனப்படும் செகன்ட் ஒப்பீனியனுக்காக இதைப் பயன்படுத்தலாம் என்பதே அவர்களுடைய பார்வை.

ஸ்மார்ட் போன் பயன்பாடு கார்ப்பரேட் நிறுவனங்களில் மிக அதிக அளவில் இருக்கிறது. இப்போதே 52 சதவீதம் ஊழியர்கள் தங்கள் மருத்துவத் தேவைகளுக்காக இணையப் பக்கங்களை அலசிக் காயப்போடுவதாய் ஆய்வு ஒன்று சமீபத்தில் தெரிவித்திருந்தது. 56 % அமெரிக்கர்கள் தங்களுடைய மருத்துவ அறிக்கையை சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதாக இன்னொரு ஆய்வு தெரிவித்திருந்தது.கார்ப்பரேட் நிறுவனங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள், அலுவலகங்கள், பொது நிலையினர் என அனைவருக்குள்ளும் இருக்கும் அந்த சந்தேகப் பேயை, இத்தகைய புதுமையான வலைத்தளங்களும், நிறுவனங்களும் நீக்கி வைக்கின்றன. அந்த வகையில் மருத்துவத் துறையின் புரட்சியான ஹெல்த்சானாவையும் கைகுலுக்கி வரவேற்போம்.


தமிழ் -யேர்மன்
**Nietharshan Magendiran**
Vereidigter Dolmetscher und übersetzer
Tamil-Deutsch
Möbil: + 49 176 311 328 73
Email: nietharshan.magendiran@gmail.com


## ஓராண்டு நினைவாஞ்சலி

### அமரர் திருமதி பூபதி சந்திரமோகன்



தாயகத்தில் கொக்குவில் பிரம்படியைப்பிறப்பிடமாகவும் யேர்மனியில் முன்சனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூபதி சந்திரமோகன் அவர்கள் 01.07.2014 இல் சிவபதமடைந்தார்கள். இன்று ஒருவருடமாகியும் எங்கள் மனங்களில் நீங்காது வாழும் உங்கள் நினைவுடன் .

**கணவன் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்.**

தகவல் சகோதரன்:
இரத்தினமகேசன்


ஸ்ரீ விநாயகா ஜோதிட நிலையம்
முகநாடி கைரேகை ஜோதிடர்
அனுபவமுள்ள எண்கணிப்பு ஜாதக ஜோதிடர்
உலகப் புகழ் பெற்ற இந்தியா யோதிடர்
பண்டித் அபிறாம்
அனைத்து மதத்தினரும் வரலாம்
ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள்
உறவு சிக்கல்கள் * தவறாக புரிந்து கொள்ளல் * நிதி சிக்கல்கள்
மன அழுத்தம் * காதல் பிரச்சனைகள் * வேலை தேடுதல்
குடும்ப வாதங்கள் * குழந்தைகள் இல்லாத தம்பதிகள் * வாகனப் பொருத்தம்
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்
தங்களுடைய துன்பங்களும், தொல்லைகளும் தீரவதற்கும், உங்கள் சந்தேகங்களை தீர்ப்பதற்கும் நாங்கள் தகுந்த ஆலோசனைகளை
பேசும் மொழிகள்: தமிழ், கிந்தி மற்றும் ஆங்கிலம்
கிழமை 7 நாட்களும் 09:30 முதல் 20:00 மணி வரை வரலாம்
0152-14844789
Rheinischestr. 80
44137 Dortmund



அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்
ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயம்
26.06.2015 வெள்ளி முதல் 05.07.2015 ஞாயிறு வரை
10.07.2015 வைரவர்மடை
பக்நாங் -யேர்மனி
Sulzbacher Str.56
71522 Backnang/ Germany
மகேந்திரம்: 07191- 3731436
0176 81 85 47 64
மகாதேவா: 07041863968
ரூபன்: 07156 3892



KAILAS
Fisch- Feinkost
டோட்மூண்ட் நகரில்
என்றுமில்லாத வகையில் மிகக் குறைந்த விலையில் மரக்கறிகள்!
Offnungszeiten:
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 9.00 முதல்
மாலை 20.00 மணி வரை
ஒவ்வொரு வியாழக்கிழமையும் இலங்கை இந்திய மீன்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்! தரமான ஆட்டு இறைச்சி எம்மிடம் கிடைக்கும்!
Tel:0231 137 433 95
Handy:,0163 47 60 237
web.kailas-fisch.de
email:info@kailas-fisch.de
Adler Str.05
44137 Dortmund





துரித பணமாற்றுச் சேவை
அதிகூடிய பெறுமதியில் தாயகத்தில் பணம் பெற எம்மை நாடுங்கள்!






இலங்கையில் மேற்படி வங்கிகளில் பணம் பெறலாம்
இங்கு வளங்கும் பணத்திற்கு



# மகாமுனிவன்

ஏலையா க.முருகதாசன்

அன்னபூரணி வீட்டைக் கடந்து போய் ஒழுங்கையும் பள்ளிக்கூட வீதியும் சந்திக்கும் இடத்தில் வேலியோடு இருக்கும் பெரிய கல்லொன்றில் இடதுகாலை வைத்தபடி அன்னபூரணியின் வருகைக்காக திரும்பிப் பார்த்தபடியே நிற்பதும் அண்ணபூரணி அருகில் வந்ததும் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து சிரிப்பார்கள். பேசிக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் காதல் கடிதங்கள் கைமாறும்.இருவருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாதது போல் அன்னபூரணி மெதுவாக முன்னால் போக பரஞ்சோதி இரண்டு மீற்றர் பின்னால் சைக்கிளில் போய்க் கொண்டிருப்பான்.

**1966 முகப்புத்தகம் வருவதற்கு முந்தியகாலத்தக் கதை...**

„மச்சாள் பின்னேரம் பொம்பிளை மாப்பிளை வீட்டுக்கு போகேக்கிளை கொழுக்கட்டை அவித்துக் கொண்டு போக வேணுந்தானே எத்தனை அவிக்க வேணும்“ என்று கேட்டுக் கொண்டே அன்னபூரணிக்கு அருகில் பரஞ்சோதியின் தங்கை சாவித்திரி வந்து அம்ர்ந்தாள்.

சுவரோடு சாய்நது கண்களை மூடிக் கொண்டிருந்த அன்னபூரணி கண்களைத் திறந்து மைத்துனியைப் பார்த்து „நூறு அவித்தால் போதும் „என்கிறாள். சாவித்திரி அன்னபூரணிக்கருகில் உட்கார்ந்து அவளின் கைகளை பிடித்தவாறே உற்றுப் பார்க்கிறாள்.

அன்னபூரணி அழகாக கொண்டை போட்டு அதில் சிவப்பு ரோஜாப்பூவோடு எவர்கிறீனை அழகாக செருகி இருந்தாள்.“ மச்சாள் இன்று உங்களைப் பார்க்க நல்ல அழகாய் இருக்கிறியள்“ என்று சிரித்தாள்.

அன்னபூரணியின் கண்கள் கலங்கத் தொடங்கியது.“ எல்லாம் உன் அண்ணன் கொடுத்த வாழ்க்கை அன்று அவர் என்னை வேண்டாம் என்ற சொல்லியிருந்தால் நான் இப்ப ஒரு தாயாக இங்கை இருக்க மாட்டன் அவர் செய்தது பெரிய தியாகம்.........“ கண்களைத் துடைத்தால அன்னபூரணி.

„மச்சாள் பழையதை நினைத்து கவலைப்படாதையுங்கோ“ எனச் சொல்லியவாறு சாவித்திரி எழுந்து போய் விடுகிறாள். அன்னபூரணி மீண்டும் கண்களை மூடியவாறு சுவரோடு சாய்ந்தாள். பழைய நினைவுகளுக்குள் மூழ்கத் தொடங்கினாள்.

ஒரு நாள் எப்ரல்பூல் தினத்தன்று அன்னபூரணி பரஞ்சோதிக்கு மை தெளிக்க பரஞ்சோதி அன்னபூரணிக்கு மை தெளிக்க மெல்ல மெல்ல தோழர்களாகி மெதுவாக நாட்கள் செல்லச் செல்ல அது அவர்களைக் காதலர்களாக்கியது.பரஞ்சோதியின் வீடு அன்னபூரணியின் விட்டிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தது. பள்ளிக்கூடத்திற்கு போவதாக இருந்தாலும் பரஞ்சோதியின் தந்தை நடத்திய அச்சுக்கூடத்திற்கு போவதாக விருந்தாலும் அன்னபூரணியின் வீட்டைக் கடந்து ஒழுங்கையால்தான் பரஞ்சோதி போக வேண்டும்.

பள்ளிக்கூட நாட்களில் சைக்கிளில் போகும் பரஞ்சோதி அன்னபூரணியின் வீட்டுக்கு முதல் மூன்று வீடுகளுக்கருகில் வரும் போதே சைக்கிள் மணியை அடிப்பார் அன்னபூரணியின் வீடடைக் கடக்கும் போது ஒரு முறை சைக்கிள் மணியை அடிப்பார். இது அன்னபூரணிக்குக் கொடுக்கும் சமிக்ஞை. சைக்கிளில் அன்னபூரணி வீட்டைக் கடந்து போய் ஒழுங்கையும் பள்ளிக்கூட வீதியும் சந்திக்கும் இடத்தில் வேலியோடு இருக்கும் பெரிய கல்லொன்றில் இடதுகாலை வைத்தபடி அன்னபூரணியின் வருகைக்காக திரும்பிப் பார்த்தபடியே நிற்பதும் அண்ணபூரணி அருகில் வந்ததும் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து சிரிப்பார்கள். பேசிக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் காதல் கடிதங்கள் கைமாறும்.இருவருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாதது போல் அன்னபூரணி மெதுவாக முன்னால் போக பரஞ்சோதி இரண்டு மீற்றர் பின்னால் சைக்கிளில் போய்க் கொண்டிருப்பான்.

அவர்களின் வகுப்புத் தோழர்களுக்கும் தோழிகளுக்கும் இவர்களின் காதல் மெல்ல மெல்லத் தெரியத் தொடங்கியது.

இவர்களின் வகுப்பில் படித்த பெண்பிள்ளைகளில் அன்னபூரணியைத் தவிர்ந்த மற்றைய பிள்ளைகள் எல்லோரும் பூப்பெய்திவிட்டார்கள். ஆனால் அன்னபூரணிக்கு அது இன்னமும் நடக்கவில்லை. அவளுக்கு வயதும் பதினாறைக் கடந்து கொண்டிருந்தது. ஆனால் அன்னபூரணி பருவமங்கைக்கு உரிய உடல் தோற்றத்தில் அழகான பெண்ணாக வளர்ந்து கொண்டிருந்தாள். நாளை நடக்கும் நாளை நடக்கும் என அன்னபூரணியின் பெற்றோர் ஏக்கத்துடன் காத்திருந்த போதும் அன்னபூரணி பூப்பெய்தவில்லை. அவளின் உடலில் என்ன குறை என்பதைக் கண்டறிய மருத்துவர்களை அவளின் பெற்றோர் சந்தித்தும் அவர்கள் கொடுத்த மருந்தை அவளுக்குக் கொடுத்த போதும் எந்தவிதமான மாற்றமும் அவளின் உடலில் ஏற்படவே இல்லை. சும்மா மெல்லும் ஊர்வாய்க்கு அவல் கிடைத்தது போல் அன்னபூரணியின் நிலை அவலானது. அன்னபூரணியும் தனது நிலையை நினைத்து கவலைப்படத் தொடங்கினாள்.

அன்னபூரணியின் பெற்றோர் ஒன்பதாம் வகுப்புடன் அவளைப் பாடசாலையிலிருந்து நிறுத்திக் கொண்டனர். அவளுடைய தோழிகளில் சிலர் பத்தாம் வகுப்பிற்காக வேறு பாடசாலைகளுக்குச் செல்லத் தொடங்கினர். பரஞ்சோதி தொடர்ந்து வேறு பாடசாலையில் சேர்ந்து படிக்கத் தொடங்கினான். மாலை நேரங்களில் தந்தையின் அச்சுக்கூடத்தில் தந்தைக்கு உதவி செய்து வந்தவன் பன்னிரண்டாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக் அச்சுக்கூடத்திலேயே முழுநேரமும் வேலை செய்யத் தொடங்கினான். அன்னபூரணி பூப்பெய்தாதவளா என வியக்கும் அளவுக்கு அவள் அழகாக பருவ மங்கையாக காட்சியளித்தாள். இந்தப் பேரழகிக்கா இந்த நிலை என பலர் பரிதாப்படவும் செய்தனர். பரஞ்சோதி அன்னபூரணியின் இரகசிய காதல் எல்லோருக்கும் தெரியத் தொடங்கிய போது சிலர் எள்ளிநகையாடினர். அன்னபூரணியின் வீட்டில் ஒரு மௌனப் போராட்டமே நடந்தது. தன் நிலை உணர்ந்த அன்னபூரணி ஆழமாக வேரூண்றியிருந்த காதல் நிறைவேறுமா நிறைவேறாதா எனத் தடுமாறத் தொடங்கினாள். அன்னபூரணியின் குறையை சத்திரசிகிச்சை மூலம் சரிபடுத்த முடியாதென மருத்துவர்கள் சொல்லிய போது அன்னபூரணி குடும்பம் மீள முடியாத வேதனையில் ஆழ்ந்தது. அன்னபூரணியின் தங்கை பாக்கியவதியும் பூப்பெய்திவிட்டாள்.

தொடர்ச்சி 24ம் பக்கம்....

Akchaya Digital Photography& Decoration

Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration

உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.

Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474







# சிவப்பணியாளர் சிவஞானசுந்தரம் தம்புவுக்கு இலண்டனில் சமுகசீலர் விருது



'தம்பு' என அன்பாக அனைவராலும் அழைக்கப்படும் திரு. சிவஞானசுந்தரம் தம்பு அவர்கள் இலண்டன் சைவஉலகிலும், தமிழ் உலகிலும் சேவையாளராகப் போற்றப்படுபவர். பொன்னரங்கம் சுன்னாகத்தில் 1958ல் பிறந்து கண்டி புனித சில்வஸ்ரர் கல்லூரியில் தனது உயர்தரவகுப்பு வரைபடித்தவர். திரு சிவஞானசுந்தரம் தம்பு, தனது பெரியப்பா திரு தம்பு சிவபாலசுப்பிரமணியம் அவர்களின் ஆன்மிக வழிகாட்டலால் ஈர்க்கப்பட்டுத் தனது எட்டாவது வயதில் கண்டி செல்வவிநாயகர் கோவிலில் சிவனடியார்கள் உடன் சிவவழிபாடு தொடங்கி, 22வயது வரை கண்டியிலும், தொடர்ந்து இலண்டனிலும், 49 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகச் சிவப்பணியாற்றி வருகின்றார். இதனைப் பாராட்டி இவருக்கு 19.04.2015 ல் இலண்டனில் நடைபெற்ற சைவத்திருக்கோயில்கள் ஒன்றிய மாநாட்டில் இவருக்கு சமூகசீலர் விருதினை கூனம்பட்டி ஆதீனம் இராஜலிங்கம் மாணிக்கவாசக சுவாமிகள் வழங்கினார். ஈலிங்துர்க்கையம்மன் ஆலய அறங்காவலர்களில் ஒருவரான ஸ்ரீரங்கன் இவரின் சேவைகளை விளக்கி உரையாற்றி, இவர் இவ்விருதுக்கு எல்லாவிதத்திலும் தகுதியுள்ளவர் என்பதைச் சிறப்பாக எடுத்துரைத்தார்.

இவர் 1992இல் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கததின் சிவப்பணியில் இணைந்து. 2002முதல் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகப் பணியாற்றினார். திரு சிவஞானசுந்தரம் தம்பு, இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் வெளியீட்டுச் செயலாளராகி (Publication secretary), தொடர்ந்து 2010ல் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் உபதலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். தற்பொழுது துணைப் பொருளாளராகத் தொடர்ந்து பணிசெய்து வருகின்றார். இலண்டன் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் தொடங்கிய காலம் முதல் அதன் வளர்ச்சியில் பங்கேற்ற திரு சிவஞானசுந்தரம் தம்பு அவர்கள் 2010ல் இலண்டன் திருக்கோயில் ஒன்றியத்தின் முகாமைத்துவக்குழு உறுப்பினராகவும் சிறப்புப் பணியாற்றினார். இவரின் சிவப்பணிகளாலும் தமிழ்ப்பணிகளாலும் இக்காலகட்டத்தில் இலண்டன் தமிழ்ச்சமுதாயத்தின் அன்பையும் மதிப்பையும் பெற்றார். தமிழகத்தின் குன்றக்குடி ஆதீனம், மதுரைத் திருஞானசம்பந்த ஆதீனம், தருமபுரம் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், போரூர் ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், பழனி ஆதீனம், சிதம்பரம் மௌனகுரு ஆதீனம், கௌமார மடம் உட்படப் பல தமிழக ஆதீனங்களாலும் சைவநிறுவனங்கள் சைவப்பெரியார்களாலும். பழனி திருச்செந்தூர் போன்ற அறுபடைவீடுகளில் பலஇலட்சக்கணக்கான மக்கள் முன் சிவனருளால் இவர் மதிப்பளிப்புக்களைப் பெற்றார். இலண்டனில் செய்யும் சிவப்பணிகளுக்காகவும் தமிழ்ப்பணிகளுக்காகவும் பழனிஆதீனம் “சிவநெறிச் செல்வர்” என்னும் சிறப்புப்பட்டத்தை 2010ல் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் முன்பாக வழங்கினார். சென்ற வருடம் சர்வதேச இந்து இளைஞர் மன்றம் இலண்டனால் 'சைவசமயச் சுடரொளி' என்னும் பட்டம் வழங்கப்பெற்று இவர் கௌரவிக்கப்பட்டார். இவர் தாயகத்தில் நல்லை ஆதீனம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், சுன்னாகம் மயிலணி சிவன் கோயில், சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் கோயில், சுன்னாகம் சிவபூதராயர் கோயில் என்பவற்றுடன் பலவழிகளில் நெருங்கிப் பணியாற்றிச் சிவப்பணி செய்து வருகின்றார்.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



**கன்ஷிகா. தீபன்**
27.05.2015

தீபன் கன்ஷிகா
தாயகத்தில் புங்குடுதீவினைப் பிறப்பிடமாகவும்
யேர்மனியில் சால்புறுக்கனை வதிவிடமாகவும் கொண்ட தீபன் பிரவீணா தம்பதிகளின்
செல்வப்புதல்வி கன்ஷிகா தனது முதலாவது பிறந்தநாளை அப்பா அம்மா அண்ணா கிருஷான் காரிஷான் அப்பப்பா அப்பம்மா தாத்தா அம்மம்மா மாமாமார் மாமிமார் பெரியப்பாமார் பெரியம்மாமார் சித்தப்பா சித்தி மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## 25 வது திருமண நாள் வாழ்த்துக்கள்



**04.06.2015**

**கலாதரன் குலமதி**
தம்பதிகள்
தாயகத்தில் இணுவிலைப்பிறப்பிடமாகவும்
யேர்மனியில் சுவற்ராவை
வதிவிடமாகவும் கொண்ட
கலாதரன் குலமதி தம்பதிகளை
வள்ளுவன் கண்ட வாழ்வு நெறியில்
இன்றுபோல் என்றும் வாழ்ந்திட
பிள்ளைகள் உற்றார் உறவினர்கள்
நண்பர்கள் வாழ்த்துகின்றனர்.

**Tel:02304 910 55 87**

## 25 வது திருமண நாள் வாழ்த்துக்கள்



**திரு இராசேந்திரம்,**
( புங்குடுதீவு
6ம் வட்டாரம்)
**திருமதி இரஞ்சிதா**
(வேலணை மேற்கு
6ம் வட்டாரம்)
தம்பதிகிளின் 25வது
வருட திருமணநாள்
வாழ்த்துக்கள்

**26.05.2015** வாழ்க்கை எனும் படகில் வண்ணமுறக் கால்பதித்து, வெற்றி விழாக்காணும் எம்மினிய பெற்றோருக்கு, வாழ்த்துக்கள். வாழும் வாழ்வதனை வண்ணமுற வகுத்து, நேர் கொண்ட பாதையில் நெறிமுறை தவறாமல், மக்கள், மருமக்கள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் சீராக அரவணைத்து, இன்பமாக வாழ்வது கண்டு, மகிழ்கின்றோம். இறைவன் அருளுடன் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**பிள்ளைகள் மருமகன் சகோதரர்கள்.**

Tel: 02333 71471 Ennepetal, Germany


திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!

KS Services



அழைப்பிதழ்கள் முதல் திருமணத்தில்
அன்பளிப்பு வழங்கும் வரை
மணவறை அலங்காரம் மங்கலவாத்தியம்
ஒளி ஒலி உணவு சிற்றூண்டி டீஜே (DJ)
என அனைத்தும் நம்வசம்

KS Services

Tel. 0049 21025300247 Mobil. 004917610247194 / 00491722192035



KS Services
Berliner Str. 49- 40880 Ratingen

E-Mail. info@ksservices.de
Web. www.ksservices.de












# கேன்ஸின் உயர்ந்த விருதை வென்ற முதல் ஈழத் தமிழர் படம் ”தீபன்”

உலக அழகி ஐஸ்வர்யராவ் 2002 முதல் வருடா வருடம் இந்த சர்வதேச கேன்ஸ் திரைப்படவிழாவில் பங்கு கொள்வதும் சிவப்பு கம்பளத்தில் நடக்கும்போது ஐஸ்வர்யா ராய் தவறாமல் பறக்கும் முத்தம் கொடுப்பதும் வளமை.

இன்று அந்த அழகுக்கும் அப்பால் கலையால் அந்தச் சிகப்புக் கம்பளத்தில் ஓர் ஈழத்தமிழன் நடந்து வந்து நம்மவர்க்கு பெருமை சேர்த்த நிகழ்வு நடந்துள்ளது.







தீபன் (Dheepan) திரைப்படம்

பிரெஞ் பிரபல திரைப்பட இயக்குனர் ஷாக் அவ்தியா(த்) இயக்கிய 'தீபன்' திரைப்படம், 2015 கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படத்துக்கான 'பாம்தோர்' (தங்கப்பனை) விருதை வென்றிருக்கின்றது.

பிரான்ஸ் நாட்டுக்கு அகதியாகக் குடியேறும் மூன்று ஈழத் தமிழ் அகதிகளின் வாழ்க்கைப் போராட்டத்தை மையமாகக் கொண்டது இத்திரைப்படம். புதிய நாடு, அந்நிய சமூகம் அங்கே இவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இத்திரைப்படம் பேசுகின்றது.

இதில் ஈழத்தமிழ் எழுத்தாளரான ஷோபாசக்தி நாயகனாகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த மேடை நாடகக் கலைஞர் காளீஸ்வரி நாயகியாகவும் நடித்துள்ளனர்.

இந்த சர்வதேசப் போட்டியில் ஹாலிவுட்டின் முன்னணி நட்சத்திரங்கள் நடித்த பல திரைப்படங்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு, 'தீபன்' சிறப்பு விருதினைப் பெறுகின்றது.

ஈழத் தமிழர்களின் வாழ்க்கையை முறையாக பதிவு செய்த முதல் ஐரோப்பியத் திரைப்படம் இது. ஈழத்தமிழரின் அவல வாழ்வியலைக் கூறும் திரைப்படம் ஒன்று உலகின் மிகப்பெரிய விருதுக்குத் தேர்வாகியிருப்பது இதுவே முதல்முறையாகும்.

## நம்மவர்



படத்தில் நாயகனாக ஜேசுதாசன் (ஷோபாசக்தி) அந்தோணி தாசன், கதையின் நாயகியாக காளிஸ்வரி சீறிநிவாசன், சிறுமியின் வேடத்தில் கிளாடின் விநாசித்தம்பி நடித்திருந்த இந்தப் படம் பிரான்ஸ் நாட்டிற்கு அகதியாக தஞ்சம் கோரி செல்லும் மூன்று தனித் தனி ஈழத் தமிழர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை பார்ப்பவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைக்கும் விதமாக படம் காட்சிபடுத்தப் பட்டிருந்தது. பிரான்ஸ் நாட்டிற்கு செல்லும் மூன்று பேரும் ( நாயகன், நாயகி ,மற்றும் சிறுமி ) தற்காலிகமாக தங்களை ஒரு குடும்பமாக இணைத்துக் கொள்கிறார்கள் அங்கு அவர்கள் படும் அவலங்கள் மற்றும் துயரங்களை வலியுடன் எடுத்துக் கூறுகிறதுதீபன்.

இலங்கைத் தமிழர்களை பற்றி துணிச்சலாக ஒரு படம் எடுத்து அவர்களின் உண்மை வலிகளை பதிவு செய்ததற்காக இயக்குனருக்கு ஒரு சபாஷ்..

பிற நாடுகளுக்கு தஞ்சம் கோரி செல்பவர்களின் மனநிலை அவர்களின் வாழ்க்கை முறை பற்றி விரிவாக எடுத்துக் கூறிய இந்தப் படத்தை கேன்ஸ் திரைப்பட விழாவில் பல முன்னணி விமர்சனகர்கள் படத்தைப் பார்த்து விட்டு அதில் நடித்தவர்களையும் படத்தையும் பெரிதும் பாராட்டியது குறிப்பிடத் தக்கது.

அழகால் அல்ல அரும் கலையால் பெரும் வெற்றிபெற்ற நம் கலைஞர்களை வெற்றிமணி வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றது.

KSR BRIDAL ARTIST

KSR BRIDAL

தங்கத்தில் வைரம் பதித்ததுபோல் உங்கள் அழகுக்கு
அழகூட்ட எம்மை நாடுங்கள்.
மணப்பெண் அலங்காரம்.
மாலைகள் மற்றும் பூச்செண்டுகள் அனைத்தும் ஓர் இடத்தில்.

**Make up**......
Bridal, wedding, puperty, party
Christian Make up......
**Threading** Eye brow Face.....
**Facial**..........

**hair style**
**hair straightening**
**hair curls**

**Video & Foto**
E-mail : **kajas.makeup@hotmail.de**
facebook : **KSR Bridal Artist**
**KSR BRidal**
**Tel:02323 39 88 470**
contact : **015236649870**









# சுவரில் ஒட்டிக்கொள்ள வோல்பேப்பர் ரிவி! wallpaper TV.

என்ன என்னமோ நடக்குது நாம் நினைப்பது எல்லாமே சாத்தியம், என சத்தியம் பண்ணிச் சொல்லும் காலம் நெருங்குகின்றது.

வோல்பேப்பர் தொலைக்காட்சி சுவரில் ஸ்டிக்கர் போன்று ஒட்டிக்கொள்ளும் தொலைக்காட்சி அறிமுகம் இது Sticker விட மெல்லியதானது. இந்த wallpaper Tv.

எல்.ஜி. (LG) நிறுவனம் ஒரு மில்லி மீட்டர் தடிப்பில் புதிய தொலைக்காட்சி ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. இந்த தொலைக்காட்சி சுவரில் ஸ்டிக்கர் போன்று ஒட்டிக்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. கொரியாவில் நடந்த வணிக நிகழ்வு ஒன்றில் இந்த புதிய தொலைக்காட்சி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

O.L.E.D என்ற புதிய தொழில்நுட்பத்தைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த தொலைக்காட்சியின் மொத்த எடை வெறும் 1.9 கிலோ கிராம் தான். ஒரு தொலைக்காட்சி ஓரமாக இருந்தாலே நேரம் களவாடப்பட்டுவிடுகிறது. இனி சுவரே தொலைக்காட்சியானால் வீடே நாடகமாகிவிடும்.

இப்போது இருக்கும் தொலைக்காட்சிகளுடன் ஒப்பிடும் போது மிக குறைந்த மின்சாரமே இதற்கு போதுமானது. தேவை ஏற்படும் போது ஸ்டிக்கரை உரித்து எடுத்துக்கொள்ள முடியும். இதன் விலை சொல்ல முடியாது. ஒரு சிறு வீடே வாங்கிவிடலாம்?


தற்போது சந்தையில் இருக்கும் எல்.ஜி.யின் மெல்லிய வகை தொலைக்காட்சி 4.4 மீல்லி மீட்டர் தடிப்பு கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.



**Sri lanka இல் விடுமுறையைக் கழிக இதோ சொகுசான இல்லம்!**

கொழும்பு கொட்டாஞ்சேனையில் **(Colombo 13)** புதிதாகக்கட்டப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசான வீடு உண்டு. வீட்டின் படமும் தரமும் பார்க்கவேண்டுமா **www.airbnb .com colombo** 13 இணையத்தளத்திற்கு சென்று பாருங்கள்.

**Lovely brand new home 3BD 3 Bathroom**

தொடர்புகளுக்கு:
Mrs.Genevive Antinipillai (Canada)
Jennyanton23@gmail.com
Tel: 001 64 72 15 8444 (Canada)
Germany : Mr.Anton.Handy:0152 15 170 559



ASIA EXPRESS FOOD
IMPORTER IN ASIAN & AFRICAN PRODUCTS
Kilbystraat 1, 8263 CJ Kampen
The Netherlands
Tel.: +31 (0)38-3329082
Fax: +31(0)38-3329045
info@asiaexpressfood.nl
www.asiaexpressfood.nl

# யாழ்ப்பாணத்தில் ஐந்துநாட்கள் சிறப்புற இடம்பெற்ற
# இயல் இசை நாடக விழா

தமிழ்க்கிழார்

யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி முன்னெடுத்த இயல் இசை நடன நாடக விழா கடந்த ஏப்பிரல் 30 ஆம் திகதி தொடக்கம் மே 04 ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் கோலாகலமாக இடம்பெற்றது.

தினமும் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுகள் இரவு பத்து மணிவரை இடம்பெற்றன. வெள்வேறு இரசிகர் மட்டத்தினரை மையப்படுத்தி வெள்வேறு சுவையுடைய இயல் இசை நடன நாடக நிகழ்வுகள் இந்த ஐந்து நாட்களும் இடம்பெற்றமையால் எந்நேரமும் மண்டபம் இரசிகர்களால் நிரம்பியிருந் தமையை அவதானிக்க முடிந்தது.

ஐந்து நாட்களிலும் ஏறத்தாழ முந்நூறுக்கும் மேற்பட்ட வளரும் கலைஞர்களும் தேர்ச்சி பெற்ற கலைஞர்களும் இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்திருந்தனர். தினமும் மங்கல இசையுடன் ஆரம்பித்த நிகழ்வுகள் நாடக நிகழ்வுடன் நிறைவு கண்டன. ஈழத்தின் பிரபல தவில் நாதஸ்வர வித்துவான்கள் மங்கல இசை நிகழ்வில் பங்கேற்றனர். இதேவேளை நடனநிகழ்வுகளை சுதர்சினி ஹரன்சன், பத்மினி செல்வேந்திரகுமார், ரஜிதா சின்னத்துரை, ஸ்ரீதேவி கண்ணதாசன், பாலினி கண்ணதாசன், ஜெயந்தி சுகிர்தன், பிரியதர்சினி வாகீசன் ஆகியோர் நட்டுவாங்கம் மேற்கொண்டு நெறிப்படுத்தியிருந்தனர்.



நாடகங்களின் வரிசையில் புலவர் முத்துராசரட்ணத்தின் 'இலங்கை வேந்தன்', கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழக நாடக மன்றத்தினரின் தியாகச் சுடர், ம.தைரியநாதன் குழுவினரின் பூதத்தம்பி, இணுவில் இளந்தொண்டர் சபையினரின் வள்ளி திருமணம், நாட்டார் வழக்கியல் கழகத்தினரின் சத்தியவான் சாவித்திரி என்பன மேடையேறின.

என்ற நாடகம் யாழ்ப்பாணத்தில் மேடையேறிப் புகழ் பெற்றிருந்தது. இதில் இலங்கை வேந்தன் இராவணனாக வேடமிட்ட யாழ். நீராவியடியச் சேர்ந்த ஆசிரியர் இராதாகிருஷ்ணன் மிகச் சிறப்பாகத் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தார்.



இலங்கை வேந்தன் இராதாகிருஷ்ணன் சிவசக்தி தம்பதியர்





வடபுலத்தின் தேர்ச்சி மிக்க மூத்த இசைக்கலைஞர்கள் வளர்இளங் கலைஞர்களோடு சங்கமித்தமை இப்பிரதேச இசை வளர்ச்சிக்கு நல்லதோர் அறிகுறியாகக் கொள்ளத்தக்கது. அத்துடன் கலையை வளர்க்கும் உன்னத நோக்குடன் எந்தவொரு கலைஞரும் இங்கு மேடையேற்றப்பட்ட நிகழ்வு தொடர்பாகச் சன்மானம் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை என இலங்கை வேந்தன் இராதாகிருஷ்ணன் பெருமையாகக் குறிப்பிட்டார். இது மிகவும் பாராட்டப்படவேண்டிய கைங்கரியம் ஆகும்.மூத்த குரலிசைக் கலைஞர்களான தவநாதன் றொபேட், பங்கயற்செல்வி முகுந்தன், கனகாம்பரி சிவனேஸ் வரநாதன் மற்றும் ஹம்சத்வனி சோமசுந்தரக் குருக்கள் முதலியோரும் பிரபல நாதஸ்வரக் கலைஞர்களான பி.எஸ். பாலமுருகன், பிச்சையப்பா ரஜீந்திரன், வயலின் கலைஞர்களான அ.ஜெயராமன், சு.கோபிதாஸ், கா.குகபரன், லயவாத்தியக் கலைஞர்களான டாக்டர் சி.மகேந்திரன், நல்லை க.கண்ணதாஸ், சி.துரைராஜா, க.நந்தகுமார், ப.சியாம்கிருஸ்ணா, சதா.வேல் மாறன், எஸ்.சிவசுந்தரசர்மா, எஸ். சதீஸ்குமார், வல்வை ஜி.வசந் மற்றும் ந.செல்வச்சந்திரன் போன்றோரும் மற்றும் பலரும் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தமை இரசிகர்களுக்கு நல்விருந்தாக அமைந்திருந்தது.

1990களில் புலவர் முத்து இராசரட்ணம் எழுதி இயக்கிய இலங்கை வேந்தன் அன்றுமுதல் அவரது நண்பர்கள் இலங்கை வேந்தன் எனப்பட்டம் சூட்டி அவரை அழைக்கலாயினர். தன்னை எல்லோரும் இவ்வாறு அழைப்பதனால் தன் வாழ்வில் இலங்கை வேந்தன் பெயரில் கலைக்கல்லூரி ஒன்றை நிறுவ ஆசை கொண்டார் இராதாகிருஷ்ணன்.

பல சோதனைகளைத் தாண்டி 2013 ஆம் ஆண்டில் இலங்கை வேந்தன் என்ற பெயரில் கலைக்கல்லூரியை அமைத்துத் தனது கனவை நனவாக்கினார்.



இலங்கை வேந்தன் நாடகத்தில் நடனநெறியாள்கை சார்ந்த பங்களிப்பு நல்கிய ரஜிதா சின்னத்துரைக்கான கௌரவிப்பு


நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
சுபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!
தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"
வீட்டுக்கடன் 1,6% வட்டிவீதத்திலிருந்து
உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், 60.000€ வரை உடனடி கடன் உதவி!
தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/13029415
0231/10876361
0152/53961138
Th. Gobinath

## மகாமுனிவன் 19ம் பக்கத் தொடர்ச்சி...

அவர்களின் காதில் கேட்டது பாதி கேளாதது பாதியாக அலி என்று ஊரில் சிலர் சொல்லிய போது அன்னபூரணி மௌனமாக அழுதாள். இந்தப் பிள்ளைக்கு ஏன் இந்த நிலை வந்தது என்று துயரப்பட்டவர்களும் உண்டு. ஒரு நாள் அன்னபூரணி கட்டிலில் படுத்தபடி தனது நிலையை நினைத்து விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். பரஞ்சோதிக்கும் தங்கள் மகளுக்கும் ஏற்பட்ட காதலை அறிந்த தாய் மகளுக்கு பக்கத்தில் போய் உட்கார்ந்தாள். மகளின் காதலை நினைத்து அவள் சங்கடப்பட்டாள். தன்னை நொந்து அழும் மகளின் நிலை கண்டு தாயின் பெற்ற வயிறு துடித்தது. மகளின் அழுகையை ஆறுதல் படுத்தப் போனவள் அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியாது கண்கலங்கி நின்றாள். மகளின் காதல், அவளின் உடல்நிலை,ஊரார் வாய்க்கு வந்தபடி கூசாமல் சொல்லும் வார்த்தைகள், விம்மி அழும் மகள் என ஒரு மனப் போராட்டமே தாயை தீயாய் வேக வைத்தது. மனதைத் திடப்படுத்திய தாய், மகளிடம். „அழாதையம்மா யார் செய்த பாவமோ தெரியாது உனக்கு இந்த நிலையாகிப் போச்சுது“என்றவளுக்கு, „நீங்கள் யாரும் பாவம் செய்யவில்லையம்மா நான்தான் பாவம் செய்தவள் நான்தான் பாவி“என்ற பதிலால் தாய் துவண்டு போனாள். சில நிமிட மௌனத்திற்குப் பிறகு„„பிள்ளை இதை ஒரு குறையாக எடுத்து இப்படிக் கருகிச் சாகாதே, அழாதையம்மா. ஒவ்வொரு நாளும் நீ இப்படி துவண்டழுவதை எங்களால் பார்க்க முடியவில்லை ஆனால் ஒரு விசயமம்மா நீ பரஞ்சோதியை விரும்புவது அப்பாவிற்கும் எனக்கும் தெரியும் அது.........“

தாய் மேலே எப்படிச் சொல்வது என்று சங்கடப்பட்டாள். இதை ஒரு குறையாக நினைக்காதே என்று சொன்ன சில நிமிடத்திலேயே அந்தக் குறையைச் சுட்டிக்காட்டி பரஞ் சோதியை கல்யாணம் செய்வது எந்தவிதத்திலும் சரிபட்டு வராது என்று எப்படிச் சொல்வது என்று குழம்பிப் போனாள். அன்னபூரணியின் நிலையால், அவளை ஆறுதல்படுத்தும் வார்த்தையானாலும் சரி. நிலைமையை உணர வைக்கும் வார்த்தையானாலும் சரி அவளின் மேல் நெருப்பை அள்ளிக் கொட்டுவது போல்தான் இருக்கும் என்பதை உணர்ந்தாள். ஆனால் எதுவாக இருந்தாலும் மகளிடம் பேசித்தான் ஆக வேண்டும் நிலை அன்னபூரணியின் தாய்க்கு.„பிள்ளை பரஞ்சோதி என்ன சொன்னவர்....... கல்யாணம் செய்வது பற்றி ஏதாவது சொன்னாரா“

„ நாங்கள் அவையிட்டை போய் எப்படிக் கேட்க முடியும்“

அன்னபூரணியிடம் இருந்து அழுகையைத் தவிர பதில் எதுவுமில்லை. தாயும் எதுவுமே பேசாது எழுந்து போய்விட்டாள். தன்னைப் பரஞ்சோதி கல்யாணம் செய்வாரா இல்லையா என்பதை அவளாலேயே தீர்மானிக்க முடியவில்லை. அவளுக்குள் முடிவில்லா மனப் போராட்டம். அவள் வீட்டிலோ மௌனழுகைப் போராட்டம்ஆனால் பரஞ்சோதி வீட்டிலோ எரிமலை குமுறிக் கொண்டி ருந்தது. வழமையாக பரஞ்சோதியும் தந்தையும் அச்சுக்கூட வேலையை முடித்துக் கொண்டு ஒன்றாகவே வீட்டுக்க வருவார்கள். ஆனால் அன்று வழமைக்கு மாறாக பரஞ்சோதியின் தந்தை தான் முன்பு போவதாகவும் வேலையை முடித்துப் போட்டு அச்சக்கூடத்தை பூட்டிப் போட்டு வரும்படி கூறிவிட்டுப் போய்விடுகிறார்.இரவு எட்டு மணிக்கு வீட்டுக் கேற்றைத் திறந்து கொண்டு போகும் போதே பரஞ்சோதியின் அக்கா மொழியரசியின் மகள் துஸ்யந்தியின் குரல் „மாமா வந்திட்டார்“ என்று கேட்டது. துஸ்யந்திக்கு ஐந்து வயதிருக்கும். துஸ்யந்தி ஓடி வந்து பரஞ்சோதியை கட்டிப்பிடித்தாள். அவளைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்த பரஞ்சோதி அங்கு வழமைக்கு மாறான இறுக்கமான முகத்துடன் தமக்கை இருப்பதைக் காண்கிறான். திடீரென்று தமக்கை வந்திருப்பதும் அவள் சிரிப்பு எதுவுமில்லாது இறுகிய முகத்துடன் இருப்பதைக் கண்ட பரஞ்சோதி துஸ்யந்தியை இறக்கிவிட்டபடியே“ என்னக்கா விசேசம் திடீரென்று வந்திருக்கிறியள்“ என்று கேட்க மொழியரசி தாயைப் பார்க்கிறாள். என்னவாக இருக்கும் என்று பரஞ்சோதி யோசித்த போதும் அன்னபூரணியின் விசயம் தமக்கைக்கு தெரிந்தவிட்டதோ எனவும் யோசித்தவாறு விறாந்தை அரைச்சுவரில் உட்கார்ந்தான். சில நிமிடங்கள் யாருமே பேசவில்லை. அச்சகத்திலிருந்து நேரத்தோட வந்த தந்தையைத் தேடியது பரஞ்சோதியின் கண்கள்.அவர் அறைக்குள்ளிருந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். தாய் கண்களால் ஜாடை காட்ட தமக்கை தொண்டையை செருமிக் கொண்டு „ சோதி உனக்கு ஒரு சம்மந்தம் வந்திருக்கு கொத்தான்ரை சொந்தக்காரப் பிள்ளை, நல்ல வடிவு சீதனமாக கொக்குவிலில் வீடு கிளிநொச்சியில் நெல்வயல் எல்லாம் தருவினம் நல்ல சம்மந்தம் நீ என்ன சொல்லுறாய் உனக்குச் சம்மதந்தானே“என தமக்கை கேட்டதும்„„அக்கா எனக்கு கலியாணம் பேசச் சொல்லி நான் கேட்டனானே நான் இப்ப கலியாணம் செய்யிற எண்ணத்தில் இல்லை. அதுமட்டு மில்லையக்கா தங்கச்சி சாவித்திரிக்கு செய்து வைத்ததன்பின் யோசிப்பம் „என்கிறான் பரஞ்சோதி.

ஆனால் தம்பியாரின் மனதில் என்ன இருக்கிறது என்பதை வெளியே கொண்டு வர வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தாள் மொழியரசி.„சாவித்திரி இப்ப சின்னப்பிள்ளை. அவளுக்கு கலியாணம் செய்து வைக்க நாள் கிடக்குது, உனக்கு வயது வந்திட்டுது, பொம்பிளையை ஒரு நாளைக்கு கோயில்ல வைத்துப் பார் பிறகு முடிவைச் சொல்“ என்று தமக்கை சொல்லும் முன்பே, „அக்கா வேண்டாமல் என்றால் விட்டுவிடன் ஏன் கட்டாயப்படுத்துகிறாய் „என்று பரஞ்சோதி சொன்ன போதும் அடுத்து தமக்கையிடமிருந்து அன்னபூரணியின் பெயர் வர வேண்டும் என விரும்பினான். பிரச்சினையைச் சந்தித்து அதற்கு முடிவு கட்ட வேண்டும் என்றும் விரும்பினான்.

அவன் நினைத்தது போலவே“ ஏண்டா அப்படியென்றால் அந்த இரண்டுங்கெட்டான் அன்னபூரணியைத்தான் செய்யப் போகிறியா“ என தமக்கை கேட்டதும், அன்னபூரணியை இரண்டுங்கெட்டான் என்று கேட்டதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.அவன் வேகமாக கொஞ்சம் கோபமாக „ஓம் அவளைத்தான் கலியாணம் செய்யப் போகிறன்“ என்றவுடன் பரஞ்சோதியின் தாய் இருந்த இடத்திலிருந்து எழுந்தாள், எழுந்தவள் „ஏண்டா உனக்கு விசர் கிசர் பிடிச்சிட்டுதா அவள் பொம்பிளையாடா எங்களுக்கு பேரன் பேத்தியை பெத்துத் தர அவளால் முடியுமா சொல்லடா“ என்று தாய் சொல்லி முடிக்குமுன் „டேய் மலடியாகவிருந்தால்கூட பரவாயில்லை அவள் அலி...ச்சீ..நீ சொல்வதைக் கேட்க எங்களுக்கே வெட்கமாயிருக்கு “ தமக்கை சொல்ல பரஞ்சோதிக்கு அழுகையும் ஆத்திரமும் ஒன்றாகி கோபத்தின் எல்லைக்கே போய்விட்டான். „அக்கா அவள் என் காதலி. பிள்ளை பெற்றுத் தர வேண்டும் என்பதற்காக அவளைக் காதலிக்கவில்லை. அவளால் அது முடியாது என்று தெரிந்த பின்பும் அவளைக் காதலிக்கிறேன். அவளுக்கு நான் துரோகம் செய்ய மாட்டன், அவள்தான் மனைவி“ என்றவுடன் தமக்கை „அவள் சாமத்தியப்பட வில்லையடா அது உனக்குத் தெரியுமாடா „என்றவுடன் பரஞ்சோதி“தெரியும் அதற்காக அவளை வெறுக்கமாட்டன் உடம்பால் வாழும் வாழ்க்கை மட்டுந்தான் வாழ்க்கையல்ல மனதாலும் வாழலாம்“என்று சொன்னவன் அடுத்து தமக்கையைப் பார்த்து கேட்ட கேள்வி தந்தையை அறையைவிட்டு வெளியே வரச்செய்தது.

„அன்னபூரணியின் நிலையைப் போல அக்கா உங்களுக்கோ தங்கச்சி சாவித்திரிக்கோ ஏற்பட்டிருந்தால் எங்கள் குடும்பம் என்ன பாடுபட்டிருக்கும் அதைப் பற்றி யோசித்தீர்களா ஒரு பெண்ணைப்பற்றி பெண்ணான நீங்களே இப்படிப் பேச உங்களுக்கு கேவலமாகத் தெரியவில்லையா“ இதுவரையும் அறைக்குள்ளேயிருந்து பொறுமையாக கேட்டுக் கொண்ட தந்தை „இனி யாருமே இதைப்பற்றி பேச வேண்டாம்,அவன் சொல்வதிலும் நியாயமிருக்கு சரியோ பிழையோ அவன் முடிவுதான் சரியானது“என்றவுடன் எல்லோரும் வாயடைத்துப் போய் நின்றார்கள். தந்தையை நன்றியோடு பரஞ்சோதி பார்த்தான். பரஞ்சோதி அன்னபூரணியின் வீட்டிலேயே அன்னபூரணிக்கு தாலி கட்டி மனைவியாக்கிக் கொண்டான். சில மாதங்கள் சென்றன. ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்ப்போமா என அன்னபூரணி பரஞ்சோதியிடம் கேட்டாள்.ஒரு அனாதை இல்லத்திலிருந்து செல்வராணி என்ற பெண்பிள்ளையைத் தத்தெடுத்தார்கள். அவள் வளர வளர கூடவே அன்னபூரணிக்கு பயமும் வளர்ந்தது.தனக்கு ஏற்பட்டது போல் அவளுக்கும் ஏற்பட்டுவிடுமோ எனப் பயந்தாள்.செல்வராணி பூப்படைந்த போது அன்னபூரணிக்க அவள் கொண்டிருந்த பயம் விலகியது.


செல்வராணிக்கு திருமணம் முடிந்து மணமக்களை மணமகன் வீட்டுக்கு அனுப்பிய போது தந்தையையும் தாயையும் விழுந்து வணங்கிய செல்வராணி தந்தையின் பாதங்களை பிடித்தபடியே குழுங்கி குழுங்கி அழுதாள்.கண்ணீரால் தந்தையின் பாதங்களை நனைத்தாள்.அவளைத் தூக்கி நிறுத்தி மார்போடு அணைத்து தலையை பாசமாக தடவி அழுதை என்ற போது „அப்பா நீங்கள் தெய்வத்துக்கும் மேல் அப்பா...அப்பா விம்மினாள்“செல்வராணி. நினைவுகளின் சங்கமத்திலிருந்து அன்னபூரணி மீண்டாள்.சுவரோடு சாய்ந்திருந்த அன்னபூரணி எழுந்து போய் பந்தலுக்குள் கணவனைத் தேடினாள்.பந்தலுக்குள் கணவன் இல்லையென்றதும் அறையின் கதவை மெதுவாக தள்ளினாள்.

கணவன் கட்டிலில் சாயந்தபடி படுத்திருந்தார்.கணவனுக்கருகில் கட்டிலில் மெதுவாக இருக்க பரஞ்சோதி அவளை அணைத்துக் கொண்டே புன்முறுவல் பூத்தார்.

அந்த அணைப்பிலும் சிரிப்பிலும் எப்பொழுதும் வாடாத காதல் தெரிந்தது.

SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main



India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.





# ஐயோ அப்பா! வெடிக்கிறார். எங்களாலை ஏலாது அம்மா!

மாதவி

நம் தாய்மொழியாக தமிழ் இருந்தாலும், நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர் நாம் பேசும் விதம் பலருக்கு புரியாமலே இருக்கின்றது. புலம்பெயர் நாடுகளில் இருந்து தாயகம் சென்று விடுமுறையைக்களிக்கும் பலர் இதனை நன்கு உணர்வார்கள்.
யாரும் உறவினர் வீட்டுக்கு வருவதாகச் சொல்லிவிட்டு நாம் தாமதம் ஆனால், அவர்கள் தொலைபேசியில் ஏன் இன்னும் வரவில்லை, என்று கேட்டால், 'பதில் நாம் இதோ இறங்குகின்றோம் என்று பதில் கொடுப்போம்.
அவர்கள் தலையைப் பிச்சுக்கொள்வார்கள். இவர்கள் வெளிநாட்டில் இருந்து வந்து மாமரத்தில் ஏறி மாங்காய் புடுங்குகின்றார்களா? அதென்ன இறங்குகின்றோம்! என்று சொல்கிறார்கள், என யோசிப்பார்கள்.

அதுபோல் சொல்லாமல் கொள்ளாமல் உங்களிடம் ஒரு விருந்தினர் வந்தால் உடன் அட அடித்துப்போட்டு வந்திருக்கலாமே என்பர். அவர்கள் முழிப்பார்கள், ஒருவருக்கு அடித்துப்போட்டு எப்படி அவர் வீட்டு முற்றம் மிதிப்பது என்று!
இப்படியாக எங்கள் தமிழ் இடம் சூழல் இவற்றிற்கு அமைவாக மாறுகின்றது. அது மட்டுமன்றி வீட்டில் நாம் பிள்ளைகளுக்கு முன்னால் கதைக்கும் தமிழ் பாதி கவுண்டமணியும் செந்திலும் வடிவேலும் கதைக்கும் கதையைவிட உசத்தி.
அப்பா ஒன்றும் சரியாச் செய்வில்லை என்றால் அம்மா சொல்வா அப்பாவுக்கு தலைகளண்டு போச்சு என்று! இதன் நேரடி அர்த்தம் விபரீதமானது. ஆனால் இதனையும் பிள்ளைகள் பொறுக்கி வைப்பார்கள். அம்மா தேனீர் ஊற்றும் போது சீனிக்குப்பதிலாக உப்பைப் போட்டால் அப்பா சொல்வார் 'அம்மாவிற்கு வர வர கண்தெரியவில்லை' என்று.
இப்படி சில பேச்சுக்கள் குறுகிய நேரத்துள் தீப்பிடிக்கும் குச்சியாக குறுகியதாக காரமாக அமைந்திருக்கும். ஆற அமர இருந்து காதலித்த காலத்தில் கதைத்தது போன்று எவரும் இப்போ கதைப்பதில்லை.

ஒரு நாள் விடுமுறை என்றால், நான் என்ன செய்லாம் என்று கணவனும், தான் என்ன செய்யலாம் என்று மனைவியும், தாம் என்ன செய்யலாம் என்று பிள்ளைகளும் தனித்தனியாக திட்டமிடுவார்கள்.
விடுமுறை வந்ததும் வீடு வீடாக இருக்காது. ஒவ்வொருவரும் தாம் நினைத்தது நடக்கவில்லை என்று ஒருவர் மீது ஒருவர் பாய்து வெடித்து சிதறுவார்கள்.
இதில் அப்பா எப்பவுமே உப்படித்தான்! என்று அம்மாவும், இந்த மனிசியோடோ ஒன்று செய்ய ஏலாது என்று, கணவனும் வெடி கொழுத்தியபடியே இருக்க, பிள்ளைகளுக்கு தலைவெடிக்கும். இதில் எத்தனை வெடி பாத்தீர்களா? சரி அதில் ஒரு வெடி பற்றி இப்ப சொல்கின்றேன் பாருங்கள் இது உண்மைச்சம்பவம்.
3 நாள் தொடரந்து விடுமுறை. அதாவது திங்கள் விடுமுறை வந்தாலோ இல்லை வெள்ளி விடுமுறை வந்தாலோ, வேலை இடத்தில் லீவு கேட்டு நாம் கெஞ்சத்தேவை இல்லை. அப்படி வேலை செய்ய வேண்டும் என்றாலும் வேலை தருபவர்கள்தான் கெஞ்சுவார்கள். எனவே சுலபமாக வருடத்தில் இடை இடையே தலைகாட்டும் இப்படியான தொடர் விடுமுறையை குடும்பமாகப் பலர்களிப்பார்கள்.
இம்முறை காட்டுக்குள் சென்று பாபிக்கியூ போடுவதாக திட்டம். அப்பா இறச்சி, அடுப்பு, கரி, கரி எரியாவிட்டால் காஸ், அடுப்பு இப்படி எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு காட்டுக்கு போய்விட்டார்.
அம்மா யாருடையதோ திருமணம் வருகிறது என்று சட்டைதைக்க கொடுக்கச் சென்றுவிட்டா. பிள்ளைகள் அப்பாபோய் இடம் பிடிக்கட்டும் என்றுவிட்டு திரும்பி கட்டிலில் படுக்கின்றார்கள்.

அப்பா காட்டுக்குள் இடம் பிடித்து, இறச்சி எல்லாம் மெல் மெல்ல வாட்டத் தொடங்கி விட்டு வீட்டுக் தொலைபேசியில் அழைப்பக் கொடுக்கிறார். பிள்ளைகள் நால்வரும் கோட்டாவியோடு பதில் சொல்கிறார்கள். அம்மா இன்னும் வரவில்லை, வந்ததும் வாறோம் என்று சொல்லிமுடிப்பதற்குள், அப்பா டேய்! அம்மா வார நேரம் வரட்டும், அவவிற்கு வரத்தெரியும். நீங்கள்தான் ஆசைப்பட்டனிங்கள் இறச்சி வாட்ட, உடன் வாங்கோ என்றுவிட்டு போனை வைத்திட்டார் அப்பா.

பேடியங்கள் நால்வரும் வெளிக்கிட்டு வாசலில் வர பக்கத்த வீட்டு பையன் அப்பதான் தன்ர மாமா தந்தவர் என்று ஒரு புது ஐபோனைக் காட்டினான்.
ஐயோ தொலைஞ்சுது நேரம். எப்படி 2 மணித்தியாலம் போச்சு என்ற தெரியவில்லை. ஓட்டமும் நடையுமாய் காட்டுக்கு போனார்கள்.. அங்கு இறச்சி வாட்டி வாட்டி அது கரியாய் போச்சு. 5 நிமிடத்தில் வருவியள் என்று நான் துடிச்சு, துடிச்சு செய்ய, நீங்கள் என்று இடியாக் கத்தினார் அப்பா.
பக்கத்தில் காஸ் அடுப்பு இருந்தது. அது நெருப்பு போதவில்லை என்றால், பிள்ளைகளுக்கு துரிதமாகச் செய்து கொடுக்க வசதியாக அப்பா செய்த ஒரு ஏற்பாடு.

அப்பாவின் பேச்சு கூடக் கூட! பிள்ளைகள் நால்வரும் ஒதுக்குபுறமாகச் சென்றனர்.

அம்மா இப்போதான் தனது மைத்துணியுடன் வீட்டுக்குள் நுளைகிறா! தொலைபேசி அடிக்கிறது. இவங்கள் பிள்ளைகள் தான் என்று சொல்லிக்கொண்டு ஓடிப்போ எடுக்கிறா.


அம்மாவுக்கு தலைசுத்தியது. மறுபக்கத்தில் பிள்ளைகள் அம்மா அப்பா வெடிக்கிறார். எங்களாலை ஒன்று பண்ணமுடியாது. உடன் வாங்கோ.! பக்கத்தில் மைத்துணி, அட என்ன நடந்தது என்ற கேட்க, சற்று மயக்கத்தடனேயே ஐயோ அவர் வெடிக்கிறாராம், பிள்ளைகளால் ஒன்றும் செய்முடியலையாம், என்று கத்துகினம். என்று சொல்லிக்கொண்டு, கதைக்கேலாதாம் நீங்கள் கதையுங்கோ! என்று போனைக் கொடுக்க, மைத்துணிக்கும் நடுக்கம் பிடித்திட்டுது. அட பாவிமனுசன் வெடிக்கைக்கை என்பிள்ளைளள் பக்கத்தில் நிக்கினம் அதுகளுக்கும் ஏதுமாச்சோ! என பதட்டதுடன் பிள்ளை விலகி நில்லுங்கோ! எப்படி காஸ் வெடிச்சது சொல்லு! என்று சொல்ல

பிள்ளை காசும் இல்லை, நெருப்பும் இல்லை, நாம் பிந்தி வந்திட்டோம் என்று அப்ப வெடித்து தள்ளுகிறார் என்றான் ஒரு பிள்ளை.

அட வீடில் அப்ப வெடிக்கிறார், அம்மா வெடிக்கிறார், தலைகழண்டு போச்சு. இவை எல்லாம் இடம் மாறி வரும்போது உயிரே போகும் அல்லவா.

**பேச்சுத்தமிழ் அதிலும் கொஞ்சம் அக்கறை காட்டுவோம் கிளிப்பிள்ளைகள் வீட்டில் இருக்கிறார்கள் என்பதனை மறந்து விடவேண்டாம்.**


VTM MiniMarkt und Kiosk



துரித பணமாற்றுச் சேவை!




உலருணவுப் பொருட்கள்
கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்

இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகஙளுக்கும் அதிகூடியவீதத்தில் பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள் NSB,BOC,HNB போன்ற வங்கிகளில் நேரடியாகவும் மற்றும் அனைத்து வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.

Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de
Neudorferstr 173
47057 Duisburg
inh:Pon.Vijayakumar

Buschhausener Str.16/18
46049 Oberhausen
Tel:0208 468 444 21



# இங்கிலாந்தின் முதலாவது போர் விமானத்தின் பெயர் யாழ்ப்பாணம்!


22, 1915, by the Ceylon Jaffna Tamils of Malaya, and collected by Mr. W. Wijea Retnam, Railway Office, Kuala Lumpur.

இங்கிலாந்தின் முதலாவது போர் விமானத்தின் பெயர் யாழ்ப்பாணம் என்பது ஆகும்.இப்போர் விமானத்தை உருவாக்குகின்றமைக்கு யாழ்ப்பாண தமிழர்கள் வழங்கி இருந்த நிதிப் பங்களிப்புக் காரணமாகவே இப்பெயர் சூட்டப்பட்டு இருக்கின்றது.

இப்போர் விமானம் குறித்த தகவல்கள் மிகவும் சுவாரசியமானவை. முன்னைய கால விமானங்கள் 100 குதிரை வலு என்ஜின்களுடன் இயங்கி வந்தன. இவை மரம், துணி, வயர்கள் போன்றவற்றால் ஆக்கப்பட்டு இருந்தன.

முதலாம் உலகப் போர் நடைபெற்ற காலம். எதிரிகளை வேவு பார்ப்பதற்கும், குண்டு வீசுவதற்கும் சிறந்த பொறியாக விமானம் கண்டு கொள்ளப்பட்டது. ஆனால் மேற்சொன்ன ரக விமானங்கள் அவற்றின் வடிவமைப்புக் காரணமாக எளிதில் தாக்குதல்களுக்கு உள்ளாகின.

போர் விமானத்தை உருவாக்க தீர்மானித்தது இங்கிலாந்து அரசு. ஆனால் இதை உருவாக்குவதற்கான பணம் இன்றி திணறியது. இந்நிலையில் காலனித்துவ நாடுகளுக்கு செய்தி அனுப்பியது.

மலேசியாவை அப்போது நிர்வகித்து வந்தவர் டாக்டர் அல்மா பேக்கர். வரிகள் மூலம் தேவையான பணத்தை பெற முடியாது என்று உணர்ந்து இருந்தார். வித்தியாசமான பிரசார உத்தி ஒன்றை தொடங்கினார். போர் விமானத்துக்கு உதவி செய் என்பது இப்பிரசாரம். அதிக பணம் தருகின்றவர்கள் முன்மொழிகின்ற பெயர் இவ்விமானத்துக்கு சூட்டப்படும் என்று உறுதிமொழி வழங்கி இருந்தார்.

யாழ். மல்லாகத்தை பூர்வீகமாக கொண்ட சுப்பிரமணியம் என்பவர் மலேசியாவில் உயர் தொழில் வகித்து வந்தார். இவரை இப்பிரசாரம் மிகவும் கவர்ந்தது. மலேசியாவில் குடியேறி இருந்த யாழ்ப்பாணத்தார்களிடம் இருந்து நிதி சேகரித்து கு.நு.2டி ரக விமானம் ஒன்றை பரிசாக இங்கிலாந்து அரசுக்கு வழங்கினார்.

அன்றைய நாளில் 2250 ஸ்ரேர்லிங் பவுண்டு வரை பணம் சேர்க்கப்பட்டு இருந்தது. இவ்விமானம் இரட்டைச் சிறகுகள் கொண்டிருந்தது. இரண்டு பயணிகளை கொண்டு செல்லக் கூடியதாகவும், குண்டு வீசவும், துப்பாக்கிச் சமரில் ஈடுபடவும் வேண்டிய வசதிகளை கொண்டதாகவும் இருந்தது. பிரித்தானிய அரச விமான தொழில்சாலையில் தயாரிக்கப்பட்டது.

ஜேர்மனியர்களின் குண்டு மழைகளுக்குள் தீவிரமாக நுழைந்து பேரழிவுகளை ஏற்படுத்தியது. முதலாவது உலக மகாயுத்தத்தின் பின் அருங்காட்சி அகத்தில் வைக்கப்பட்டு உள்ளது.


உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்




ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புகள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

வேலை 4U
Job for Sales assistant

இங்கிலாந்தில் கீழ் குறிப்பிட்ட இடங்களில்
Sale Assistant வேலைகளுக்கு இடம் உண்டு
தேவையான தகமைகள்
ஆங்கில அறிவு, இவற்றுடன் அன்பு, நேர்மை
ஆகிய தகமைகள் தேவை!
உங்கள் உழைப்புக்கு ஏற்ப பதவி உயர்வுகள் கிட்டும்.
யேர்மனியில் இருப்போரும் தொடர்பு கொள்ளலாம்.




Areas: Gloucester-Coventry
Birmingham- West Midlands
தொடர்புகளுக்கு: M&M Family One Ltd
Tel: 077 80 55 4919 / 074 29 31 5993



ஆதிவாசி லீடர் கனக துர்க்கா ஜாரி
பண்டித் லட்சுமன் ராஜ்



கருமாரி அம்மன் துணை
முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தை கணிப்பார்
அத்தோடு கை ரேகையும் பார்க்கப்படும்
FACE READING
வியாபாரங்கள் - எதிரிகள் - உடல்நிலை - வேலை - குழந்தையின்மை
திருமணம் - பணம் - குடிபோதை - காதல் - விவாகரத்து
வழக்குகள் - கண்திருஷ்டி - குடும்ப ஒற்றுமை - படிப்பு
வாகனப் பொருத்தம் - மற்றும் பல... பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்



பேசும் மொழிகள்: தமிழ்
வாரத்தில் 7 நாட்களும் 10:00 முதல் 20:00 மணி வரை சந்திக்கலாம்
0231-33897290
0152-12016356 // 0152-13946833
Adlerstr. 30, 44137 Dortmund - Germany

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de




# யேர்மனி– மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா





கையெழுத்துப் பிரதியொன்று கணனித் திரையேறியது. சொல்லடுக்குக் கொண்டு கைநூலாய்த் தடம் பதித்தது. இன்று வெள்ளி விழாக் கண்டது. 14.01.1990 பொங்கல் தினமன்று கையெழுத்துப் பிரதியாக ஆரம்பிக்கப்பட்டது தான் மண் சஞ்சிகை. புலம்பெயர்ந்த தமிழ் மக்களும், அவர்தம் பிள்ளைகளும் தாய்மொழியின் சிறப் பையும் பற்றையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்குடனும், பிறந்த மண்விட்டு புலம்பெயர் மண்ணை வந்தடைந்தாலும் சொந்த மண்ணின் காந்தக் கவர்ச்சியை கழட்டிவிடாது போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனும் ஆரம்பித்த மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா 02.05.15 அன்று ஜேர்மனி டுயிஸ்பேர்க் நகரிலே மேடை கண்டது. பிரதம் விருந்தினராக டுயிஸ் பேர்க் மாநகரசபையின் தலைவர் Volker Mosblech அவர்களும், சிறப்பு விருந்தினராக ஜேர்மனி- லண்டன் இரங்கும் இல்லத் தாபகர் சிவனடியான் சிறீபதி அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மண்டபம் நிறைந்த கூட்டத் துடன். மண் சஞ்சிகையில் தொடர்ந்து எழுதி வரும் எழுத்தாளர்களான திருமதி. ஜெயா நடேசன், திருமதி. மீனா சிவலிங்கம் ஆகியோர் குத்துவிளக் கேற்ற விழா ஆரம்பமாகியது.

அதைத் தொடர்ந்து இலங்கையின் போராட்ட காலங்களில் இறந்த சகல மக்களுக்கும், உலகில் இயற்கை அனர்த்தங்களால் உயிர் இழந்த மக்களுக்கும், அவர்களின் ஆத்மா சாந்தி வேண்டியும், யாவரும் சகோதரத்துவமான முறையில் நல்வாழ்வு வாழ வேண்டும் என்றும், இனப்பிரச்சினை காரணமாக இறந்த சகல பொது மக்களுக்கும், ஈழத்தமிழ் மக்களுக்காகவும், தமிழ்மொழி, இன வளர்ச்சிக்காகவும், தம் முயிர்களைத் தியாகம் செய்த அனைவருக்கா கவும் ஆத்ம சாந்தி வேண்டியும் ஒரு நிமிட மௌன அஞ்சலி செய்யப்பட்டது.

செல்வி ரஜீவா சிறிஜீவகன் தமிழ்மொழி வாழ்த்து இசைக்க, திருமதி இராஜேஸ்வரி சிவராசா வரவேற்புரை நிகழ்த்தினார் . அதன்பின் பின் மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் மண்ணின் மகிமையை போற்றிப் பாதுகாத்து வருபவருமான திரு.வ. சிவராசா தலைமை உரை நிகழ்த்தினார். ஆரம்பம் இருந்து இன்றுவரை இச்சஞ்சிகை இரு மாதங்களுக்கு ஒரு சஞ்சிகையாக வெளி வருவதற்குத் தான் பட்ட கடினங்களும் அதற்காக ஒத்துழைப்புத் தந்தவர்கள் பற்றியும் ஆரம்ப மிருந்து விளக்கமாக எடுத்துக் கூறினார். உள்ள வர்களிடம் இருந்து பணம் பெற்று இல்லாத ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கும் தனது பணிபற்றி யும், அதனை இதுவரை சுமார் 40 ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் காப்பகங்களுக்குக் கொடுத்து உதவினார் என்பதனையும், அவர்களுக்கு அனுப்பிய பறறுச் சீட்டையும், அவர்கள் பெற்றுக் கொண்ட அத்தாட்சிக் கடிதத்தையும் வெளிப் படையாக மண் சஞ்சிகையில் பிரசுரிப்பது பற்றியும், 31-12-2014வரை 43.997-35DM, 1.500-00 பவுண்ஸ், 45.436-50 Euro தன்னால் இலங்கை ஆதரவற்றோர் இல்லங்களுக்கு அனுப்பப்பட்டது என்னும் உண்மையையும் விளக்கமாக எடுத்துரைத்தார். வந்திருந்தோர் அனைவரும் உவகை கொள்ள இவ்வுரை சிறப்பாக அமைந் திருந்தது. ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் மண் சஞ்சிகை ஆசிரியருக்கு மானுடவாரிதி என்னும் பட்டம் வழங்கி பரிசில்அளித்தனர்.

**கௌசி (மண்ணின் எழுத்தாளர், வாசகர்)**


திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிராரர்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி




சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450



கம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆயத் தேர்த் திருவிழாவில் எமது ஸ்தாபனாத்தின்
மாபெரும் மலிவு விற்பனை! 21.06.2015
15 வது ஆண்டு நிறைவான சேவை
Kaneen Electronics
Internet-sat,
Receiver,Camera-Alam
கருவிகள் மலிவு விலையில்
பெற்று பயனடையுங்கள்
அனைத்து தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா!
மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள்
ஒளிபரப்பவேண்டுமா!எம்மை நாடுங்கள்.
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal
www.kaneenelectronics.de








பேராசிரியர் அ.சண்முகதாஸ்

# இரவுச் சாப்பாடு வருகின்றது

ஆபிரக்கக் கண்டத்திலே பல்வகை மக்கள் வாழ்கிறார்கள். மனிதரைச் சாப்பிடுபவர்களும் வழ்ந்துள்ளனர். அங்கு பெருந்தொகை மொழிகளும் பேசப்படுகின்றன.

அம் மொழிகளின் பண்புகளும் அவை பேசப்படும் முறைகளும் மொழியியலாளர்களுக்கு வியப்பளிப்பானவையாகவும் உள்ளன.

நாம் 'அ' என்று ஒலிக்கும்போது நெஞ்சிலிருந்து வரும் காற்றினை வெளியே தள்ளுகிறோம். ஆனால் ஆபிரிக்காவில் சில மொழிகளில் 'அ' என்பதனை ஒலிக்கும்போது காற்றினை உள்ளே இழுக்கின்றார்கள். ஒரு தடவை ஒலித்துப் பாருங்கள். அவ்வளவு எளிதானதல்ல என்பதை நீங்களே உணர்வீர்கள்.

முழவிலே ஒலித்துப் பேசுகின்ற மொழி வழக்கும் ஆபிரிக்காவிலே உண்டு. இத்தகைய வியப்பான பண்புகளையுடைய மொழிகளை ஆராய்வதற்காக 18ஆம், 19ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளிலே பல மொழியியல் ஆய்வாளர்கள் அங்கு சென்றனர். முன்னர் ஒரு தடவை ஓர் ஆய்வாளர் ஆபிரிக்காவில் ஓர் ஊரிலே சென்று அங்குள்ள மொழிபற்றிய ஆய்வுத் தரவுகளைப் பெற்றுக்கொண்டு அன்று இரவு அடுத்த ஊரிலே தங்கி அடுத்த நாள் மொழியாய்வு செய்வதற்காக ஒரு வழிகாட்டியுடன் மாலை நேரம் புறப்பட்டுச் சென்றாராம். அவர் ஊரைக் கடக்கின்ற வேளையிலே அவர் நின்று புறப்பட்ட ஊரிலிருந்து முழவொலி கேட்டது. உடனே மொழியாய்வாளர் தன்னுடைய வழிகாட்டியிடம் அந்த முழவொலி பற்றிக் கேட்டார்.

அதற்கு அந்த வழிகாட்டி "நீங்கள் நின்ற ஊரவர்கள் நீங்கள் செல்லும் அடுத்த ஊரவர்களுக்குத் தகவல் அனுப்புகிறார்கள்" என்றான்.

"என்ன தகவல் அனுப்புகிறார்கள்?" என்று கேட்டார் ஆய்வாளர்.

"அடுத்த ஊரவர்களுக்கு, உங்களுடைய இரவுச் சாப்பாடு வருகிறது என்னும் தகவலை அனுப்புகிறார்கள்" என்றான் வழிகாட்டி.

அடுத்த ஊரில் உள்ளவர்கள் மனிதரை உண்பவர்கள் என்பது மொழி ஆய்வாளருக்குத் தெரியாது.







# வற்றாத நிலாவரைக் கிணறு பற்றிய உண்மைகள்



பேராசிரியர் இரா.சிவசந்திரன்

புத்தூர் நிலாவரைக் கிணறு பற்றி எமது மக்களிடையே பாரம்பரிய கதைகள் பல வழக்கிலுள்ளன. " ஆழங்காண முடியாத கிணறு இது. "நிலாவரைக் கிணற்றில் எலுமிச்சம் பழம் ஒன்றை போட்டால் அது கீரிமலைக் கேணியில் வந்து மிதக்கும்.." இப்படியாகப் பல கதைகள் மக்கள் வாய்மொழி மூலம் பரப்பப்பட்டு வருகின்றன. அக் கால மக்கள் தம் பட்டறிவால் பெற்ற சில உண்மைகள் அல்லது தகவல்கள் மிகைப்படுத்தப்பட்டு அல்லது திரிக்கப்பட்டு பலராலும் வழிவழியாகப் பேசப்பட்டு வருகின்றன. இன்று நாம் இதற்கு அறிவியல் ரீதியான விளக்கத்தை தேடுவது அவசியமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட, மன்னாரிலிருந்து பரந்தன் முல்லைத்தீவை இணைக்கும் கோட்டிற்கு வடக்காக உள்ள பிரதேசங்கள் யாவும் மயோசின் காலம் என்று புவிச்சரிதவியலாளர்களால் வழங்கப்படுகின்ற சுண்ணக்க ற்பாறைகள் உருவான காலத்தில் தோன்றியவையாகும். அக்காலத்தில் இப் பிரதேசங்கள் கடலிலிருந்து மேலுயர்த்தப்பட்டன. இதனாலேயே தான் யாழ்ப்பாணப் பகுதிகளில் கிணறு தோண்டும் போது சங்கு, சிப்பி,போன்ற கடல் வாழ் உயிரினங்களின் சுவடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. இக்கடல் உயிரினச்சுவடுகள் நீண்ட காலமாக இடம்பெற்ற அமுக்கத்தாலும் பௌதிக இரசாயன மாற்றங்களினாலும் சுண்ணப்பாறைகளாக உருமாற்றம் பெற்றன. சுண்ணப் பாறைகள் வன்னிப்பிரதேசத்தில் மிக ஆழத்திலும் யாழ்ப்பாணத்தின் வடகரைப்பகுதிகளில் குறிப்பாக பலாலி, தெல்லிப்பளை. காங்கேசன்துறைப் பகுதிகளில் மேற்பரப்பிலும் காணப்படுகின்றன. இப்பாறைப்படைக்கு மேல் மண் படிவுகள் சில அடி முதல் 30 அடி வரையான கன பரிமாணத்தில் படிந்துள்ளன. ஒரு அங்குல மண் படிவு உருவாவதற்கு குறைந்தது 100 வருடங்கள் செல்லும் என புவிசரிதவியலாளர்கள் கணிப்பிட்டுள்ளனர். ஒழுங்குமுறையற்று குடாநாட்டு மண் வளத்தை சுரண்டுவோர் இதனைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுண்ணக்கற்பாறை அடிப்படைப் பாறையாக அமைந்திருப்பதனாலேயே இங்கு நாம் தரைக்குக்கீழ் இருந்து கிணறுகள் மூலம் நீரைப்பெற முடிகின்றது. இங்கு ஆதிகாலம் முதல் குடியிருப்புகள் தோன்றுவதற்கும், வரண்ட பிரதேசமாக இருப்பினும் நெருக்கமாக மக்கள் வாழ்வதற்கும்இ நீர் இறைப்பை நம்பிய விவசாய நடவடிக்கைகள் மேலோங்கியிருப்பதற்கும் இங்கு தரைக்கீழ் நீரை இலகுவில் பெறக்கூடியதாய் இருந்தமையே காரணமாகும்.

புவிச்சரிதவியலாளராலும் புவி வெளியுருவவியலாளராலும் சுண்ணக்கற்பாறை பிரதேசங்களிற்குரிய பல நிலவுருவங்கள் அடையாளம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றே தரைக்கீழ் நீரோடும் குகைகளின் தோற்றமாகும். மழையால் பெறப்படும் நீர் நிலத்தினுள் ஊடுருவிச்சென்றுஇ கடினமான அடித்தள சுண்ணக்கற்பாறைப் படைகளில் தேக்கம் பெற்று தரைக்கீழ் நீராகக் காணப்படுகின்றது. கிணறு தோண்டும் போது இத் தரைக்கீழ் நீரே ஊற்றாக கிணற்றுக்குள் வந்து தேங்குகின்றது.

இவ்வாறான ஊற்றுக் கண்கள் போன்று, உள்ளே அமைந்துள்ள சிறு துளைகள், தொடர் துளைகள், வெடிப்புகள் என்பன நீண்ட காலமாக இடம்பெறும் இரசாயன அழிதலுக்கு உட்பட்டு பெரிய குகைகளாக உருமாறிவிடுகின்றன. இக் குகைகள் சில அடி முதல் பல மைல் நீளம் வரை ஒரே தொடராக தரைக்குக் கீழே அமைந்திருக்கின்றன. குகை மேலும் மேலும் அரிக்கப்பட அதன் பரிமாணம் அதிகமாவதால் குகையின் மேற்பரப்பு இடிந்து வீழ்கின்றது. இவ்வாறு உருவான ஒரு குகைப்பள்ளமே நிலாவரைக்கிணறு ஆகும்.

மேற்பரப்பு இடிந்து வீழ்ந்ததினால் உருவாகிய குகைப்பள்ளங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல பகுதிகளில் காணப்படுகின்றன. குரும்பசிட்டி பேய்க் கிணறு,புன்னாலைக்கட்டுவன் குளக்கிணறு, அல்வாய் மாயக்கை குளம், கரவெட்டி குளக்கிணறுஇ ஊறணி வற்றாக்கிணறு. கீரிமலைக்கேணி, யமுனா ஏரி போன்றவையும் நிலாவரைக்கிணறு போல் உருவானவையாகும். கீரிமலைக் கேணியின் தென்கீழ் மூலையில் ஆள் ஒருவர் உள்ளே நுழைந்து செல்லக்கூடிய அளவுக்கு குகை ஒன்று காணப்படுவதை இன்றும் காண முடியும். அதனூடாகவே கேணிக்கு நல்ல தண்ணீர் வருகின்றது.


இவ்வாறான கிணறுகளை நாம் நீர்ப்பாசனத்திற்காகவும். மழை நீரை தரைக்குக் கீழே சேமிப்பதற்கான மீள்நிரப்பியாகவும் பயன்படுத்தலாம். நிலாவரைக்கிணறு உள்ளிட்ட இவ்வாறான கிணறுகளிற் சில நீண்டகாலமாகப் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எழுபதுகளில் நீர்வள வடிகாலமைப்புச் சபையினர் இவ்வகைக் கிணறுகள் பற்றி சில ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். நிலாவரைக்கிணற்றில் மேற்கொண்ட ஒரு ஆய்வின்படி 10 மணித்தியாலங்களில் 30.000 40,000 கலன் நீர் தோட்டப் பாசனத்திற்காக அக் கிணற்றில் இருந்து எடுக்கக்கூடிய தன்மை வெளியிடப்பட்டது. மேலதிகமாக நீரை இறைப்போமாயின் உப்பு நீர் மேலோங்கிவரும் ஆபத்து உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளம் பற்றிய சில ஆய்வுகள், இங்குள்ள தரைக்கீழ் நீர்ப்பீடம் கடினமான உப்பு நீரின் மேல் நன்னீர் வில்லை வடிவில் மிதப்பதை உறுதிசெய்துள்ளன. எனவே நல்ல நீர் கிடைக்கும் கிணறுகளில் இருந்து அதிகளவு நீரை வெளியேற்றுவோமாயின் அவை உப்பு நீர்க்கிணறுகளாக மாறிவிடும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக்குக் கீழாக அமைந்துள்ள சுண்ணக்கற் குகைகள் மூலம் தரைக்கீழ் நீரின் பெரும்பகுதி வீணாகக் கடலைச் சென்றடையும் நிலை பல இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான குகைகள் கண்டறியப்பட்டு அவற்றின் உள்ளே அணைகளைக் கட்டி அல்லது நன்னீர் தேக்கங்களை ஏற்படுத்தி நிலத்தடி நீர் கடலினுள் செல்வதை தடைசெய்தல் வேண்டும். பிரதேச அபிவிருத்திக்கு திட்டமிடுவோர் இது பற்றி அக்கறை கொள்ளுதல் வேண்டும். யாழ்ப்பாணக்குடாநாட்டின் வளமும் வாழ்வும் இத் தரைக்கீழ் நீர் வளத்தின் கொள்ளளவை அதிகரிப்பதிலேயே பெரிதும் தங்கியுள்ளது.




யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main





## தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா
# களைத்துவிட்டாரா கலக்கப்போகிறாரா?

சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து விடுதலையாகி தமிழக முதல்வராக 5வது முறையாக ஜெயலலிதா இன்று (23.05.2015) பதவியேற்றுள்ள போதும் அவரிடம் முன்னர் இருந்த அந்த கலகலப்போ, கம்பீரமோ தற்போது தென்படவில்லை. தனியொரு பெண்ணாக நின்று, வாழ்க்கையில் பல்வேறு காலகட்டங்களிலும் பல அவமானங்களையும், கஷ்டங்களையும் தாண்டி மேலே வந்த ஒரு இரும்பு மனுஷி ஜெயலலிதா.

அந்த துன்பங்களே அவரை கடுமையானவராகவும், அவமானப்படுத்தியவர்களை காலில் விழ வைக்கும் மனப்பாங்கையும் அவருக்கு ஏற்படுத்தியது என்றால் மிகையாகது. அத்தனை ஆண்களையும் சமாளித்து, எம்ஜிஆருக்குப் பிறகு ஒரு அஸ்திவாரமாக இருந்து ஒட்டுமொத்த கட்சியையும் தாங்கிப் பிடித்து வருபவர் அவர். எத்தனையோ குறைகள் அவரிடமும் இருந்த போதிலும் கம்பீரம், போராடும் குணத்திற்கு பெண்களுக்கு எடுத்துக்காட்டாக அவரை தாராளமாக கூறலாம்.

அப்படி எந்த சூழ்நிலையிலும் மனம் தளராமல் இருந்து வந்த ஜெயலலிதாவினை இந்த சொத்துக் குவிப்பு வழக்கும், அதனால் ஏற்பட்ட மன உளைச்சல்களும் புரட்டித்தான் போட்டுவிட்டன.

என்னதான் விடுதலையாகி, தமிழக முதல்வராக பதவி யேற்றுள்ள ஜெயலலிதாவிற்காக அதிமுகவினர் முகத்தில் ஆனந்த தாண்டவம் ஆடினாலும் கூட ஜெயலலிதா முகத்தில் பெரிய அளவில் சந்தோஷம் இருந்ததாக தெரியவில்லை.

நடையிலும், முகப் பொலிவிலும் அவர் தளர்ந்து காணப்பட்டார். பேசுவதிலும் கூட பழைய மாதிரி கம்பீரம் தெரியவில்லை. அவரது நடையிலும் கூட அதிக நிதானம், ஒரு சோர்வு காணப்பட்டது. வயது ஒரு காரணம் என்றாலும், அவரும் மன உளைச்சல்களாலும், வீட்டினுள்ளேயே அடைந்து கிடந்த காரணத்தினாலும், வழக்கு கொடுத்த அழுத்தத்தினாலும் உடைந்து போய்தான் உள்ளார் என்பது போலவே தோன்றியது அவரது முகபாவனைகள். மருந்துக்குக் கூட இயல்பான சிரிப்பினை அவரது முகத்தில் காணமுடியவில்லை. வலிந்து சிரிப்பினை வரவழைத்த பாவனையே தோன்றியது குறிப்பிடத்தக்கது.





கவலை என்னும் நோய் வந்தால் இரும்பு கூட உருகித்தான் போய்விடும் போல!

குரலில் கம்பீரம் குறைந்த ஜெ... தளர்ந்து விட்டாரா "இரும்பு மனுஷி"? களைத்து விட்டாரா கலக்கப்போகிறாரா?

தமிழக முதல்வராக ஜெயலலிதா பதவியேற்பு விழாவில் நடிகர்கள் ரஜினிகாந்த், சிவக்குமார், பிரபு, கார்த்தி, ராமராஜன், செந்தில், அர்ஜுன், விவேக், தியாகு, குண்டு கல்யாணம், செல் முருகன், ஆனந்தராஜ், விக்ரம் பிரபு.நடிகைகள் எம்.என்.ராஜம், வெண்ணிற ஆடை நிர்மலா, சச்சு, குயிலி, விந்தியா, பாடகி பி.சுசீலா. படத்தயாரிப்பாளர்கள் ஏ.வி.எம். சரவணன், கலைப்புலி தாணு, தயாரிப்பாளர் சங்க நிர்வாகிகள் கதிரேசன், சிவா, டைரக்டர்கள் ஆர்.வி.உதயகுமார், விக்ரமன், மனோபாலா.இசையமைப்பாளர் இளையராஜா, மதுரை ஆதினம், ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர் சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445- 0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Thushi -Deko
1989 முதல் இன்றுவரை தொடரும் எங்கள் சேவை!
உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....
Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram






Elephant Stage



Thushiyanthan.
Thiruselvam
Tel:02305 - 85945 - 0176 608 108 13

Milin Impex GmbH
Dortmund நகரில்
இலங்கையர்களுக்கான எவ்வித உணவுப்பொருட்களையும்
மொத்தமாகப் பெற்றுக்கொள் எமது இணையத்தளத்தை நாடவும்
Web :www.milinimpex.de

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen





Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288



# எப்பவுமே நாம மாஸ் தான் பாஸ்

## வெங்கட் பிரபு

சென்னை: சூர்யா நடித்துள்ள படத்தின் தலைப்பு மாற்றப்பட்டாலும் எப்பொழுதுமே நாம் தான் மாஸ் என்று இயக்குனர் வெங்கட் பிரபு தெரிவித்துள்ளார். வெங்கட் பிரபு இயக்கத்தில் சூர்யா, நயன்தாரா, பிரேம்ஜி அமரன் உள்ளிட்டோர் நடித்துள்ள படம் மாஸ். அண்மையில் வெளியான படத்தின் டீஸருக்கு ரசிகர்கள் அமோக வரவேற்பு அளித்தனர்.

இந்நிலையில் வரி விலக்கு பெற வேண்டி வெங்கட் பிரபு தனது படத்தின் தலைப்பை மாஸ் என்கிற மாசிலாமணி என்று மாற்றியுள்ளார்.

மாஸ் என்ற தலைப்பு கெத்தாக இருந்தது இது என்ன மாசிலாமணி என ரசிகர்கள் தெரிவித்து வருகிறார்கள். ரசிகர்களை புதிய தலைப்பு கவரவில்லை. இந்நிலையில் படத்தின் தலைப்பு மாற்றம் பற்றி வெங்கட் பிரபு விளக்கம் அளித்துள்ளார்.

மாஸ் படத்தின் தலைப்பு மாற்றப்பட்டதன் காரணம் உங்களுக்கே நன்றாக தெரியும். தலைப்பு எதுவாக இருந்தால் என்ன, எப்பொழுதும் நாம் தான் மாஸ். தலைப்பை போடாமல் தான் படத்தின் பர்ஸ்ட் லுக், செகண்ட் லுக்கை வெளியிட்டோம். படத்தின் தலைப்பு ஒரு பிரச்சனையே கிடையாது என்கிறார் வெங்கட் பிரபு.



சூர்யா படம் அருமையாக வந்துள்ளதற்கு சூர்யா தான் முக்கிய காரணம். அவர் அவ்வளவு எளிதில் திருப்தி அடையாதவர். இதை இன்னும் சிறப்பாக செய்யலாமே என்று கூறி ஒரு காட்சி அருமையாக வரும் வரை ஓயமாட்டார் என்று வெங்கட் தெரிவித்துள்ளார

பேய் நான் மாஸ் படத்தின் திரைக்கதையை கடந்த ஜனவரி மாதம் எழுதத் துவங்கினேன். அப்போது பேய் காமெடி படங்கள் அவ்வளவாக ரிலீஸ் ஆகவில்லை. ஆனால் தற்போதோ ஏகப்பட்ட படங்கள் ரிலீஸ் ஆகியுள்ளது என்று கூறியுள்ளார் வெங்கட்.

மாசிலாமணி படத்தில் சூர்யாவின் பெயர் மாசிலாமணியாம். அதை சுருக்கி அவரது நண்பர்கள் மாஸ், மாஸுன்னு அழைப்பார்களாம். இந்த முக்கிய தகவலை தெரிவித்தது வேறு யாரும் இல்லை பிரேம்ஜி அமரன் தான்.



# இருவர் ஒன்றானால்



## பட ஜோடி நிஜத்திலும் ஒன்றானது

புதுமுகங்கள் நடித்து வெளிவர இருக்கும் இந்த படம் நடிகர் சூர்யாவின் மாஸ் படத்துடன் நேரடியாக மோதுகிறது.இப்போது விஷயம் அதுவல்ல படத்தில் காதலர்களாக நடித்த இந்த ஜோடி படம் முடிவதற்குள் திருமணமும் செய்து கொண்டதாம். நிஜ திருமணத்தை படம் பிடித்து கிளைமாக்ஸ் காட்சியில் சேர்த்து விட்டார்கள், நாயகன் பிரபு நாயகி கிருத்திகா மாலினி இருவரும் படத்தில் பல போராட்டங்களுக்குப் பின் ஒன்று சேர்வார்கள்.

நிஜத்திலும் இந்தஜோடி அப்படிதான் சேர்ந்திருக்கிறது பிரபுவுக்கு சொந்த ஊர் சேலம், கிருத்திகாவுக்கு மதுரை ... படிக்கும் போதே இருவரும் காதலித்து இருக்கிறார்கள். ,தனைத் தெரிந்து கொண்ட இயக்குனர் படத்தில் இருவரையும் காதலிக்க விட்டு நிஜத்தில் திருமணமும்செய்து வைத்து விட்டார். தமிழ் சினிமாவில் இது ஒரு வித்தியாசமான முயற்சி நிஜக் காதலர்களையே படத்தில் நடிக்க வைத்ததால் படம் நன்றாக வந்து இருக்கிறது. இயக்குனர் அன்பு, தமிழ் சினிமாவின் பிரபல இயக்குனர் முருகதாசின் சீடர், அதான் வித்தியாசமா யோசிச்சு இருக்கிங்க. கதைப்படி நாயகன் பிரபு தன்னைத் தேடி வரும் காதல்களை ஏற்றுக் கொள்ளாமல் தானே தேடிச் சென்று கிருத்திகாவை காதலிப்பாராம், நிஜத்திலும் இந்த மாதிரி செஞ்சீங்களா பிரபு? தெரியாத ரெண்டு பேர காதலிக்க வைக்கிறத விட காதலர்களையே நடிக்க வச்ச உங்க ஐடியா சூப்பர் இயக்குனர்.


Hückelhoven நகரில் புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் ஆசியா சமுத்திரம் Parkhofstraße-101



Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயையான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

Ria Money Transfer

VALUTRANS MONEY TRANSFER

துரித பணமாற்றுச் சேவை
Money Transfer

Vijay tv agent

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:0178 60 68 780

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399



கம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆயத் தேர்த் திருவிழாவில் 21.06.2015 எமது ஸ்தாபனாத்தின் மாபெரும் மலிவு விற்பனை! விஜய் TV அட்டைகளை மலிவாகப் பெற்று மகிழுங்கள்


Dortmund நகரில்.... வெற்றிமணி விழா 22.08.2015


உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Emirates
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
VALUTRANS MONEY TRANSFER
துரித பண
மாற்றுச் சேவை!
Further Str. 156
41462 Neuss
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com


இது கனவல்ல
இது அழகிய
சேலைகளின்
சோலை!!!
Jasmine Silk House
புதிய வரவுகள் ராஜ்குரு- ரோஜா சேலைகள்!!!
பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பஞ்சாபிகள்
சிறுவர் சிறுமிகளுக்கான அடைகள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும்
பெற்றிட நாடுங்கள்
HP:0173 1937 325
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Tel:02102 844744
T.Mohanadas


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்க
உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
VALUTRANS MONEY TRANSFER
உரிமையாளர்:
பா. கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


யேர்மனியில் டோட்முட் நகரில் சுவையான உணவிற்கு
தரமும் சுவையும்
தரும்...
CEYLON IMBISS
இலங்கை உணவகம்
திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை
நாட்களில்
16.00 -22.00 மணி வரை
Tel: 0231 72 52 859
Annen Str.1
44137 Dortmund


MAYRAA
The ultimate answer to your desire for
Indian fashion jewellery,
grand designer lehenga's,
salwar's, designer saree's and
original Kanchipuram silk saree's.
Visit us at the Hamm Temple Festival
Heart Says...
உங்கள் இதயம்
விரும்புவது...
MAYRAA
MAYRAA | Rheinische Str. 71a | 44137 Dortmund | Tel.: +49 231 53204210 | Web: www.mayraa.com


யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
StaR - Impex
StaR-Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
எமது விலைச் சலுகைகள் அறிய
எமது இணையத்தளம்
Web.Star-impex.net
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex : Inh :K.Sivasubramaniam
Tel:0231 860 26 96 Fax: 0231/8602698 Kipper Str.3 44147 Dortmund Germany